சுதேசமித்திரன்

3—8—47 விலை 4 அணா.

676

The Swadesamitran ILLUSTRATED WEEKLY





இயற்கையான வாஞ்சையுடன்

அடைய விரும்புதல்

குழந்தைக்கு

ஆரோக்கியத்தைத் தரும்

வுட்வார்ட் வைத்தியனின்

"கிரைப் வாட்டர்"

என்னும் மருந்துத் திராவகம்

WOODWARD'S GRIPE WATER

W. WOODWARD LTD. LONDON. ENGLAND



தலையில்

தலைமயிர் தெரிகிறதா அல்லது அடித்தலை தெரிகிறதா அடித்தலை புலப்படும் பக்ஷத்தில், உதிர்ந்த கேசராசிகளுக்குப் பதில் புதுக்கூந்தல் முளைக்கவில்லை என்பது நிச்சயம். அச்சமயம் கேசவர்த்தினியைக் கொண்டு பரிஹரிக்காமல், பாதி வழுக்கையைப் பூரண வழுக்கையாக விடுவானேன்? வழுக்கையால் ஏற்படும் கிழத்தோற்றத்தையும் அனுபவிப்பானேன்?

உதிர்ந்த இலைகள் மறுபடி முளைத்துவிடும். ஆனால் சில ... யங்களில் உதிர்ந்த கூந்தல் சி... சையில்லாமல் முளைப்பதில்லை அச்சமயங்களில் கேசவர்த்தினியை உபயோகித்து மயிர் உதிர்வதை நிறுத்தி இளங்கூந்தலையும், இளமையையும் ஒருங்கே பெறுங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைக்காப்பது; விருத்திசெய்வது; அழகுபடுத்துவது. விலை அணு 12; மேற்செலவு வேறு. எல்லாக்கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்:

தென் இந்திய ரஸாயன சாலை

"ஆச்ரமம்", க்ராஸ்கட் ரோட்,

பஸ் ஸ்டாண்டிற்கு அடுத்தது. கோயமுத்தூர்

"ஜெய் ஹிந்த்"

பாரத நாட்டு மக்களே !

இந்தியாவில் உற்பத்தியாகும் ஆடைகளை உபயோகிக்க இன்னும் ஏன் தயங்குகிறீர்கள்? இந்தியர்கள், நம் நாட்டுக் கைத்தறி ஆடைகளை வாங்கி, நம் மக்களை ஆதரிப்பதில் சிரத்தை காண்பியுங்கள்.

இந்தியப் பெண்மணிகளே !

கைத்தறி ஆடைகளில் சிறந்து விளங்கும் எங்கள்

"பேனா டோ மார்க்"

சேலைகளை வாங்குங்கள்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 16 SEP 1947

தயாரிப்பவர்கள்:

ஸ்ரீ சாரதா அண் கோ.,

நடேசர் சன்னதி, பழனி.

ஏஜண்டுகள் :

1. ஸ்ரீ முருகன் & கோ., மால் 2-வது தெரு, மதுரை.
2. பால முருகன் கம்பெனி, மால் 5, ஹனுமார் கோவில் தெரு, மதுரை.
3. R. M. H. S. மூர்த்தி கம்பெனி, லக்ஷிமிபுரம் குறுக்குத் தெரு, மதுரை.
4. ஸ்ரீ பால முருகன் & கோ., 166, தெற்கு மாசி வீதி, மதுரை.
5. M. S. T. சுப்பய்யர் & சன்ஸ், 115, சந்தை ரோடு, நாகல் நகர், திண்டுக்கல்.
6. கஸ்தூரிரங்கய்யர், நாகையர் & கோ., ஸௌராஷ்ட்ர தெரு, வத்தலகுண்டு.
7. N. S. குப்புசாமி, N. A. K. சுப்பய்யர், ஜவுளி வியாபாரம், தென்கரை, பெரிய குளம்.
8. ஸ்ரீ சுப்ரமணியம் கம்பெனி, சேலம் & N. A. Dt.
9. M. R. சுப்பையா செட்டியார், ஜவுளி வியாபாரம், முத்துசாமி பிள்ளை வீதி, பொள்ளாச்சி.
10. ராஜா & கோ., மதராஸ் & ஆந்திரா Dt.

(N. B.) 40, 60, 80 நெ. ஜவுளி தினுசுகளுக்கும் பிரிண்டெட் வாயல் சேலை தினுசுகளுக்கும்

சரஸ்வதி வீவிங் கம்பெனி,

நாகல் நகர், திண்டுக்கல்

32, லக்ஷிமிபுரம் 3-வது தெரு, மதுரை.

பாண்டியன் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.

(இந்தியாவில் ஸ்தாபிதம் 1933)

தலைமை ஆபீஸ் : மதுரை.

சிறந்த சேவை செய்து வருகிறது.

நெருப்பு, மோட்டார், விபத்து

முதலிய

சகலவித இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள்.

மொத்த ஆஸ்திகள் ரூ. 62,00,000.

கிளைகள் : { பம்பாய், அகமதாபாத், கல்கத்தா, ராவல்பிண்டி.

★

பிரதம ஏஜெண்டுகள் :

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்,

மதுரை Etc

யுத்தத்துக்கு முந்திய விலைகள்.

எல்லாம் ஸ்விஸ் தயாரிப்பு — 3 வருஷ உத்தரவாதம்.



நெ. 31.



நெ. 32.

பிரகாச க்ரோமியம் கேஸ் ரூ. 40.
,, உயர்தரம் ரூ. 45.
ரோல்டு கோல்டு (10 வருஷம்) ரூ. 52.

பிரகாச க்ரோமியம் கேஸ் ரூ. 45.
,, ஸெண்டர் செகண்ட்ஸ் ரூ. 50.
ரோல்டு கோல்டு (10 வருஷம்) ரூ. 55.

தபாற் செலவு அணா 12. இரண்டு வாங்கினல் இலவசம். காட்லாக் கிடையாது

BRITTANIA WATCH COMPANY,

POST BOX. 11403. CALCUTTA (M 5.

ஜாதகம் ! ஆருடம் !!

இன்றே எழுதுங்கள். பிறந்த தேதி நேரம் அல்லது ஜாதக நகல் தேவை. ஜாதகம் இல்லாதவர் கடிதம் எழுதும் நேரம் குறிக்கவும்.

கட்டண விவரம்:-1 முதல் 3 உமது எதிர்கால கேள்விகட்கு ரூ. 2. 3-க்கு மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஒரு வருட பலன் 8 பிரிவுகளில் எழுத ரூ. 5. ஆயுள் பூராவுக்கும் பலன் சுருக்கமாக எழுத ரூ. 35.

குறிப்பு:—வெளிநாட்டுக்கு இரட்டிப்புக் கட்டணம்.

Lt.-Col. M. N. C. ஸர்ஜன் ஜெனரல் மதராஸ் கூறுவதைக் கவனியுங்கள்:-தாங்கள் அனுப்பிய ஜாதக பலன் வியக்கத்தக்கது. எனக்குத் திடீரென்று ரூ. 35,000 கிடைக்கும் என்று தாங்கள் கூறியபடியே எதிர்பாராமல் எனக்கு ரூ. 35,000 கிடைத்தது.

'மானேஜர்' வீனஸ் அஸ்டிரோலாஜிகல் ப்யூரோ,

தெப்பக்குளம் P. O. (தென் இந்தியா)

கண்ணில் பூவிழுதல்

டிகான்ஸ் ஐக்யூர் (ரிஜிஸ்) ஒரு உத்தரவாதமான நிவாரணி. கண் வியாதிகள் எதற்கும் சிறந்தது. அபாயமற்றது. 1000-க் கணக்கான பேர் ஆபரேஷனில்லாமல் சொஸ்தமாயுள்ளனர். உலகப் பிரசித்தி பெற்றது. வெற்றிக்கு உத்தரவாதம். விவரம் இலவசம். விலை ரூ. 3. தபால் செலவு அணா 12.

செவிடு

முழுச்செவிடு அல்லது அரைச் செவிடு, காதில் இரைச்சல், மற்றும் எக்காரணத்தினுலும் எவ்வித நோயாலும் நாலே வாரத்தில் சொஸ்தப் படுத்துவதற்கு உத்தரவாதம். ஹானியற்றதும் உடனே பலனளிப்பதுமான மருந்து. கியாதிபெற்ற மூலிகை மருந்து. விவரங்கள் கேட்டால் எழுதுவோம்.

குஷ்டம், வெண்குஷ்டம்

தீராத நோயும் தீரும். உடம்பு முழுவதுமோ அல்லது பாகத்தில் மட்டுமோ இருந்தாலும் சரி, எமது கியாதிபெற்ற ஹானியற்ற மூலிகைகளினுல் நாலே வாரத்தில் பூரண குணம் காண்பீர்கள். விவரங்கள் கேட்டால் எழுதுவோம்.

KAMALA WORKS,

6, Panchpota, BENGAL.

தந்தி விலாசம் : "கோகுல்" ஸ்தாபிதம் 1909. டெலிபோன் நெ. 57

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்.

(பிராஞ்சு : மன்னார்குடி)

சந்தனாதித் தைலம் — அரைக்கீரை விதைத் தைலம்

கோகுல் கூந்தல் தைலம்

கூந்தலுக்கு வளர்ச்சியையும், குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றவை.

வத்திகளுள் சிறந்தது "கோகுல்" வத்திகள்

பல காய்கறி ஊறுகாய், கோகுல் வாசனைப் பாக்கு

முதலிய இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

சோல் ஏஜெண்டுகள்:—

புஷ்பவனம் ஸ்டோர்ஸ்,

பைகிராப்ட்ஸ் ரோட்,

திருவல்லிக்கேணி, மதராஸ்.

(கோவை & பாலக்காடு ஏஜெண்டு)

B. Balapattabi Chettiyar,

246, Vysyal St.,

COIMBATORE.

சூதகத்தை நிறுத்தியது

குமரி (Tablets) சூதகக் கோளாறுகளை, எந்த நிலையிலும் நிறுத்தவல்லது. தீமை விளைவிக்காமல் கஷ்ட நிவர்த்தி யளிக்கிறது. ஆயிரக்கணக்கானவர்கள் திருப்தியடைந்திருக்கின்றனர்

விலை ரூ. 3. நாள்பட்ட கோளாறுகளுக்கு விலை ரூ. 5. மிக்க கடுமையான கோளாறுகளுக்கு ரூ 8, கர்ப்பத் தடை மாத்திரைகள் (Tablets) 6 மாத உபயோகத்திற்கு விலை ரூ. 4.

(வி. பி.க்கு 12 அணா அதிகப்படி.)

Mrs. P. DEVEE, F. D. S. (S. W)

Tollygunge :: CALCUTTA

ஸ்டாகிஸ்டுகள்: 1. ஹாரி & ஸன், 93, சைனாபஜார், மதராஸ், 2. ராகவன் & கோ, ஸ்ரீ நரஸிம்மராஜா ரோட், பெங்களூர் ஸிடி. 3. K. C. மாத்யூ & கோ, கொழஞ்சேரி, திருவாங்கூர், 4. J. திராத் & கோ, மகாத்மாகாந்தி ரோட், கராச்சி, 5. L. M. முகர்ஜி & ஸன்ஸ் லிட், 167, தரம்டோலா தெரு, கல்கத்தா. 6, சிவானந்த சித்தர் மெடிகல் ஹால் 92, ஸீ தெரு, கொழும்பு. 768, லோயர் தெரு, பாடுல்லா (ஸிலோன்)



சாஸ்வதமான யௌவனத்தையும், வீரிய விருத்தியையும் உண்டாக்கி, புதிய இரத்த விருத்தியையும், ஞாபக சக்தியையும், இல்லற இன்பத்தையும் தரும். 40-நாள் மருந்து ரூபாய் 3-12-0. வி.பி. செலவு வேறு.

ஜமதக்னி ஔஷதாலயா,

26, வடக்கு மாடவீதி

மயிலாப்பூர் :: சென்னை.

கேஸரி குடீரம் லிட்.,

மதராஸ்.

★

ஒரிஸ்ஸா, நைஜாம், ஆந்திரா ஜில்லாக்களுக்கும், தமிழ் நாட்டுக்கும் ஏஜண்டுகள் :

ஸீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்,

பர்ஹாம்பூர் - செகந்திராபாத்

பெஜவாடா - மதுரை.

வாரியர்

பிருங்காமலகாதி

தைலம்

குளிர்ச்சி மிக்க ஸ்நான தைலம். கறுப்பான காந்தி மிக்க கூந்தல் தாராளமாக வளரச் செய்யும். அரிப்பு, பொடுகு, தலைவலி, அதி உஷ்ணம், நித்திரையின்மை, கண் எரிச்சல், அதிகப் படிப்பினாலோ வேலையினாலோ ஏற்படும் மந்தம், ஞாபக மறதி, மூளைக்கொதிப்பு முதலியவைகளில் மிகவும் உபயோகமானது.

16 அவுன்ஸ் புட்டி ரூ. 4.

(பாக்கிங், தபால் செலவு வேறு.)

ஆர்ய வைத்தியர்

கே. எஸ். வாரியரின்

அஷ்டாங்க ஆயுர்வேதசாலா

தெப்பக்குளம், திருச்சி.

(ஸ்தாபிதம் : 1936).

டெலிபோன் 2246 தந்தி : கிளாவர் பீடி

லேட் கான்சாகிப் M. முஹமது உமர்சாகிபுவின் குமாரரான முஹமத் நூருல்லா என்று பெயர்கொண்ட நான் இவ்வியாபாரத்தை மிகவும் அபிவிருத்தி செய்துள்ளேன். மிகச் சிறந்த புகையிலையையும் உயர்தரமான சரக்குகளையும் உபயோகித்தே

ஸ்பேட் கிளாவர் பீடிகள்

தயாரிக்கப்படுகின்றன. இந்த பீடிகளின் ரகமும், மணமும் குணமும் என் தகப்பனார் காலத்திலிருந்ததைப் போன்றே சிறப்பாக விளங்குகின்றது.

முகம்மது நூருல்லா

ஸோல் புரொப்ரைட்டர்

ஸ்பேட் கிளாவர் & ஆர்டீன் பீடிகள்

37, மன்னடி, மதராஸ்.

விரைவில் சமனமாகி குணமடைந்தன

தசை கீழ் வாதத்தால் அவஸ்தைப்படுபவர்கள் ஜாம்-பக் எப்பொழுதும் வைத்திருக்க வேண்டும். தாவர வஸ்துக்களிலிருந்து தயாரிக்கப்படும் இந்த மருந்தை தடவினால் வலி உடனே நிவாரணமடையும். ஜாம்-பக்கிலுள்ள சத்து நிறைந்த மருந்து எண்ணைகள் பிடிப்பு, கெட்டி முதலியவற்றை குணமாக்கி தசை பிடிப்புகளை சமனமூட்டி, சோர்வடைந்து வலிக்கும் கால்களுக்கு நிவாரணமளிக்கும். சமனமூட்டுவதும் சுத்திகரிப்பதும், குணப்படுத்துவதுமான ஜாம்-பக் வெட்டு, விஷப்புண், தீப்பட்ட காயம், பூச்சிகடி, பருக்கள், படைகள், தோல் புண்கள், சிவப்பு தட்டும் புண்கள், மூலம், எக்ஸிமா, மற்றும் பல சரும வியாதிகளுக்கு சிறந்த ஔஷதம்,

ஏஜெண்டுகள்: **மெஸர்ஸ். தாதா & கம்பெனி, பி. டி. மதராஸ்.**



Zam-Buk

உலகப் புகழ்பெற்ற மூலிகை மெழுகு.

மிருகக் கொழுப்பு சேராததற்கு உத்தரவாதம்.

மாதவிடாய் நின்று விட்டதா? எவ்வளவு நாள்பட்டதாயிருந்தாலும் சுலபமாகவும் ஹானியின்றியும் 24-மணியில் வெளிப்படுத்தும். "சம்பகிரேசனி" உத்தரவாதமானது. 30 வருஷம் புகழ்பெற்றது. கவர்ன்மெண்டு ரிஜிஸ்டர்ட் விலை ரூ. 4—4—0 தபாற் செலவு அணா 12.

கர்ப்பத்தடை நீங்கள் விரும்பிய விதம் கர்ப்பத்தடை செய்ய "தம்பதி சாகா" சிறந்த மருந்து. ஹானியற்றது. நிரந்தரம் ரூ. 4—4—0 தாற்காலிகம் ரூ. 2—0—0 தபாற் செலவு அணா 12 தனி.

ஆண்மை "மதன் விலாஸ் ரஸாயன்" அற்புத மருந்து வீர்யமின்மை, நரம்புத் தளர்ச்சி, பசியின்மை கீல் வாயு, இருமல் முதலியவை ஒரே வாரத்தில் குணமாகும். வாழ்க்கையை நன்கு அனுபவிக்கலாம். ரூ. 2—8—0 தபாற் செலவு அணா 12.

Kaviraj M. Kavyatirtha (S. W)

70, Cornwallis Street, Calcutta 6.

Stockist: Milton & Miller, 157, Broadway, Madras.

ரூ. 100 இனும்

ஆச்சரியகரமான சக்தி வாய்ந்த சித்த யந்திரம் (Govt. Regd.)

சக்தி வாய்ந்தது. "குப்த வசீகரண யந்திரத்தை" வைத்திருப்பதாலேயே கஷ்டமான காரியங்களிலும் வெற்றி பெற்றுவிடலாம். பலன் அளிக்கச் செய்வதில் எவ்வித கடின சாதனமும், தேவைகளும் அவசியமில்லை. இதனால் (ஆண், பெண்) நீர் விரும்பும் எவராகிலும் உனக்கு அடங்கி வருவர். அசுப நட்சத்திரங்கள், விரோதி பகை இவைகள் நீங்கி, பரீட்சை, வர்த்தகம், வழக்கு, லாட்டரி, ரேஸ், உத்தியோகம், சந்தானம், ஐசுவரியம், கடன் நிவாரணம், பயங்கர வியாதிகள் இவைகளில் வெற்றி பெறுவதோடு, அதிருஷ்டசாலியாகவும் இருப்பீர்கள். பொய் என்று நிருபிப்பவர்களுக்கு ரூ. 100 இனும். செம்பு ரூ. 2-8-0. வெள்ளி ரூ. 3-0-0. சுத்த தங்கம் ரூ. 13-0-0.

நரையை ஒழியுங்கள்.

சாயம் மூலம் இல்லை எமது ஆயுர்வேத வாசனைத் தைலம், நரை மயிரை நிரந்தரமாகக் கருப்பாகச் செய்து, மீண்டும் நரை ஏற்படாமல் பாதுகாக்கும். மூளை பலவீனம், மந்தம் முதலியவற்றைப் போக்கி, தலைவலியைக் குணப்படுத்தும், பார்வையை சீர்படுத்தும். நம்பிக்கையில்லையேல் தொகை வாபீஸ் என்ற உத்தரவாதம் பெறுங்கள். சொற்ப நரைக்கு ரூ. 2-8-0. அதற்கு மேற்பட்டது ரூ. 3-8-0. எல்லா நரைக்கும் ரூ. 5.

Shree Kamrup Kamachhya Ashram.

No. 6. (P. O Katrisarai, Gaya)

"ஸ்ரீ மஹாலக்ஷ்மி ரக்ஷை"

1 மண்டலம் (48 நாள்) கிரமப்படி பூஜை செய்யப்பட்டது.

ஆயுள்பூராவும் பலன் தரக்கூடிய வெள்ளி ரக்ஷை ரூ. 43-12-0.

தற்போது அனுப்பவேண்டியது ரூ. 3-12-0.

ஸ்ரீ மஹாலக்ஷ்மி ரக்ஷை வேண்டியவர்கள் கோரும் கோரிக்கைகளை எழுதி தற்போது ரூ. 3-12-0 மணியார்டர் செய்யவும். மேலே கொடுத்துள்ளபடி நம்மிடம் ரக்ஷை வாங்கிய பிறகு 108 நாளைக்குள் நன்மையான பலன்கள் நடந்தால் பாக்கி ரூ. 40-0-0 அனுப்பவும். தற்போது கேட்கும் ரூ. 3-12-0 ரக்ஷை வெள்ளி கவரிங்குக்கும் தபால் ரிஜிஸ்டர் செலவுக்கும், விளம்பர செலவிற்குமாக மேலே கண்ட தொகை கேட்கப்படுகிறது.

ஸ்ரீ மஹாலக்ஷ்மி ரக்ஷை அணிவதால் ஏற்படும் நன்மைகள்.

1. சுகசரீர்களாயும், எப்போதும் போஜனாதிகளில் குறைவின்றி இருப்பார்கள்.
2. குடும்ப ஒற்றுமை, குடும்ப அபிவிருத்தி தனதான்யாதிகள், வாக்கு] பலிதம், குடும்ப நிர்வாக திருப்தி.
3. சகோதிரம் ஒற்றுமை சகோதிரமில்லாதவர்களுக்கு சகோதரம் ஏற்படும். பிரிந்த சகோதரம் கூடுவர்.
4. மாதுர் அபிவிருத்தி, வாகன அபிவிருத்தி, பூமி கட்டட அபிவிருத்தி ஏற்படும்.
5. புத்திரங்களுக்கு ரோக நிவர்த்தி, மலடு உடையவர்களாயிருந்தாலும் புத்திரம் ஏற்படும்.
6. சத்துருக்கள் பங்கமடைவார்கள். தீராத ரோகமும் தீரும்.
7. வாலிபர்களுக்கு நல்ல குணவதி லபிப்பார்கள். மற்றவர்களுக்கு ஸ்திரீ நேசமும், ஸ்திரீயின் சிசுருக்ஷையும், கிடைக்கும். பால்ய பெண்கள் அணிவதால் சத்புருஷனை அடைவார்கள். மற்றவர் அணிவதால் கணவன் ஒற்றுமை, பிரிந்த கணவனை அடைவார்கள்.
8. ஸ்திரீகள் அணிவதால் மாங்கல்ய தீர்க்கமும், புருஷர் அணிவதால் ஆயுள் தீர்க்கம்.
9. வாலிபர் அணிந்தால் பிதுருவின் பிரீதியை அடைவார். விசேஷ பாக்யமும், லக்ஷ்மீ கடாக்ஷமும் ஏற்படும்.
10. கல்வி பயிலுபவர்கள் அணிந்தால் கல்வியில் தேர்ச்சியும், படித்தவர்கள் அணிந்தால் உத்தியோகம் கிடைக்கும். விவசாயிகளுக்கு கிருஷிகம் மேன்மைபடும். வியாபாரிகளுக்கு வியாபார அபிவிருத்தி ஏற்படும்.
11. அவரவர்கள் செய்யும் தொழிலில் நல்ல ஆதாயம் கிடைக்கும்.
12. நல்ல போகபோக்கியமும் லாபத்தை உத்தேசித்து பணவிரயமும் ஏற்படும்.

N.B: அதர்மர்களும், நாஸ்திகர்களும் விசேஷபலன்களை எதிர்பார்க்க முடியாது. 2. ரக்ஷை ஆர்டர் செய்பவர், ஆர்டர் கிடைத்த 9-ம் நாள்தான் ரக்ஷை பிரசாதத்துடன் அனுப்பப்படும். வி. பி. யில் அனுப்ப சாத்தியப்படாது.

ஸ்ரீ மஹாலக்ஷ்மி ஜோதிஷ ஆபீஸ், கோட்டமருதூர்

அரகண்டநல்லூர் P. O. (S. A. Dt)

வாழிய செந்தமிழ்

சுதேசமித்திரன்

வாரப்பதிப்பு

வாழ்க நற்றமிழர்!

Vol. XVIII] ஸர்வஜித்துஸூ ஆடிமீ 18உ ☆ 1947-ஷூ ஆகஸ்டுமீ 3உ [No. 27

கடவுளாலும் முடியாது!

சமஸ்தானங்கள் ஏதாவதொரு டொமினியனுடன் இணைந்தாலேயே அவைகளுக்கு வாழ்வுண்டு என்பது பட்டவர்த்தனமான உண்மை. எனினும் இன்னும் சமஸ்தானாதிபதிகளில் சிலர் அரசியல் நிர்ணய சபையில் சேரத் தயங்குகின்றனர். வேறு சிலர் பூர்ண சுதந்திரப் பிரகடனம் செய்ய கிளம்பியிருப்பது இன்னும் பெரிய அதிசயம். இத்தகைய சமஸ்தானாதிபதிகளின் கண்ணைத் திறக்க லார்டு மௌண்ட்பேட்டன் ஒருபெரு முயற்சி செய்துள்ளார். சமஸ்தானாதிபதிகளையும், அவர்களது பிரதிநிதிகளையும் கொண்ட கூட்டத்தில் சமீபத்தில் அவர் பேசியது உபதேசம், எச்சரிக்கை இரண்டும் கலந்த ஒரு அறிவுரையாகும்.

சமஸ்தானங்கள் தங்களையடுத்துள்ள டொமினியனுடன் இணைவதைத் தவிர வேறு வழியில்லையென்பதை லார்டு மௌண்ட்பேட்டன் தெளிவாக்கியுள்ளார். இணைப்புறுவதே உண்மையில் அவைகளுக்குப் பல வழிகளிலும் அனுகூலமானதென்பதையும் அவர் சிறிதும் சந்தேகத்துக்கிடமின்றி விளக்கி வைத்திருக்கிறார். டொமினியனுடன் சேருவதால் சமஸ்தானங்களின் உள் விவகாரங்களைப் பொறுத்தவரை அங்கு ஆள்வோர்க்கு உள்ள உரிமைகளுக்கு எவ்விதத்திலும் பாதகம் நேராது. ஏற்கெனவே சர்தார் படேல் சுட்டிக்காட்டிய இவ்வுண்மையை வைஸ்ராயும் வற்புறுத்தியுள்ளார். இணைப்பு கோருவதெல்லாம் சமஸ்தானங்களுக்கும், டொமினியனுக்கும் பொதுவான சில முக்கிய இனங்களைப் பொறுத்தமட்டில்தான். இத்தகைய இனங்கள் மூன்று. (1) பாதுகாப்பு (2) அந்நிய விவகாரம் (3) போக்குவரத்து சாதனங்கள். லார்டு மௌண்ட்பேட்டன் சுட்டிக்காட்டியது போல் எவ்வளவு பெரிய சமஸ்தானமும் மேற்குறித்த இனங்களைத் தனிப்பட்ட முறையில் நிர்வகிக்க முடியாது. அவ்வாறு நிர்வகிக்க முயல்வதில் லாபம் சிறிதுமில்லை; வீணான கஷ்ட நஷ்டங்கள்தான் ஏற்படும்.

மேற் குறித்த மூன்று இனங்களிலும் சமஸ்தானங்கள் டொமினியன் சர்க்காருடன் இணைப்புறுவதுபற்றி வைஸ்ராய் முயற்சியின் பேரில் ஒரு நகல் ஒப்பந்தம் தயாராயிருக்கிறது. சமஸ்தானங்கள் உள் விவகாரங்களைப் பொறுத்தவரை தாராளமாக சுதந்திரத்துடன் வாழட்டும்; அவற்றால் சமாளிக்க முடியாத சில இனங்களை மட்டும் டொமினியன் சர்க்காரிடம் ஒப்படைக்கட்டும் என்பதே தற்போது நாம் சமஸ்தானங்களுக்கு விடுக்கும் அழைப்பின் கருத்து. இதை அவை ஏற்பதா என்பதில் உண்மையில் அபிப்பிராய பேதத்துக்கு இடமேது? சமஸ்தானாதிபதிகள் துரிதமாக முடிவு செய்ய வேண்டும். ஆகஸ்ட் 15-ந் தேதி நெருங்கிவிட்டது. அதற்குப்பின் அவர்களுக்குப் பாதுகாப்பளிக்க, யோசனை சொல்லக்கூட யாரும் இருக்கப் போவதில்லையென்று மௌண்ட் பேட்டன் அறிவுறுத்தியுள்ளார். இதற்குப் பிறகும் எந்த சமஸ்தானாதிபதியாவது ஒதுங்கி நிற்க எண்ணினால் "கடவுள்தான் அவரைக் காப்பாற்ற வேண்டும்" என்று மௌண்ட்பேட்டன் பரிதாபத்துடன் கூறினார். ஆனால், அவ்வளவு பெரிய அசட்டுத்தனத்திலிருந்து கடவுளாலும் அச்சமஸ்தானாதிபதியைக் காப்பாற்ற முடியாது.



(மேல்)

பிரான்ஸால் கட்டப்பட்டிருக்கும் ஐரோப்பாவிலேயே மிகப் பெரியதான விமானப் படகு இதுதான். அட்லாண்டிக்கை கடந்து செல்லும் பிரயாணங்களுக்கு இவ் விமானப் படகு இனி உபயோகிக்கப்படும்.

(இடது)

சமையல் வேலைகளை சுலபமாக்குவதற்காக ஆக்ஸ்போர்டைச் சேர்ந்த மிஸஸ் மார்ஜோரி ஸ்மித்தால் கண்டு பிடிக்கப்பட்டிருச்கும் புதிய அடுப்பு. சாதாரண மின்சார அடுப்புதானே என்று நீங்கள் எண்ணலாம். அதான் இல்லை. ரேடியோ அலைகளால் இயக்கப்படுகிறது இந்த அடுப்பு.

★

புகழ் வேண்டும்

~கோமதி ஸ்வாமிநாதன்~

பாத்திரங்கள்

கஞ்சம்பட்டி ஜமீந்தார்.
காரியதரிசி கல்யாணம்.
ஜமீந்தாரின் வேலைக்காரன்.
ஓர் ஏழை மாணவன்.

[ஜமீந்தார் சோப்பாவில் உட்கார்ந்துகொண்டிருக்கிறார். காரியதரிசி சற்று தூரத்தில் நாற்காலியில் உட்கார்ந்துசொண்டு ஏதோ பேப்பர்களைப் புரட்டிக்கொண்டிருக்கிறார்.]

ஜமீந்தார்:—மிஸ்டர் கல்யாணம்! இன்றைய தபாலெல்லாம் வந்துவிட்டதா?

கல்யாணம்:—அப்போதே வந்துவிட்டது. நீங்கள் ஏதோ ஆழ்ந்த யோசனையிலிருக்கிறீர்கள். கலைக்க வேண்டாமென்றுதான் பேசாமலிருந்தேன்.

ஜமீந்தார்:—என்ன யோசனை! அந்த அனாதை ஆசிரமத்திற்கு ஒரு இருபதினாயிரம் ரூபாய் கொடுப்பதாக வாக்களித்திருக்கிறேனல்லவா? அதைப்பற்றிதான் பிளான் பன்னிண்டு இருக்கேன்!

கல்யாணம்:—நேற்று நடந்த கமிட்டி மீட்டிங்கிலேகூட உங்களைப்பற்றி பிரமாதமாகச் சொன்னார்களாம். அந்த ஆசிரமத்திற்கு உங்கள் பெயரையேகூட வைக்கப்போவதாகப் பேச்சு நடக்கிறதாம்.

ஜமீந்தார்:—பேஷ்! அப்படியென்றால், அவர்களுக்கு வாக்களித்திருக்கும் தொகையுடன்கூட ஒரு பதினாயிரம் ரூபாய் வேண்டுமானாலும் கொடுக்கலாம்!

கல்யாணம்:—வந்த தபால் எல்லாவற்றையும் பிரிக்கின்றேன் பாருங்கள்!...இந்தக் கடிதம் விதவா விவாஹ சங்கத்திலிருந்து வந்திருக்கிறது.

ஜமீந்தார்:—(கையில் வாங்கிப் பார்க்கிறார்) போன மாதம் மொத்தம் நூற்றுத் தொண்ணூற்றி இரண்டு விதவா விவாஹங்கள் நடந்ததாம். செலவு அதிகமாகப் போய்விட்டது. நூறு ரூபாய் டொனேஷன் அனுப்பினால் நலம் என்று நிர்வாகஸ்தர் எழுதியிருக்கிறார்.

கல்யாணம்:—சங்க நிர்வாகம் அவ்வளவு தூரம் சுகமில்லை. விளம்பரம் போதாது!

ஜமீந்தார்:—ஆமாம்! ஆமாம்! சுத்த மடப்பசங்கள். ரூபாய் கொடுப்பவர்கள் பேரையெல்லாம் நாலு பேருக்குத் தெரியும்படி பேப்பரில் போடவேண்டுமென்று தெரியாதா? அடக்கமாகத் தொண்டு புரிகிறார்களாம். சுத்த மண்டுக்கள்!

கல்யாணம்:—அவர்களுக்கு இப்போது ஒன்றும் அனுப்ப வேண்டாம்.

ஜமீந்தார்:—(மற்றொரு கடிதத்தைப் படித்துவிட்டு) அடேடே! நம்ப சடகோபாச்சாரியா? ஏதோ சனாதனக் காலேஜ் கட்டப்போகிறானும்! பெரிய படே சனாதன சாம்ராட் ஒருவர் அஸ்திவாரக் கல் நாட்டப் போகிறானும். ஒரு ஆயிரம் ரூபாயாவது அனுப்பிக் கொடுத்தால் தேவலை என்று எழுதுகிறான்.

கல்யாணம்:—நல்ல கைங்கர்யம்தான்!

ஜமீந்தார்:—என்ன கைங்கர்யம்? ஒரு கவர்னர் வந்து அஸ்திவாரக் கல் நாட்டினால் அதன் மதிப்பு அலாதிதான்! அப்படியென்றால் ஒரு இரண்டாயிரத்தையாவது விட்டெறியலாம், மேலும் அணுகுண்டும் ஆகாச விமானமும் வந்த பிறகு சனாதனம் என்ன வேண்டியிருக்கிறது. மனிதன் முன்னேற வழியைப் பார்ப்பானா! அல்லது பழைய புராணங்களையும் சாஸ்திரங்களையும் கட்டிக்கொண்டு அழுவானா?

கல்யாணம்:—இப்போதுதான் ஞாபகம் வருகிறது. அட்டாமிக் அசோசியேஷனிலே இன்றைக்கு நீங்கள் தலைமை வகித்துப் பிரசங்கம் செய்யவேண்டும். பிரசங்கத்தை வெகு நேர்த்தியாய் எழுதி வைத்திருக்கிறேன். கண்ணாடிக்கு முன்னால் நின்று படித்து ஒத்திகை பார்த்துக்கொள்ள வேண்டும்.

ஜமீன்தார்:—எஸ்! எஸ்! முக்ய விஷயமல்லவா! நீ எப்படியும் ஒரு ஐம்பதுரோஜா புஷ்பமாலைகளுக்கு ஏற்பாடு பண்ணி நம் ஆட்கள் கையில் கொடுத்து வைத்து, பிரசங்க நேரத்தில் எனக்குப் போடச் சொல்லவேண்டும். அந்த பேபர் கரெஸ்பான்டெண்டிற்கு சொல்லிவைக்கவேண்டும்.

கல்யாணம் :—இப்போது கல்யான சீசன். ரோஜா மாலைகள் கிடைக்காது. கிடைத்தாலும் ஒரு மாலை ஐந்து ரூபாய்வரை ஆகும். ஆகையால், ஐந்தாறு மாலைகள் வாங்கினால் போதுமென்று நினைக்கிறேன்.

ஜமீன்தார் :—நோ ! நோ ! ஐம்பது மாலைக்கு அரை மாலை கூடக் குறையக்கூடாது. அதற்காக ஒரு ஐநூறு ரூபாய் செலவானாலும் பரவாயில்லை.

கல்யாணம் :—அதற்கென்ன ! ஏற்பாடு செய்துவிடுகிறேன்......இந்தக் காகிதத்தைப் பாருங்கள் ! உங்கள் தாயாருடைய சகோதரி...அதுதான் அந்தக் கிழவி அம்மாள்......கிராமத்திலேயிருந்து எழுதியிருக்கிறார்கள்.

ஜமீன்தார்: —அட ! அந்த நித்தியதரித்திரமா ? வேறென்ன ! (கடிதத்தைப் பார்த்துவிட்டு) பத்து ரூபாய் செலவிற்கு வேண்டுமாம். கண்டிப்பாய் அனுப்ப முடியாது ! வேலையில்லை. என் பணம் என்ன தெருவிலா கிடக்கிறது. இந்த சொந்தக்காரர்களே பெரிய உபத்திரவம் ! இப்போதுதான்

நாலு மாதத்திற்குமுன் ஐந்துரூபாய் அனுப்பினேன். அதற்குள் மறுபடியும் ரூபாயாம்! இவர்கள் தேவைக்கெல்லாம் அனுப்பிக்கொண்டே இருந்தால் சீக்கிரம் இன்சால்வெண்ட் ஆகவேண்டியதுதான்!

கல்யாணம்:—அதை விட்டுத் தள்ளுங்கள்! இந்தக் கடிதத்தைப் பாருங்கள். எருமை மாடு அபிவிருத்திக் கழக காரியதரிசி இன்றைக்குப் பேப்பரில் வெளியாகும்படி உங்கள் போட்டோவையும் நீங்கள் கொடுத்திருக்கும் நன்கொடை விவரத்தையும் பத்திரிகைக்கு அனுப்பியிருக்கிறாராம்!

ஜமீன்தார்:—பேஷ்! பேஷ்! அவனல்லவா மனிதன்! குப்பையில் குந்துமணி! இன்றைய பேப்பர் இன்னும் சிறிது நேரத்தில் வந்துவிடுமல்லவா?...... எந்தமாதிரி போட்டோவை அனுப்பியிருக்கானோ தெரியவில்லை. ஜரிகைத் தலைப்பாவோடு உள்ளதாக இருந்தால் ஜோராக இருக்கும். கல்யாணம்! ரயில்வே ஸ்டேஷனுக்கு ஆளனுப்பி, ரயில் வந்ததும் பேப்பரை வாங்கிக்கொண்டு வரச்சொல்லும். அதைப் பார்த்தால்தான் என் ஆசை அடங்கும்.

கல்யாணம்:—சரி!......டேய் முனியா! யஜமான் சொன்னது காதில் விழுந்ததா? ஓடு ஸ்டேஷனுக்கு. சீக்கிரம் பத்திரிகை வாங்கிக்கொண்டு வா.

[முனியன் போகிறான். ஓர் ஏழை மாணவன் வருகிறான்.]

மாணவன்:—நமஸ்காரம்!

கல்யாணம்:—யாரப்பா நீ? என்ன சமாச்சாரம்?

மாணவன்:—நான் ஒரு ஏழை மாணவன். கலாசாலையில் சேர்ந்து படிக்கவேண்டுமென்ற ஆவல் உள்ளவன். ஜமீந்தார் அவர்களின் உதாரகுணத்தைப் பற்றிக் கேள்விப்பட்டேன். அவரிடம் போனால் படிப்பு விஷயத்திற்குப் பண உதவி செய்வார் என்று அனேகம் பேர்கள் சொன்னார்கள்!

ஜமீன்தார்:—நீயோ ஏழைப் பையன்! முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்படுவதுபோல் நீ ஏன் கலாசாலைப் படிப்பிற்கு ஆசைப்படுகிறாய்? எங்கேயாவது வேலைக்குப் போகவேண்டியதுதானே!

மாணவன்:—எனக்கு மேலும் படிக்கவேண்டுமென்ற ஆசை அதிகம். அதற்கு வேண்டிய ஆர்வமும் ஊக்கமும் இருக்கின்றது.

ஜமீன்தார்:—பணம் மாத்திரம் இல்லையாக்கும்? அப்படி ஊக்கம் இருந்தால், நம் புராதன சாஸ்திர புராணங்களைப் படித்து, அதை ஜனங்களுக்கு எடுத்துச் சொல்லி, சீர்திருத்தம் செய்வதுதானே! அல்லது வேத பாடசாலையில் போய் அத்யயனம் பண்ண வேண்டும். காசு இல்லாத போனாலும், ஆசைக்குக் குறைவில்லை.

மாணவன்:—நீங்கள் எத்தனையோ, சங்கங்களுக்கும் கழகங்களுக்கும் பணம் கொடுத்து உதவி செய்கிறீர்கள். அதுபோல், என் போன்ற முன்னுக்கு வரவேண்டுமென்று ஆசையுள்ள ஓர் ஏழைச் சிறுவனுக்குப் பண உதவி செய்தால் தங்களுக்கு மகத்தான புண்ணியமுண்டு.

ஜமீந்தார்:—பையா! எனக்குப் புண்ணியம் வேண்டாம்! புகழ்தான் வேண்டும்! உனக்கு உதவி செய்து எனக்கு என்ன ஆகப்போகிறது? சங்கங்களுக்கும் சபாக்களுக்கும் பணம் கொடுத்தால், பத்திரிகைகளில் என் பெயர் கொட்டை எழுத்துக்களில் வெளிவரும். எனக்குப் பெரும்புகழும் கிடைக்கும். உனக்கு உதவி செய்தால் எனக்கு எப்படிப் புகழ் கிடைக்கும்! ஆகையால், நீ இந்தக் கலாசாலை ஆசையை விட்டுவிட்டு எங்கேயாவது கடையிலே கணக்கு எழுதப் போ.

[முனியன் பேப்பருடன் வருகிறான், ஜமீந்தார் ஆவலுடன் வாங்கிப் பார்க்கிறார்.]

கல்யாணம்:—போட்டோ வெளியாகி இருக்கிறதா?

ஜமீந்தார்:—ஐயையோ! ஒன்றையும் காணோமே! என் படத்தைப் போடவில்லையே!...கல்யாணம், நீ தான் தேடிப் பாரு.

[கல்யாணம் பேப்பரைக் கையில் வாங்கிப் பார்க்கிறார். முகத்தில் ஏமாற்றக் குறிகள் தோன்றுகின்றன.]

கல்யாணம்:—இந்தப் பேப்பரில் காணோமே!...... போட மறந்துவிட்டார்களா?

ஜமீந்தார்:—போடவில்லையா? என் படம் வரவில்லையா? ஐயையோ; எனக்குத் தலை சுற்றுகிறது. மயக்கமாக வருகிறது.

(கீழே விழுந்துவிடுகிறார். கல்யாணம் தூக்குகிறார். ஆனால் திடுக்கிடுகிறார்.)

கல்யாணம்:—ஐயோ பாவம்! ஜமீந்தார் தாங்க முடியாத அதிர்ச்சியாலே காலம் ஆய்விட்டார் போலே இருக்கு.

மாணவன்:—அடேடே! புகழுக்கு மிகவும் ஆசைப்பட்டவராயிற்றே! எனக்கு உதவி செய்தால் புகழ் கிடைக்காது என்று ஏங்கினாரே! பாவம்.

முனியன்:—நான் ஒரு சமாச்சாரம் சொல்றதுக்கு முன்னாலே யஜமான் இப்படி அவசரப்பட்டு செத்துப் போயிட்டாரே! இன்றைக்கு ரயில் லேட்டா வருமாங்க. அதுக்காக நேற்றுப் பேப்பருல்ல வாங்கியாந்தேன்.

மாணவன்:—பேஷ்!...அவர் ஆத்மா என்னாலேயே சாந்தியடையட்டும், என்னால் அவருக்கு புகழ் கிடைக்கட்டும். ஐயா! இதோ, அடுத்த வேளை சாப்பாட்டிற்கு வைத்திருக்கும் இரண்டு ரூபாய். ஜமீந்தார் காலமானதை இந்தப் பணத்தைக் கொண்டு பத்திரிகையில் ஆபிச்சுவரி காலத்தில் (Obituary) போடச் சொல்லுங்கள்.

கல்யாணம்:—அந்தப் பகுதியையாவது இருந்து பார்க்க அவருக்குக் கொடுத்து வைக்கவில்லையே பாவம். (போகிறார்கள்)

அட்டைப் படம்

★

சிங்கத்தை தேசிய அடையாளமாகக் கொண்ட பிரிட்டனும் இந்தியப் புலியும் சரிநிகர் சமானமாக இனி முன்னேறப் போவதை முன்னிட்டு அவ்விரு வன மன்னர்களையும் இவ்விதழின் அட்டையில் பிரசுரிக்கிறோம்.

அலமுவின் கடிதங்கள்

என். எஸ். ஸ்ரீ

அன்புள்ள அம்மாவுக்கு அலமு அநேக தண்டம் சமர்ப்பிவித்த விஞ்ஞாபனம்.

பார்க்கப்போனால் இந்தக் காலத்துக்கு அக்ரமும் கொஞ்சம் வேண்டித்தான் இருக்கும்போலிருக்கிறது. நியாயத்தையே நம்பியிருக்கிறவர்கள் ரொம்பவும் சோதனைக்குத்தான் உள்ளாக்க வேண்டியிருக்கிறது. நியாய மார்க்கத்திலேயே போகிறதானால் மாமாவுக்கு வீடு கிடைப்பதென்பது இந்த ஜன்மத்தில் இல்லை. அதற்கான தந்திரோபயத்தைக் கொஞ்சம் கையாண்டதினால்தான் மாமாவுக்கு உடனே வீடு கிடைத்துவிட்டது. ஆமாம் உண்மையாகத்தான் சொல்கிறேன். 'வருஷக்கணக்கில்' 'மூலை முடுக்கு' ஒன்றுகூடப் பாக்கியிராமல் 'பொட்டாய்ப் பிசைந்து அலைகிறார்கள். ஒண்டுவதற்கு ஒரு ரூம் கிடைக்கவில்லை. வந்து பத்து நாளாகவில்லை. அதற்குள் கடல்மாதிரி தனி வீடு கிடைத்துவிடுகிறதா? நம்பவே முடியவில்லையே' என்று யோசிக்கிறாயா? நாங்களே இதைக்கேட்டு வெகு நாழிகை வரையில் ஸ்வபனம் என்றுதானே நினைத்துக் கொண்டிருந்தோம். மாமா லாரியைக்கொண்டு வந்து சாமான்களை ஏற்றிக்கொண்டு போய் அந்த வீட்டில் வைத்த பிறகல்லவோ எங்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டது. கேட்பதற்கு ரொம்ப ரஸமாகத்தான் இருக்கிறது. இப்பொழுது வீட்டைக் காலி செய்து கொடுத்திருப்பவர் மாமாவுக்கு சிநேகிதராம். அவருக்கும் வீட்டுச் சொந்தக்காரருக்கும் திடீரென்று மனஸ்தாபம் வந்துவிட்டதாம். அதாவது வீட்டை 'ரிபேர்' செய்ய வேண்டும். ஆகையால் உடனே காலி செய்துவிட வேண்டும் என்று வீட்டின் சொந்தக்காரர் சொன்னாராம். அவர் காலி செய்யச் சொன்னதின் மர்மம் அவருக்குத் தெரியுமாம். ரொம்ப நாள் பழக்கப்பட்டிருக்கிறாரோலியோ? அதாவது இப்பொழுது இவர் 25 ரூபாய் வாடகை கொடுத்து வருகிறார். வேறு ஒருவர் அறுபது ரூபாய் கொடுப்பதாகவும் அட்வான்சாக ஆயிரம் ரூபாயும் கொடுப்பதாகச் சொன்னாராம். பேரத்தை விட்டுவிட மனஸு வருமா? இதை அப்படியே சொல்லி அவரை வெளியேற்ற முடியுமா? அதற்காக வீட்டை ரிபேர் செய்ய வேண்டும் என்ற காரணத்தைச் சொல்லி காலி செய்யச் சொல்லியிருக்கிறார். இது எப்படியோ அவருக்குத் தெரிந்துவிட்டது. இருந்தாலும் தெரிந்ததாகக்காட்டிக் கொள்ளாமல் ஒரு மாதம் 'டயம்' கேட்டாராம். ஒரு மாதமும் ஆகிவிட்டது. காலிசெய்யவில்லை. வேறு எங்கேயோ ஏற்பாடு செய்திருப்பதாகவும், இன்னும் 15 தினங்களில் கிடைத்துவிடுமென்றும் இன்னுமொருமாதம் 'டயம்' கொடுக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டாராம். அந்த ஒரு மாதமும் ஆகிவிட்டது. சண்டை கொஞ்சம் கொஞ்சமாய் முற்றிப்போய் கோர்ட்டு வரையில் போய்விடும்போலிருந்ததாம். கடைசியில் மத்தியஸ்தர்கள் வந்து வீட்டைக் காலிசெய்துவிடும்படி சொல்லிவிட்டார்களாம். ஆனால் அந்த மனுஷயன் என்ன செய்திருக்கிறார் தெரியுமோ? மாமாவிடம் வந்தார். நடந்த விஷயத்தையெல்லாம் சொன்னார். சொல்லிவிட்டு, "என்னைத்தானே காலி செய்யச் சொல்லியிருக்கிறார்கள். நான் காலி செய்துவிடுகிறேன். ஆனால் இன்னொருவர் வருவதற்கு முன்னால் அந்த இடத்திற்கு நீங்கள் வந்துவிடுங்கள். பிறகு பார்த்துக்கொள்ளலாம்' என்று சொன்னாராம். மாமா கொஞ்சம் யோசனை செய்தாராம். வீண் சண்டையில் போய் சிக்கிக்கொள்ளவேண்டுமே என்ற பயம் பாவம்! அதெல்லாம் யோசனையே வேண்டாம். இவன்களுக்கெல்லாம் இப்படித்தான் செய்யவேண்டும். நியாயமாக ரிப்பேர் செய்வதானால் பரவாயில்லை. இரண்டு வருஷமாய், வீடெல்லாம்

ஒழுக்கு. மழை காலம் வந்துவிட்டால், உள்ளே முழங்கால் ஜலம். கரடியாய்க்கத்தினேன். அப்பொழுதெல்லாம் காதில் போட்டுக்கொள்ளவில்லை. இப்பொழுது வந்துவிட்டதோ அக்கரை. நான்தான் சொல்கிறேனே. நியாயஸ்தர்களிடம் நியாயமாய் நடந்துகொள்ள வேண்டியதுதான். ஆனால் அக்ரமத்தில் பிரவேசிப்பவர்களிடம் பதிலுக்குப்பதில் செய்தால்தான் அவர்களுக்குக் கொஞ்சமாவது புத்தி வரும். இப்பொழுது நான் கொடுப்பதே அதிக வாடகை. முதலில் 12 ரூபாய்தான் கொடுத்து வந்தேன். அதைக்கொஞ்சம் கொஞ்சமாக 25க்கு ஏற்றிவிட்டான். மேலே வேண்டுமானால் நாலோ, ஐந்தோ வைத்துக்கொள்ளட்டும். அறுபது, எழுபது என்றால் என்ன அக்கிரமம் பாருங்கள். ஆகையால் பேசாமல் நான் சொல்கிறபடி செய்யுங்கள். இதில் கொஞ்சம் கூடப்பிழையே இல்லை. வரட்டும். அவனுக்காயிற்று, நமக்காயிற்று ஒரு கை பார்த்துவிடுவோம். கோர்ட்டுக்குப் போகட்டும். காலி செய்யச் சொல்லட்டும். இதற்குள் 2, 3 மாதங்கள் கடத்திவிடலாம். அதற்குள் வேறு இடம் பார்த்துக் கொண்டுவிடலாம் அல்லது பின்னும் ஒரு பத்துரூபாய் கொடுப்பதாக ஒப்புக்கொண்டால் உங்களுக்கே விட்டுவிட்டாலும் போயிற்று. ஆகையால் சந்தர்ப்பத்தை நழுவவிடவேண்டாம்' என்று சொல்லி இரவோடு இரவாய், லாரியைக்கொண்டுவந்து, சாமானை ஏற்றிக்கொண்டு போய் அந்த வீட்டில் வைத்துவிட்டாராம். மறுநாள் காலை குடித்தனத்துக்கு 60 ரூபாய் கொடுப்பதாகச் சொன்னவருடன் சொந்தக்காரர் வந்து பார்த்து பேந்தப் பேந்த விழித்தாராம். முதலில் ஒருவர்க்கொருவர்காரசாரமான வார்த்தைகளைப் பரிமாறிக்கொண்டார்களாம். கடைசியில் அண்டை அயல்வீட்டுக்காரர்கள் வந்து சமாதானம் செய்து மாமாவுக்கே 50 ரூபாய்க்கு முடிவு செய்துவிட்டார்களாம். வாடகை அதிகந்தானும். இருந்தாலும் இடம் என்று ஒன்று கிடைத்ததே என்று மாமாவுக்குப் பரம சந்தோஷம். இல்லாமலென்ன, பஞ்சாபிலிருந்து உயிருக்குப் பயந்து ஓடி வந்தால் இங்கு இடமில்லாமல் வேறு திண்டாடவேண்டியிருக்கிறதே என்று மாமா வெளியே சொல்லமாட்டாமல் மனதிற்குள்ளேயே கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார். அப்படித் தோன்றுவது நியாயந்தானே! என்னதான் நெருங்கிய பந்துக்களாயிருந்தால் கூட இந்தக் கஷ்ட காலத்தில் ஒரு குடும்பத்தோடு இன்னொரு குடும்பம் சேர்ந்து இருப்பதென்பது கஷ்டந்தானே! ஆகையால் முதலில் இடம் என்று ஒன்று அகப்பட்டால் போதும் என்று மாமா அவர் சிநேகிதர் ஏற்பாட்டுக்கு ஒப்புக்கொண்டுவிட்டார். இதெல்லாம் மாமா சொன்ன கதைதான். உண்மையாகத்தான் இருக்கும். ஆனால் இப்படிப்பட்ட பேராசை பிடித்தலையும் வீட்டுச் சொந்காரர்கள் விஷயத்தில் இந்த மாதிரி நடந்துகொள்வதில் சிறிதுகூடப் பிசகில்லை என்று பெரிய நாத்தனார் சொல்கிறார். ஏனென்றால் பெரிய நாத்தனார் குடியிருக்கும் வீட்டுச் சொந்தக்காரர் இப்படிப்பட்டவர்தானும். இதனால் சொந்தக்காரர்கள் என்று பெயர் வைத்துக்கொண்டிருக்கும் எல்லோரும் கெட்டவர்கள் என்று நான் சொல்லவில்லை. அவர்களில்

'...விட்டைக் காலி செய்யச்சொன்னால் குடித்தனக்காரர் 'ஷரா' பேசுகிறார்...'

நல்லவர்களும் இருக்கிறார்கள். ஆனால் அந்த நல்லவர்கள் எங்கோ சிலர்தான் இருக்கிறார்கள். குடி இருப்பவர்களிலும் எத்தனையோ பேர்கள் வீண் சண்டையும் கூச்சலும் போட்டுக்கொண்டு சொந்தக்காரர்கள் கண்ணில் விரலை விட்டு ஆட்டுகிறார்கள். தற்பொழுது சொந்தக்காரர் குடியிருப்போர் தகராறுகளைப்பற்றிப்பக்கம்பக்கமாய் எழுதினால் கூட வளர்ந்துகொண்டேதான் இருக்கும். அவ்வளவு தூரம் போவானேன்? எங்கள் எதிரகத்தில் ஒரு குடித்தனக்காரர் சொந்தக்காரரைப் படுத்துகிறபாடு சொல்லித் தரமல்ல. அதாவது சொந்தக்காரரின் குடும்பம் சிறியதாக இருக்கும்போது வீட்டில் ஒரு 'போர்ஷனை' ஒருவருக்கு வாடகைக்கு விட்டார். இப்பொழுது சொந்தக்காரரின் குடும்பம் பெருத்துவிட்டது. பிள்ளைக்குக் கலியாணம் செய்துவிட்டார். நாட்டுப் பெண் வந்திருக்கிறாள். இடம் போறவில்லை. வீட்டைக் காலி செய்யச்சொன்னால் குடித்தனக்காரர் 'ஷரா' பேசுகிறார். பாவம்! சொந்தக்காரருக்கு இரண்டு மாதமாய்த் தெருத் திண்ணையில் படுக்கை! எப்படி இருக்கிறது நியாயம். சரி! நமக்கேன் அந்தவீண் வம்பெல்லாம். மாமாவுக்கு வீடு கிடைத்துவிட்டது.



''......மாமாவிடம் அந்த மனுஷ்யர் நடந்த விஷயத்தைச் சொன்னார்......''

சென்றவாரமே எழுத வேண்டுமென்றிருந்தேன். மறந்தேபோய் விட்டேன். இந்திரா, வாஸுவை அழைத்துக் கொண்டு அங்கே வரப்போகிறாளாம். பர்மா நிர்வாக சபையில் மந்திரிகள் சுடப்பட்ட செய்தியைக் கேட்டபிறகு இந்திரா ரொம்பவும் பயப்படுகிறாள். வாசுவைப் பொது வாழ்விலிருந்து கொஞ்ச நாளைக்கு ஓய்வு எடுத்துக் கொள்ளச் சொல்லவேண்டுமென்பது அவளுடைய அபிப்பிராயம். தேச நலத் தியாகிகளுக்குக் கிடைக்கும் 'வெகுமதியை'ப்பார்த்து அது பயப்படுவது இயற்கை தானே! ஆனால் வாஸு சொல்கிறார்: 'ஆமாம். பொதுவாழ்வில்—தேசசேவையில் ஈடுபடுகிறவர்களுக்குத்தான் இந்தக் கதி என்கிறீர்கள். வங்கத்திற்கும், பஞ்சாபிற்கும் சென்று பாருங்கள். நிரபராதிகளான ஆண்களும், பெண்களும், குழந்தைகளும்நடுத்தெருவில்குத்திக் கொல்லப்படுகிறார்கள். ஆகவே எந்த விதத்திலும் மனிதனுக்குச் சாவு நிச்சயம். அப்படி செத்து முடிவதற்குள் இந்த 'இருள் சூழ்ந்த' உலகத்தை நல் வழிச் சேர்க்க ஏதாவது சிறிது சேவை செய்தோம் என்ற ஆறுதலையாவது அடைந்து இறப்பது மேலில்லையா?' என்று.

இப்படி தேசம் கண் மண்—நல்லது, கெட்டது, நியாய அநியாயம்—தெரியாமல் தலைவிரித்தாடுவதைப்பார்த்தால் ஒரே பயங்கரமாய் இருக்கிறது. மிருகம் மாதிரி மனித வேட்டைக்கு ஆரம்பித்துவிட்டால் அப்புறம் நாகரிகப் பேச்சு என்னவேண்டியிருக்கிறது! என்னமோ மனது ஒரே கலவரமாயிருக்கிறது போயேன்.

அதோ அவர் வருகிறார். கோபுவுடன் இவ்வளவு நேரம் ஏதோ பேசிக்கொண்டிருந்தார். அதுபற்றி ஏதாவது 'அந்தப்புரத்தில்' கலந்து பேசுவதற்குத்தான் இருக்கும். 'இங்கே' கலந்து யோசிக்காமல்தான் ஒன்றுகூட நடைபெறுதே. அன்றுமுதல் இன்றுவரை இந்த நல்ல குணங்களிலெல்லாம் சிறிதுகூட மாறுதல் இல்லை.

இப்படிக்கு,

உன் அன்புள்ள.

அலமு.

பல்லவி

3
கருணதோ நன்னு காபாடு ராடி

அனுபல்லவி

3
தருணமெரிகே தாரதம்ய முலேக
4 3 3
தனபக்துல ப்ரோசு தயாகர

சரணம்

3
வனஜாக்ஷ நீவு வரதண முல
3
வஹிம்ஸுவாடனி விநிவச்சி தினி
மனஸார ஸ்ரீனி வாஸ விநுத
3 3 4 4
மதன பாத தலோ படஸேயக

ராகம்:மேகரஞ்ஜனி] 15—வது மேளகர்த்தா (மாயாமாளவ கௌளை)ஜன்யம். [தாளம் : ஆதி

ஆ: ஸரிகமநிஸ் அவ: ஸ்நிமகரிஸ.

பல்லவி

; ; ; — ஸாரீ கா ; கா	மா மா ; மக	ரீ ஸ ரி கா ரீ ‖
; ; ; — க ரு ண . தோ	ந ன் னு . கா .	. பா . . டு ‖
ஸா , ரிஸ்நி —2. ஸாரீ கா ; கா	மா ம க ரி க ம க	ரீ ஸ ரி கா ரீ ‖
ரா . ம . . — க ரு ண . தோ	நன்னு . . . கா .	. பா . . டு ‖
ஸா , ரிஸ்நி —3. ஸா ரீ கா ; மா	க ம நீ ; மா	; ம க ரீ ஸ ரி ‖
ரா . ம . . — க ரு ண . தோ	நன் . னு . கா	. பா . . டு . ‖
ஸரிகரிஸ்நி — 4. ஸா ரீ கா ; மா	க ம நிஸ் ரீ ஸ் நி	மா க ம கா ரீ ‖
ரா . . . ம . — க ரு ண . தோ	நன் . னு . . கா .	. பா . . டு ‖
ஸரிகரிஸ்நி —5. ஸாரீ கா ; மா	மா நி ஸ் ரி க் ம்க்	. க்ரிஸ்நிநிமகம ‖
ரா . . . ம. — க ரு ண . தோ	ந ன் னு . . . . கா	. . பா . . . டு . ‖

கரிகரிஸ்நி —
ரா . மா .. — (கருணதோ நன்னு)

அனுபல்லவி

; ; ; ம ா நீ , ஸ் ா , ரீ	ஸ் ரி க் ா ; ரி க்	ம் ா க் ா ம் க் க் ா ரீ ‖
; ; ; த ரு - ண - மெ	ரி - கே - தா -	ர தம் . . . ய ‖
ஸ்ரிரிஸ்நி — ஸ் ரி ஸ் நி ம ா ; ம ா	க ரி க ா ; ஸ் ா	; ஸ் நி ம ா க ம ‖
மு . லே க — த . ந . ப க் . து	வ . ப்ரோ . சு	; த . . யா . ‖

க ரி க ரி ஸ நி
க . ர . . . (கருணதோ நன்னு)

சரணம்

; ; ; ம ா ம ா. ம ா ; ம ா	நீ நீ : ஸ் நி	ரி ஸ் நீ ம ா ம க ‖
வ ன ஜா . க்ஷ	நீ வு . வ .	ர . . கு ண . ‖
ரிகரிகஸா — ஸ ரி ஸ நி மா ; மா	நி நீ ; ஸ ரி	க ரி ரி க ம க ரீ ‖
மு . . . ல — வ . ஹிம் . சு . வா	டனி . வி .	நி . வ . . . ச்சி ‖

க ரி ஸ ா ;
தி . னி .

பின் வரும் ஸாஹித்யம் அனுபல்லவி மாதிரி
ம ன ஸ ா ர ஸ்ரீ னி வ ா ஸ வி நு த
மதன பாத குலோ ப ட ஸே ய க (கருணதோ நன்னு)

(சென்ற வாரத் தொடர்ச்சி)

“வீணாக ஒரு பெண்ணின் வாழ்வு ராஜ்யத்திற்காகப் பலியிடப்படுவதை நான் ஏற்கமுடியாது—காதலின் தெய்வீகத்திற்கு முன்பு அந்தஸ்தை எண்ணிப் பார்க்கும் தங்களின் ஆணைக்குக் கீழ்ப்படிவது சாத்யமல்ல.”

“குமாரகுப்தா! நீ என் தனயன் என்ற காரணத்திற்காக என் கோபத்தை அடக்கிக்கொள்ள வேண்டியிருக்கிறது. பார்...எனக்கும் தலை நரைத்து விட்டது. நான் தேவனின் பாதத்தைச் சேரும் காலமும் வெகு தூரத்தில் இல்லை. அரசாங்கக் காரியத்தைக் கூட என்னுல் சரியாகக் கவனிக்கமுடியவில்லை. எதிர் காலத்தில் உன்னைத்தான் நான் நம்பி இருக்கிறேன். என் உள்ளத்தை ஏன் புண்படுத்துகிருய்......? அதுதான் உன் விருப்பமா?” என்ருர் உருக்கமான குரலில்.

தந்தையின் கேள்விக்கு அவன் அளித்தபதில் மௌனம்தான். ஒரு பக்கம் அந்த மோகினியின் ஒளி நிறைந்த புன்னகை. மற்ருெரு பக்கம் தந்தையின்—சாம்ராட் சந்திர குப்தரின் உருக்கமான வேண்டுகோள். எதற்கு செவிசாய்ப்பது என்று அவனுக்கே தெரியவில்லை.

தன் வார்த்தைகளால் குமாரனுடைய மனம் மாறி விடுமென்று எண்ணிஞர் சக்ரவர்த்தி. தம்முடைய பேச்சால், கட்டாயம் அவன் மனம் இளகியிருக்கும் என்று எண்ணி அவன் முகத்தையே ஆவலோடு கவனித்துக்கொண்டிருந்தார்.

மௌரிய குலத்திற்கு இழுக்குத் தேட விரும்பாததால்தான் அவர் இவ்வளவு தூரம் தன்னிடம் புத்தி கூறுகிருர் என்று இளவரசனுக்குத் தெரியும். குமார குப்தனுக்கு மறுத்துச் சொல்ல ஒன்றும் தோன்றவில்லை. அவர் பேச்சிலும் ஏதோ நியாயம் இருப்பதாக அவன் மனத்திற்குத் தோன்றியது. சிறிது நேரம் அவர்களின் மத்தியில் ஆழ்ந்த அமைதி பரவியிருந்தது. அந்த அமைதியைக் குலைத்துக்கொண்டு மேலெழுந்தது சந்திரகுப்தரின் குரல்.

“உனக்காக செலூகஸின் மகள்கூடக்காத்திருக்கிருள். கிரேக்கர்களின் அழியாத நட்பு ஒவ்வொரு சமயமும் நமக்குத் தேவையாயிருக்கும். நமது ராஜீய லட்சியத்தை நிறைவேற்ற அவர்களின் ஒற்றுமைகூட அவசியம்தான்” அதற்குமேல் குமார குப்தனுல் சகித்துக்கொண்டிருக்க முடியவில்லை. ராஜ்யத்தின் பெருக்கத்திற்குத் தன்னை சந்திரகுப்தர் ஒரு கருவியாக்கிக்கொள்வதை அவன் விரும்பவில்லை. ஒன்றும் பேசாமல் அவன் வெளியேறிஞன். அவன் மனம் குழம்பிப் போயிருந்தது.

ஒரு நிமிஷம் கூட அவனுல் வஸந்திகாவைச் சிந்தித்துப் பார்க்க முடியவில்லை. அவளை எண்ணிப் பார்க்கக்கூடத்தைரியம் வரவில்லை. ஏனெனில் அவளை அவன் சந்தித்து வெகு நாட்களாக விட்டன.

‘உலகில் நிச்சயமாகக் காதல் என்பதே நிலை பெற முடியாதோ? அந்த அமரத் தன்மையைச் சிந்தித்துப் பார்க்கக்கூட உரிமையில்லாமல் தான் மனிதன் வாழ வேண்டுமா? அப்படியாஞல் தெய்வீக உணர்ச்சிகள் நிறைந்த காதல் கனவுலகமாகத்தான் இருக்க வேண்டும்!’

அவன் எண்ணக்கடல் புரண்டு குமுறிக்கொண்டிருந்தது. எத்தனையோ நினைவு அலைகள்? எல்லாம் உடைந்து சிதறியவைதான்.

‘தன் தந்தை தன்னை வேண்டிக்கொண்டது எதற்காக என்று அவனுக்கு நன்ருகத் தெரியும். மௌரிய அரச குலம் வீண்பழிச் சொல்லுக்கு ஆளாகக்கூடாது என்பதுதான் அவர் விருப்பம். அவர் சொல்வதிலும் ஏதோ நியாயம் இருப்பதாக அவனுக்குத் தோன்றியது. சாம்ராஜ்யப் பிரஜைகள்கூட இளவரசனின் காதலைத் தவருகத்தான் புரிந்துகொண்டார்கள். தங்கள் எதிர்கால மகாராணி ஒரு ஏழைப் பெண்ணுக இருக்கக்கூடாது என்று தான் அவர்களும் விரும்பிஞர்கள்.

செலூகஸ் நிகடாரின் மகள் கூட நல்ல அழகிதான். ஆனுல் அவள் வஸந்திகாவுக்கு ஈடாகமாட்டாள். இருந்தாலும் செலூகஸ் மகளை மணந்துகொண்டால் கிரேக்கர்களின் நட்பும் எளிதில் கிடைக்கும். இதையெல்லாம் எண்ணிப் பார்த்தபோது, அவன் தன் காதலியையே மறந்துவிட எண்ணிஞன். தன் காதலை மௌரிய சாம்ராஜ்யத்துப் பிரஜைகளின் அன்புக்காகத் தியாகம் செய்துவிட எண்ணிஞன். தன் தந்தையிடம் தன் சம்மதத்தைத் தெரிவித்துவிட்டான். இளவரசன் பட்டாபிஷேகத்திற்கும் நாள் குறிப்பிடப்பட்டு நகரெங்கும் பறை சாற்றப்பெற்றது!

குமாரகுப்தன் தான் வஸந்திகாவுக்குச் செய்து கொடுத்திருந்த வாக்குறுதியையே மறந்து விட்டான்!

* * *

“இது நிச்சயமாகவா இருக்கும்? ஏன் இருக்க முடியாது? ஐயோ இது நிஜமாக இருக்குமாஞல் என் கதி? வெண் மதியின்மேல் ஆணையிட்டுக் கூறிய அதே இளவரசர் வேருெருவளின் கையைப் பிடிக்கவும் விரும்புகிருரா? அவர் கூறிய வார்த்தைகளைக்கூட மறந்துவிட்டாரா? ஆண்கள்... ஆம். இன்று தான் ஆண்களே ஒவ்வொரு சமயத்தில் கோழைகளாக மாறிவிடுகிருர்களென்று தெரிகிறது.” வஸந்திகாவின் உள்ளம் பொருமிக் கொண்டிருந்தது. பெரு மூச்சுக்கள் புயலைப்போல் உருவெடுத்தன. அவள் மனத்தில் சோகத்தின் அந்தகாரமும் ஏமாற்றத்தின் ஆழமும் பெண்மையின் மிருதுத்தன்மையை அதிர்ச்சிக்குள்ளாக்கின.

வாழ்க்கையில் இனி அவள் வெளிச்சத்தைக் காணமுடியாது. அந்த வெளிச்சத்தை வேருெருவள் தான் அடையக் கொடுத்து வைத்திருக்கிருளே! இனிமேல் அவள் இருண்ட வாழ்க்கைதான் நடத்த வேண்டியிருக்கும்! இதை நினைத்துப் பார்த்தபோது அவள் உள்ளம் விம்மியது. தன மார்பை ஒரு கையால் அழுத்தியபடியே அங்கிருந்த கல்லில் சாய்ந்து உட்கார்ந்தபடியே கண்களை இறுக

மூடிக்கொண்டாள். "இளவரசே! ஒரு ஏழைப் பெண்ணின் காதல் உங்களை என்ன செய்யமுடியும்?... நீங்கள் வேண்டுவதெல்லாம் கிரேக்க அதிபதியின் குமாரியை அல்லவா?...அதுவோ உங்களுக்குக் கிடைத்துவிட்டது. பேதை வஸந்திகா இனி ஒரு துரும்புக்குச் சமானம்! என்று அவள் வாய் முணுமுணுத்தது. இளவரசன் தன் கண்ணெதிரில் நின்றுகொண்டிருப்பதுபோல் அவளுக்குப் பிரமை தட்டியது.

வஸந்திகா தன் மஞ்சத்திலிருந்து மெதுவாகத் தலையெடுத்துப்பார்த்தாள். அவள் கண்கள் அழுதழுது வறண்டுவிட்டிருந்தன. கூந்தல் அவிழ்ந்து மஞ்சத்தின் மேல் புரண்டு கொண்டிருந்தது, வெளியே நிலா பட்டப்பகல்போல் ஒளி வீசிக்கொண்டு வான வீதியில் உலாவிக்கொண்டிருந்தது. நிலவின் ஆனந்தத்தில் சோகத்தின் தவிப்பை அவளால் தாங்க முடியவில்லை. பெண்மையின் பலஹீனத்தில் அந்தச் சம்பவம் புகுந்து இதயத்தைத் தளரச் செய்துவிட்டது. கருகிய தன் கனவை நினைத்து அவள் நெஞ்சம் மெல்ல மெல்ல விம்மி அடங்கியது.

"காதல்! காதல்!..." என்று காதல் கீதம் பாடிய அவள் இதயப் பறவை இன்று "சாதல்! சாதல்!" என்று துயர கீதம் ஒலித்து ஓய்ந்தது.

"என்ன? இதுதான் என் வாழ்வின் கடைசி முடிவா?...இருக்க முடியாது! தோல்வி என் வாழ்வில் இடம்பெற்றிருக்கக்கூடாது! ஊழியின் வேகத்தில் அடித்துச் செல்லப்பட்ட ஒரு பெண்-அதை எவ்வாறு எதிர்த்து நிற்பாள் என்பதை உலகத்திற்குக் காட்ட வேண்டும்! ஹிந்துஸ்தானத்தில் பிறந்த ஒவ்வொரு நாரீமணியும் தோல்விக்காக மனம் வருந்தாத பெண் சிங்கங்கள் என்பதை நிலைநிறுத்த வேண்டும். பெண் குல மானத்தைக் காப்பதற்கான இந்தப் பரீக்ஷை-என் கடைசி வெற்றி! இது என் ஆசை! கடமையுங்கூட!......

ஏதோ யோசனையில் வெற்றி பெற்ற பெண்மையின் உணர்ச்சியுடன் அவள் பெண்ணுள்ளம் கொதித்தது. நெஞ்சு வெடிக்கும் அவள் துயரம் எங்கோ மறைந்துவிட்டது. சற்று நேரத்துக்கு முன் இடியும் புயலும் இடம்பெற்றிருந்த அவள் உள்ளக்கடல் மறுநிமிடம் அமைதியாகப் பிரவகித்துக்கொண்டிருந்தது.

* * * *

மறுநாள்; அரண்மனை வாயிலிலிருந்து முரசு முழங்கிக்கொண்டிருந்தது. முழக்கத்தின் எதிரொலியில்கூடக் குதூகலம் நிரம்பி வழிந்துகொண்டிருந்தது. அன்றுதான் [மௌரிய சக்ரவர்த்தியின் மகன் குமார குப்தனுக்கு யுவராஜ பட்டாபிஷேகம். இளவரசனின் திருமணமும் அன்றுதான் நடக்க விருந்தது. அலை அலையாக ஜனங்கள் அரண்மனை நோக்கிச் சென்றுகொண்டிருந்தார்கள். தங்கள் புதிய அரசனைப்பார்க்க அளவற்ற ஆவல் கொண்டிருந்தார்கள் பிரஜைகள்.

மௌரிய இளவரசன் குமார குப்தனுக்கு அழகுக் கலைகளில் பிரியம் அதிகமல்லவா? அதற்காகச் சித்திரப்போட்டி ஒன்றுகூட நடக்கவிருந்தது. சித்திரப்போட்டியில் இடம்பெற ஓவியர்களெல்லோரும் விரைந்து வந்து கொண்டிருந்தனர். ஒவ்வொருவரும் அழகான ஜீவசித்திரங்களை வரைந்து அரசரிடம் சமர்ப்பிக்கக் கொண்டு வந்தனர். உலகிற்குத் தெரியாது மறைந்து கிடந்த சித்திரக்காரர்கள் கூட அரசனின் அபிமானம் பெற வந்தனர்.

அரண்மனை எங்கும் எள் விழ இடமில்லாதபடி அவ்வளவு கூட்டம். அந்தப் பகல் நேரத்தில் கூடத் தீபவரிசைகள் ஜோதியை அள்ளித்தெளித்துக்கொண்டிருந்தன. அந்தப் பிரகாசத்தின் ஊடே மௌரிய சாம்ராஜ்யத்தின் ஒவ்வொரு பிரஜையும் குதூகலத்தால் மின்னிக்கொண்டிருந்தான். இடி இடித்தாலும் சப்தம் கேட்காத அந்தக் கும்பலுக்கிடையில் திடீரென நிச்சலனமான அமைதி நிலவியது.

அந்த ஆழ்ந்த மௌனத்தின் அஞ்சலிப்புக்கிடையில் சாம்ராட் சந்திர குப்தரின் குரல் எதிரொலித்தது. உறுதியான உடற்கட்டும், உயர்ந்த ஆகிருதியும், சிவந்த மேனியும் யாவரையும் அவரிடம் தலைவணங்கச் செய்தன. பிரஜைகளின் வணக்கங்களுக்குப் பதில் அளித்தபின் ஆசனத்தில் அமர்ந்தார். தந்தையின் அருகில் குமார குப்தன் உட்கார்ந்துகொண்டிருந்தான். மிகுந்த சௌந்தரியத்தால் உண்டாகும் முகக்களை அவன் வதனத்தில் தேஜஸை உண்டாக்கியது. திரண்ட புஜங்களை ராஜசின்னங்களாலான வைரங்கள் அலங்கரித்திருந்தன. அவன் அகன்ற மார்பில் வீரப்பதக்கம் ஒளி வீசியது.

ஓவியர்கள் தங்கள் சித்திரங்களை இளவரசன்முன் காணிக்கையாகக் கொண்டு செலுத்தினர். சந்திரகுப்தரின் முகம் ஒவ்வொரு சித்திரத்தைப் பார்த்தும் ஒவ்வொருவித மாறுதலை அடைந்தது. குமார குப்தனுக்கும் திருப்தி ஏற்படவில்லை.

திடீரென்று ஒரு மெல்லிய ஓசை அந்த அரங்கத்தில் ஏற்பட்டது. 'ஜல் ஜல்' என்ற மெட்டியின் ஓசைதான் அது. ஆடவரின் மனத்தை மயக்கும் 'கலீ'ரென்ற சப்தம் எங்கும் பரவியது. அந்த மெட்டியின் சப்தத்தில்கூட ஒரு அழகு மிதந்து வந்தது. அவள்—அந்த மங்கை மெல்லிய திரையினால் தன் முகத்தை மறைத்திருந்தாள். அந்தத் திரையையும் ஊடுருவியது அவள் கண்களின் ஒளி. சபையினருக்கே வியப்பாக இருந்தது அவள் செய்கை. வழியெங்கும் நிறைந்திருந்த ஜனங்கள் அவளுக்காக விலகி வழிவிட்டனர். சாம்ராட் சந்திர குப்தரின் முன் அஞ்சாது வரும் பெண்ணின் செய்கை வியப்பாகத்தானே இருக்கும்? எல்லோரும் கற்சிலைபோல ஸ்தம்பித்து நின்றனர். தாரகையைப் போல மின்னிக்கொண்டு அவள் இளவரசன் முன் சென்றாள். வெண்மதியை மறைத்திருந்த மேகம்போல அவள் திரை விலகியது. சபை ஒரு கணம் வியப்பில் மூழ்கியது......அவள்தான் வஸந்திகா!

ஏதோ ஒரு வஸ்துவை எடுத்து இளவரசனின் முன் வைத்தாள. அதைச் சுற்றிலும் மெல்லிய துணி மறைத்திருந்தது. அவள் உதடு அசைந்தது. ஆம்! அவள் பேசுகிறாள். சபையினரின் உள்ளத்தைக் குலுக்கி வைத்தவள் வாய் திறந்து பேசினாள்.

'அரசே! தங்கள் திருமணத்தில் என் காணிக்கையை ஏற்றுக்கொள்ளவேண்டும்!" என்றாள் வணக்கமாக. 'கலீ'ரென்ற மெட்டியின் ஓசையையும் தோற்கடித்தது அவள் கணீரென்ற குரல். அவள் குரலில் மெல்லிய ஏளனம் கலந்திருந்தது. அதை சக்ரவர்த்தியும் இளவரசரும் கவனிக்கவில்லை. இளவரசன் வஸந்திகாவை உற்று நோக்கினான். யௌனத்தின் ஜீவ சௌந்தர்யம் தேங்கிக் கிடந்த அவள் வதனம் அவன் காதலை மறுபடியும் சுடர் விட்டெரிய வைத்தது. கனவில் ஒரு விநாடியும் நனவில் ஒரு விநாடியும் எண்ணி மகிழ்ந்திருந்த அவள் அழகை அவன் கண்ணாரக் கண்டான். நுண்ணிய ஆர்வங்களை வளர்த்து வைத்திருந்த அவள் வனப்பு மறுபடியும் அற்புத எண்ணங்களைத் தூண்டிவிட்டது. பழைய பிரகாசத்தைவிட அதிக ஜோதி அவன் கண்களில் நிறைந்திருந்தது. குமார குப்தனைக் கண்டதும் அவள் கன்னங்கள் சட்டென்று நாணிச் சிவந்தன.

சந்திரகுப்தர் அவள் கொடுத்ததின் மேலிருந்த திரையை மெல்ல நீக்கினார். அவை இரண்டு சித்திரங்கள்தான். கண்ணைப்பறிக்கும் அந்த ஓவியத்தைப் பார்த்த வண்ணம் அவர் சபையையே மறந்துவிட்டார். மெல்ல ஒரு கணம் சென்றது. அந்தச் சித்திரத்தை இளவரசனிடம் கொடுத்தார்.

பின் சக்ரவர்த்தி அந்த அழகுத் தேவியைப் பார்க்கத்திரும்பினார். என்ன! அவள் மறைந்து விட்டாள்! சற்று நேரத்திற்கு முன் சபையைத் தினற அடித்தவள் திரும்பிச்சென்ற ஓசையைக்கூட அவன் கேட்கவில்லை. வந்த அடிச்சுவடு தெரியாமல் சபையினரின்—சக்ரவர்த்தி உள்பட—ஒவ்வொருவரின் உள்ளத்திலும் அழியாத அழகு முத்திரையைப் பதித்துவிட்டு மறைந்துவிட்டாள் மின்னலைப்போல!

குமாரகுப்தன் அந்தச் சித்திரங்களைப் பார்த்துத் திடுக்கிட்டான். நட்சத்திரங்களின் ஒளியில் குமார குப்தன் வஸந்திகாவுக்குச் சத்தியம் செய்து கொடுத்த காட்சி அதில் தீட்டப்பட்டிருந்தது! வஸந்திகாவின் வாழ்க்கையின் இன்பத்தின் இறுதி கீதமான அந்தக்காட்சி அவன் இதயத்தில் கடலலைகள் போன்ற உணர்ச்சிகளை உண்டாக்கியது. தன் மார்பை அழுத்திப்பிடித்தபடியே அவன் தன் ஆசனத்தில் சாய்ந்து விட்டான். சோக கீதத்தை ஒலித்த அந்தச் சித்திரத்தின் காட்சி அவனை உணர்விழக்கச் செய்துவிட்டது.

சாம்ராட் சந்திரகுப்தர் சிந்தனையில் ஆழ்ந்தார். ஏதோ ஒரு சாதாரண சம்பவம் என்று நினைக்க இடமில்லாதபடிச் செய்துவிட்டது சந்தர்ப்பம். பட்டாபிஷேக

வேளையும் நெருங்கிவிட்டது. சக்ரவர்த்தியின் சிந்தனைச் சுழற்சி நின்றது. சித்திரத்தைப்பார்க்கும் தன் மகனைப்பார்த்தார், ஆ! அவன் மூர்ச்சை அடைந்துவிட்டான்! திடுக்கிட்டார் சந்திரகுப்தர். மின்னலைப்போல வந்த அவளுக்குப்பின் இடியும் இடித்தது! இளவரசனின் பட்டாபிஷேகமும், திருமணமும் ஒத்திவைக்கப்பட்டன. வஸந்திகா! உன் எண்ணம் நிறைவேறிவிட்டது.

* * * *

அன்றிரவு நடுநிசியை அணுகும் தருணம்; சோர்ந்த உள்ளத்துடன் பாடலிபுரத்து மக்கள் தூங்கிக்கொண்டிருந்தனர். 'கிரீச் கிரீச்' என்றலரும் ஆந்தையின் கூக்குரலைத் தவிர இரவின் அமைதி கலைக்கப்படவில்லை. சாம்ராஜ்யப் பிரஜைகளை சோர்வுறுமல் செய்யவோ என்னவோ கோட்டை வாசலின் மணி அடிக்கொரு தரம் பேரொலியைக் கிளப்பி விட்டு ஓய்ந்தது.

உள்ளம் வெதும்பிப் போய் தன் குடிசையில் உட்கார்ந்திருந்தாள் வஸந்திகா. காலையில் அரண்மனையில் நடந்த சம்பவத்தை நினைத்துத் தனக்குள்ளேயே மெல்ல நகைத்துக்கொண்டாள். அவள் கரிய விழிகளில் அளவிட முடியாத ஏக்கமும், சோகமும் ததும்பி நின்றன. அந்த துரதிர்ஷ்டக்காரிதான் தன் தந்தையையும், தன் காதலனையும் ஒருங்கே இழந்துவிட்டாளே! இனி அந்தத் தனிமை என்ற கோரமான சித்திரவதையிலிருந்து அவளைத் தப்புவிக்கக்கூடியவர்கள் இனி யார் இருக்கிறார்கள்?

தூரத்தில் இருந்த கோட்டையின் மணி கடைசியாக ஒரு தடவை ஒலித்துவிட்டு ஓய்ந்தது. அதைத் தொடர்ந்து 'டக் டக்' என்ற குதிரையின் காலடி ஓசை முன் வாசலில் கேட்டது. படீரென்று திறந்து கொண்டன அவள் குடிசைக் கதவுகள். மின்னலைப் போல உள்ளே நுழைந்தான் ஒரு வீரன். உள்ளே நுழைந்த வனைக் கண்டதும் வஸந்திகா திடுக்கிட்டாள். அவன் வேறொருவனுமில்லை!...இளவரசன்தான்!... உள்ளே நுழைந்த இளவரசன் வஸந்திகாவை அணுகினான். கோபமும், வியப்பும் ஒளி வீசிய விழிகளுடன் அவனை நோக்கிய வஸந்திகா பெண்சிங்கம்போல ஓரடி பின் வாங்கினாள். அதைக் கண்டதும் குமாரகுப்தன் சடக்கென அங்கேயே நின்றுவிட்டான். வெறித்த பார்வையுடன் கோரமான—அளவிட்டறிய முடியாத சோகமும், ஏளனமும் கலந்த சிரிப்பொலி அவள் உதட்டுக் கோணத்தில் இருந்து கிளம்பியது. தன்னெதிரே நின்ற குமாரகுப்தனைத் தன் வெட்டும் கூரிய கண்களால் நோக்கியபடியே ஒரு கணம் அசையாமல் நின்றாள்.

"இளவரசே! ... உங்களுக்கு இங்கே வரப் பைத்தியமா பிடித்திருக்கிறது? உங்கள் காதலியான பழைய வஸந்திகா மறைந்துவிட்டாள். இனி அவள் திரும்ப மாட்டாள். நீங்கள் வேண்டுவதெல்லாம் கட்டழகியான ஸெலூகஸின் மகளையல்லவா! அவள் இங்கேயில்லை. வஸந்திகாவும் இல்லை. இவள் புதிய வஸந்திகா! சென்று விடுங்கள். உங்களுக்கு இங்கே இனி வேலையில்லை" இதைக்கூறிவிட்டு அவள் தன் தகப்பன் செதுக்கி வைத்துச் சென்ற கற்சிலை போல அசையாமல் நின்றாள்.

அவளையே வைத்த கண் வாங்காமல் நோக்கிக்கொண்டிருந்தான் குமார குப்தன். "வஸந்திகா!... என்ன இது?...நான் என்ன கனவா காண்கிறேன். மறுபடியும் என் காதலை எரிய வைத்துவிட்டு வேடிக்கை பார்க்கிறாயா? இதென்ன? நீதான் இவவாறு பேசுகிறாயா?"...

வஸந்திகா அந்தக் கேள்விக்குப் பதில் ஒன்றும் சொல்லவில்லை, அவன் அருகில் வந்து நின்று சற்று உரத்த குரலில் பேசினாள்.

"நீங்கள் அன்று சபதம் செய்தீர்களே அதை மறந்துவிட்டீர்களல்லவா? பின் ஏன் என்னைப்பற்றிக் கவலைப்பட வேண்டும்? என்னைக் குறித்து எவரும் கண்ணீர் சிந்த வேண்டிய அவசியம் இல்லை. ஆண்டவன் என்னைக் காப்பாற்றுவான் என்ற திடம் எனக்கு உண்டு" இவ்வாறு பேசி வந்தவளை இடைமறித்து இளவரசன் "ஹூம்...வஸந்திகா! நீ புரியாமல் பேசுகிறாய். சக்ரவர்த்தி நாளைக் காலையில் உன்னைக் கைது செய்யப்போகிறார். வா—நாம் இருவரும் சென்றுவிடுவோம். மனிதர்களின் கண்களுக்கே தட்டுப்படாத பிரதேசத்திற்குச் சென்று நாம் வாழ்வோம்."

அதைக் கேட்டுவிட்டு வஸந்திகா தன் விழிகளைச் சுழற்றி அவனைப் பார்த்து மெல்லிய நகை செய்தாள். "ஆஹா!......வஸந்திகா என்றுமே தன்னைப்பற்றியே கவலைப்பட்டதில்லை. பிறரின் உதவியும் அவளுக்குத் தேவையில்லை. அவளைக் காப்பாற்றிக்கொள்ள அவளுக்கு நன்றாகத் தெரியும்." என்றாள். அவள் பேச்சில் இருந்த ஏமாற்றத்தின் குரோதத்தை குமாரகுப்தனால் தாங்க முடியவில்லை.

"வஸந்திகா! ஏன் வீணாகப் பேசுகிறாய்? பழைய நட்பை மறந்து விடும் நன்றி கெட்டவன் என்று என்னை நீ எண்ணிவிட்டாய்! வஸந்திகா! இதைக் கவனமாய்க் கேட்டுக்கொள். இளவரசன் உன்னை மறந்துவிடவில்லை. தன் அரசியை அழைத்துச் செல்வதற்குத்தான் அவன் வந்திருக்கிறான். இந்தக் கரிய இரவில் நாம் மறைந்துவிட எவ்வளவோ இடங்கள் இருக்கின்றன. நாம் இன்னும் சிறிது நாழிகைக்குள் தலைநகரின் எல்லையைத் தாண்டிவிடுவோம். இப்பொழுதே கிளம்பிவிட்டால் பாடலிபுரத்தை விட்டு விடியுமுன் வெகுதூரம் சென்றுவிடலாம். இதோ இந்த மூட்டையில் ஒரு சாதாரண வீரனின் உடுப்புக்கள் இருக்கின்றன. உடனே அணிந்துகொள்! தாமதிக்காதே!" என்றான் இளவரசன்.

"ஆகட்டும்; இளவரசே!" இதைக் கூறிவிட்டு மௌனமாக அவன் அருகில் வந்து நின்றாள். குமாரகுப்தனின் உறுதியான கரங்கள் அவளை அணைத்துக்கொண்டன. அவள் மெல்லிய இதழ்களின் ஸ்பரிசம் அவனைப் புளகாங்கிதமடையச் செய்தது.

அன்றிரவு நடு நிசிக்குமேல் அந்த வீட்டின் முன் வாசலிலிருந்து இரு குதிரை வீரர்கள் புறப்பட்டார்கள். அவைகளில் ஒன்றில் ஆண்வேடம் தரித்த வஸந்திகாவும், மற்றொன்றில் இளவரசன் குமாரகுப்தனும் இருந்தனர். மறுவிநாடி பெரும் புழுதியைக் கிளப்பி விட்டுக்கொண்டு அந்தப் புரவிகள் காரிருளில் புகுந்து மறைந்துவிட்டன.

—

நள்ளிரவு. அக்கிராமமே இருளில் புதைந்து கிடந்தது. எங்கும் பயங்கர அமைதி நிலவியிருந்தது. தூரத்திலிருந்து காற்றில் தவழ்ந்து வரும் ஒரு பெண்ணின் சோகக் குரல் அமைதியின் பயங்கரத்திற்கு பண் அமைத்தது. என் கடிகாரம் பன்னிரண்டு அடித்து ஓய்ந்தது. அப்பாடா! என்று அலுத்துப்படுத்தேன். பகலெல்லாம் வேலை கடுமை. அக்கிராமத்தில் மலேரியா அதிகமாகப் பரவியிருந்ததால் என்னை அங்கு ஒரு வாரத்திற்கு டாக்டராக நியமித்திருந்தார்கள். நித்திராதேவி எனக்குத்தெரியாமல் என்னருகே வந்து அணைத்துக்கொள்ள தன் இரு கைகளையும் நீட்டினாள். நான் அவளருகே சென்றேன். ஐயா. ஐயா, என்ற குரல்கள் வாசற்படியிலிருந்து வந்தன. தேவி வெட்கத்துடன் அகன்றாள். நான் அவசரமாகப்போய் கதவைத் திறந்தேன். எதிரே ஒரு பரிதாபகரமான ஆசாமி நின்றுகொண்டிருந்தான். துயரத்தின் சாயல் அவனது முகத்தில் சூழ்ந்திருந்தது. அவனது ஆடைகள் அவனது வறுமைக்கோலத்தைக் காட்டின. எனக்கு அவன் மீது இரக்கம் உண்டாயிற்று.

என்னப்பா? என்ன வேண்டும்? என்றேன். ஐயா; கொஞ்சம் தயவு செய்யவேண்டும். என் மனைவிக்கு சாயந்திரத்திலிருந்து ஜுரம்.சற்று முன் அவள் நினைவை இழந்துவிட்டாள் என்று சொல்லிக்கொண்டிருக்கும்போதே குரல் கம்மியது. கண்களிலிருந்து நீர் பொல பொலவென்று உதிர்ந்து வழிந்தோடியது. மறுகணம் கைப்பெட்டியுடன் அவனைத் தொடர்ந்தேன். போகும்பொழுதே அவன் ஆலையில் வேலை செய்கிறான் என்றும், அவன் பெயர் ஆரோக்யசாமி என்றும், அவனுக்குப் பிள்ளைகள் இல்லையென்றும் அறிந்தேன். அவனது நிலைமையைக் கண்டு எனக்குப் பச்சாதாபம் மேலிட்டது.

அவன் ஒரு குறுகிய சந்தில் நுழைந்தான். தெருவில் விளக்குகள் ஒன்றுமில்லை. குப்பைகள் தெரு பூராவும் சிதறிக் கிடந்தன. எங்கும் ஒரே சாக்கடை நாற்றம். நான் அங்கு வசிக்கும் மனிதர்களை மனதில் திட்டிக்கொண்டே போனேன். தெருக்கோடியிலுள்ள ஒரு குடிசையில் நுழைந்தான் ஆரோக்யசாமி. என்து சுய கௌரவம் என்னைப் பின்னே உள்ளே நுழையவிடாமல் தள்ளியது. நான் வெளியே நின்றுகொண்டிருந்தேன். ஐயா, உள்ளே வாங்க என்ற குரல் கேட்டு உள்ளே நுழைந்தேன். ஒரு மூலையில் கிழிந்த கோரைப்பாய் ஒன்றில் ஒரு பெண்ணுருவம் படுத்திருந்தது. அவளுக்குப்பக்கத்தில் ஒரு சிம்னி விளக்கு எரிந்துகொண்டிருந்தது. சுவற்றில் அமைதியும், சாந்தமும் நிறைந்த கிறிஸ்துவின் முகம் அவ்விளக்கின் வெளிச்சத்தில் நன்றாக விளங்கியது. நான் அவளருகில் சென்று பரிட்சித்தேன். என் மனதில் நம்பிக்கை பிறக்கவில்லை. அவள் முகத்தை நிமிர்ந்து பார்த்தேன். என் மனம் துணுக்குற்றது. மனதை யாரோ துண்டம் துண்டமாக வெட்டுவது போல உணர்ச்சி ஏற்பட்டது. என் இதயம் 'ஆம், அவளேதான் என்று துடித்தது. என் சிந்தனை பழைய நாட்களுக்குச் சென்றது: நினைவுத்திரைகள் அவிழ்ந்தன...

மதிகள் நிர்மலமான வான வீதியில் பவனி வந்துகொண்டிருந்தாள். அவளைக்கண்டு நட்சத்திரக் கூட்டங்கள் கண் சிமிட்டி விளையாடிக்கொண்டிருந்தன. ரஸ்தாவில் போய்க்கொண்டிருந்த வண்டிக்காரனின் தெம்மாங்கு ஒன்று காற்றில் மிதந்து வந்துகொண்டிருந்தது. ஆற்றில், உருக்கிய வெள்ளிபோல் வெள்ளம் கரை புரண்டு ஓடிக்கொண்டிருந்தது. நான் அதன் கரையில் உட்கார்ந்து சிந்தனையில் ஆழ்ந்திருந்தேன். நீரில் 'சல' சல வென்ற ஒலியும், அதைத் தொடர்ந்தாற்போல் கல் கல வென்ற வளையல் ஒலியும் என்னை சிந்தனையிலிருந்து எழுப்பின. நிமிர்ந்து பக்கத்துத் துறையில் கண்ணோட்டம் செலுத்தினேன். இடையில் குடத்துடன் திரும்பிய ஒரு பெண்ணின் விழிகள் என்னைப் பார்த்தன. நான்கு விழிகளும் விருந்துண்டன. என் மனதில் உணர்ச்சி அலைகள் தோன்றி என்னைத் திணர அடித்தன. நான் ஆகாயத்தில் பறப்பதுபோலவிருந்தது. மறுபடியும் அவள் பக்கம் திரும்பினேன். ஆனால் அவள் அதற்கு முன்பே என்னைக் கடந்து சென்று விட்டாள். பாதையின் கோடியில் திரும்பி ஒரு விழி வீச்சு வீசி விட்டுச் சென்றாள். என் இதயம் அவளைத் தொடர்ந்தது: நான் அந்த ஊருக்கு வந்து இரண்டு தினங்கள் ஆகியிருந்தன. கிறிஸ்துமஸ் விடுமுறையை என் மாமா வீட்டில் கழிப்பதற்காக அங்கு வந்திருந்தேன். ஒரு பெருமூச்சுடன் வானில் சந்திரனைப் பார்த்தேன். அதைக் காணோம். ஆனால் அவள் அங்கு நின்றுகொண்டு குறும்புப் புன்னகை புரிந்தாள். நான் வீடு திரும்பிக்கொண்டிருந்தேன்.

குமார், ஏன் இவ்வளவு நேரம்? என்ற குரல் கேட்டு நிமிர்ந்தேன். எதிரே என் மாமன் மகள் ராஜம் நின்றுகொண்டிருந்தாள்.

ஆற்றங்கரைக்குச்சென்றிருந்தேன். நாழிகையாகிவிட்டது என்

றேன். இருவரும் வீட்டிற்குச் சென்றோம். வேலைக்காரன் வாசற்படியில் தூங்கிக்கொண்டிருந்தான். அப்பொழுதுதான் நாழிகையானது எனக்குத்தெரிந்தது. பிறகு இருவரும் சாப்பிட்டுவிட்டு படுக்கைக்குப் பிரிந்தோம். அன்றிரவு எனக்குத் தூக்கமே வரவில்லை. என் கண்ணெதிரே ராஜத்தின் உருவம் தோன்றும். பேதை! அவள் என் மீது கொண்டிருக்கும் காதலும், அதன் மேல் கட்டியிருக்கும் ஆசைக் கோட்டைகளும் என்னால் தூள் தூளாகப்போகிறதே என்று நினைக்கும்பொழுது என் இருதயமே நின்றுவிடும். அவளிடம் குற்றத்தை ஒப்புக்கொள்ளலாம் என்று நினைக்கும் ஒரு கணம். அவள் அறிந்தால் அவளது நிலை என்னவாகுமோ? என்று எண்ணும்பொழுது என் மனம் முந்திய எண்ணத்தை மறுக்கும். அந்த திரைச் சேலை விழும். எதிரே அவள் நிற்பாள். அவளின் அந்தக் குறும்புப் புன்னகை என் கண் முன்னே நிற்கும். காதல் அவள்பால் அழைத்துச் செல்லும். நேரமும் கழிந்துவிட்டது. விடியும் வேளையில் 'அவளே' வெற்றி பெற்று என் இதயத்தைக் கவ்விச் சென்றாள். ராஜத்தைப் புறக்கணிக்கத் தீர்மானித்தது. பகல் முழுவதும் 'அவள்' நினைவிலேயே கழிந்தது. இரண்டொரு தடவை ராஜம் என் அறைக்கு வந்தாள். எனது மன நிலையையறிந்து மௌனமாகப் போய் விட்டாள். இரவும் வந்தது. ஆற்றங்கரைக்கு குதித்தோடினேன். அவளைக் கண்டேன். செல்லம் தன் பெயரென்றாள். இதயக் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டோம். பின்னால் இன்ப உலகு பாதையைத்திறந்துகொண்டது. உள்ளே சென்றோம். ஆடினோம், களித்தோம். நேரம் எங்களைப் பிரித்தது. நான் வீடு திரும்பினேன். என் மனம் செல்லம், செல்லம் என்று முணு முணுத்துக்கொண்டிருந்தது. எங்களிடையே காதல் மொக்கு அவிழ்ந்து மலர்ந்தது. நாட்களும் உருண்டன. காலம் சுழன்றது. கல்லூரிக்குப்போகும் நாளும் வந்தது. கல்லூரிக்குப் போகும் நாளுக்கு முதல் நாள்.

அன்று ஆற்றங்கரையில் அமர்ந்திருந்தாள் செல்லம். மற்ற நாட்களைவிட அன்று அவளிடம் அலங்காரம் பலமாக இருந்தது; பின்னாலேயே சென்று அவளது கண்களைப் பொத்தினேன். என் மீது அவள் சாய்ந்தாள். நான் மெய்மறந்தேன். இருவரும் இன்பமொழிகள் பேசினோம். அவள் ஒரு மலரைக் கொடுத்தாள். நான் அதை ஒரு முத்தம் இட்டு எனது பைக்குள் வைத்துக்கொண்டேன்.

குமார், நாம் பிரியும் நேரம் நெருங்கிவிட்டது. மறுபடியும் வெற்றியுடன் சந்திக்கும் நாளை எதிர்பார்க்கிறேன் ஆண்டவன் அருளட்டும் என்றாள். செல்லம் கவலைப்படாதே. அடுத்து நாம் சந்திக்கும்நாளை நினைத்து மகிழ்ச்சியுடனிரு. நான் மீண்டும் வந்து உன்னைக் காதல்வாழ்விற்கு அழைத்துச் செல்லுகிறேன். இருவரும் பிரிந்தோம். நான் ஆழ்ந்த மௌனத்துடன் வீடு திரும்பிக்கொண்டிருந்தேன்.

குமார், நாளை போட்மெயிலிலேயே செல்லலாமா? என்று கேட்டுக்கொண்டே வந்தாள் ராஜம். அவள் குரலில் சற்று தளர்ச்சி ஏற்பட்டிருப்பதை அறிந்தேன்.

மறுநாள் போட்மெயில் என்னையும், ராஜத்தையும் தாங்கிக்கொண்டு சென்னை சென்றுகொண்டிருந்தது. ராஜத்தின் முகத்தில் துயரத்தின் சாயல் படிந்திருந்தது. பிரிவினால் துயரமடைந்திருக்கிறாள் என்று நினைத்து பேசாமலிருந்தேன். கல்லூரி வாழ்வு ஆரம்பித்தது. காதல் மொழிகளை கடிதத்தில் அப்படியே தீட்டி அனுப்பினேன். செல்லம் தனது இதயத்தைத் திறந்து பதில் எழுதியிருந்தாள். பின்னர் கடிதம் எழுதினேன். பதிலில்லை. சில நாட்களுக்கெல்லாம் ஊரில் இல்லையென என் கடிதம் திரும்பியது. மணமாகி கணவனோடு சென்று விட்டாள் என்று ராஜம் என்னிடம் சொன்னாள். என் மனம் உடைந்தது வாழ்வே பாலைவனமாக மாறியது. காலச் சக்கரம் சுழன்றது. நான்படிப்பை முடித்துவிட்டு டாக்டர் வேலைக்குள் புகுந்தேன், ராஜம் எம். ஏ. என் வாழ்க்கையில் புகுந்தாள். இருவரும் பழைய நாட்கள்படி அன்னியோன்யமாக வாழ்ந்து வந்தோம். பின்னர் எங்களை அக்கிராமத்திற்கு அனுப்பியது டாக்டர் வேலை. அக்கிராமத்தில் செல்லத்தை மரணப்படுக்கையில் சந்திக்க நேர்ந்தது...செல்லம்! என்று கதறி விட்டேன். ஆரோக்யசாமி மனது பயத்தினால் துடிதுடித்தது. செல்லம் கண்ணைத் திறந்தாள். கணவனைப் பார்த்தாள். பிறகு என்னைப் பார்த்தாள். அவளது முகம் மறையப் போகும் அந்திச் சூரியனைப்போல் பிரகாசித்தது. தலையணை அடியிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்து என்னிடம் கொடுத்தாள். அக் கடிதத்தில் என்னுடைய எழுத்துக்கள் மின்னின. ஒரு புன்னகையுடன் மரணத்தாயின் மடியில் புரண்டாள். ஆரோக்யசாமி கதறினான். தரையில் தலையை மோதிக் கொண்டு அழுதான். என் இதயம் உடைந்து இரத்தம் வழிந்தது.

காலைநேரம். உதய சூரியன் தன் கைகளால் நிலத்தாயை அணைத்துக்கொண்டான். மலர்ந்த மலர்களிலிருந்து மணம் காற்றில் தவழ்ந்து வந்தது. எங்களது கட்டை வண்டி தனது சொந்த ஆட்டமுடன் சென்றுகொண்டிருந்தது. ராஜம் கீழே குனிந்த தலையுடன் உட்கார்ந்துகொண்டு தனது குற்றத்தைச் சொல்லிக்கொண்டிருந்தாள். அவள் கண்களிலிருந்து நீர் ஆறாகப்பெருகியது. என் மனம் அவள் மேல் கோபமாகத் துடித்தது. ஆரோக்யசாமி எங்களிருவர் முகத்தையும் பார்த்துத் கொண்டிருந்தான்.

செல்லத்தின் கல்லறையின் இருப்பிடம் வந்தது. மூவரும் கீழேயிறங்கினோம். செல்லம் கொடுத்த எனது கடிதத்தைத் துண்டு துண்டாகக் கிழித்தெறிந்தேன். என் கைப்பெட்டியில் உள்ள உலர்ந்த மலரை எடுத்து கல்லறைமீது வைத்தேன். என் மனதில் அலைகளெல்லாம் ஓய்ந்து அமைதி நிலவியது. என்னை மணந்துகொள்ள, செல்லத்திற்கு வேறு மணத்தைச் சதி செய்து முடித்து வைத்த ராஜம், தன் கண்ணீரால் கல்லறையைக் கழுவியது மூலம் சாந்தி பெற்றாள். ஆரோக்யசாமி காதலரைப்பிரித்ததற்காக வருந்தினான். மூவரும் கல்லறையில் வணக்கம் செலுத்திவிட்டுத்திரும்பினோம். எங்கள் மூவர் மனங்களிலும் சாந்தி பொங்கி வழிந்தோடிக்கொண்டிருந்தது.

பூரணப் பொலிவுடன் பிரகாசித்துக் கொண்டிருந்தச் சந்திரன் மீது வஞ்சம் தீர்க்கும் நோக்கத்துடன், திரண்டு வந்தக் கருமேகங்கள் அவன் ஒளியைப் பரவ வொட்டாமல் தடுத்துக் கொண்டு, கேலியுடன் நகைப்பதைப் போல் இடித்தன. படார் என்று அறை ஜன்னல் கதவு, காற்று வேகத்தில் மூடிக்கொண்டது. 'கில்'லென்று அதிலிருந்தக்கண்ணாடி உடைந்து, சிதறி விழுந்தது.

தன்னந் தனியாகத் தன்னறையில் ஏதோ ஒரு சட்டப் புத்தகத்தில் தன் முழு கவனத்தையும் செலுத்திக்கொண்டிருந்தார் அட்வகேட் அனந்தஸயனம். ஜன்னல் கண்ணாடி உடைந்ததைக் கண்டு, எழுந்து வந்து, கண்ணாடித் தூள்களைப் பொறுக்கி, ஜாக்கிரதையாகக் காகிதத்தில் ஒதுக்கி எடுத்து விட்டு, மீண்டும் புத்தகத்தைப் புரட்டலானார்.

தலையில் கனத்தக் கம்பளியை முக்காடிட்டுக்கொண்டு, அடிமேலடி வைத்தவண்ணம், சந்தேகந் தீர நாலாப் பக்கங்களையும் கூர்ந்து கவனித்தவாறு நடந்து வந்த அந்த உருவம், திடுதிப்பென்று வக்கில் வீட்டுக்குள் புகுந்துகொண்டது. அதன் அதிர்ஷ்டம், வாசற்கதவைத் தாளிட மறந்து, வெறுமனேச் சாத்தியிருந்தார் அட்வகேட். வீட்டுக்குள் ஓசைப்படாமல் நுழைந்தது அவ்வுருவம்; கம்பளியை இழுத்து நன்றாகப் போர்த்திக்கொண்டது.

நீண்ட கொட்டாவியை ஆயாசந்தீர விட்டுக்கொண்டே படுக்கையை உதறிப் போட்டார் அனந்தஸயனம். அவர் அறையின் கதவிடுக்கில் மறைந்துகொண்டது அந்த கருத்த உடை தரித்த உருவம். சிறிது நேரம் மயான மௌனம் வீடு நெடுக நிலவியிருந்தது. விளக்கு மேஜைமீது இன்னும் எரிந்துகொண்டுதானிருந்தது. கட்டிலின்மீது, விழித்துக்கொண்டுப் படுத்திருந்த அட்வகேட். ஏதோ எண்ணியவாறு 'திடுக்'கென்று எழுந்து மேஜைமீது இருந்தப் பேனாவை எடுத்து 'விருவிரு' என்று ஏதோ எழுதினார். ஒரு தடவை, இரண்டு தடவை, நன்றாகத் தான் எழுதியதை வாசித்துவிட்டு. ஒரு கவரில் அக்கடிதத்தை நுழைத்தார்.

'தடார்' என்று நாற்காலியைத் தள்ளிக்கொண்டு எழுந்து, அறையை விட்டு வெளியே வந்தார். கதவிடுக்கில் தவம் கிடந்த உருவம் நன்றாகத் தன்னை மறைத்துக் கொண்டது. வக்கில் வாசலில் இருந்த தபால் பெட்டியில், தான் எழுதியக் கடிதத்தைப் போட்டு விட்டு மீண்டும், வாசற் கதவைத் தாளிட்டவண்ணம், தன் கட்டிலை நெருங்கினார்.

காலதேவனின் பணியாட்களில் ஒருவன் என்பதை எடுத்துக் காட்டுவதைப்போல், சுவற்றில் மாட்டப்பட்டிருந்த பெரிய கடியாரம் பன்னிரண்டு தடவை அடித்து, ஓய்ந்தபின்பு 'டக், டக், டக், டக்' என்று தன் கடமையைச் செய்து கொண்டிருந்தது மதவெறிப் பிடித்தலையும் கூண்டர்கள். ஒன்றுமறியாத எளியோர்கள்மீதுப் பாய்ந்து, அவர்களைக் குத்திக் கொலை செய்வதைப்போல், ஆனந்தமாக இரைதேடிய வண்ணம் தன் சகாக்களுடன் உத்திரத்தின் மீது ஓடிச் சென்றுகொண்டிருந்த எலிகளின் மீது ஒரு பூனை பாய்ந்து, தன் மனோபீடத்தை நிறைவேற்றிக் கொண்டிருந்தது. 'உய்ய்......' என்ற சப்தத்துடன் தென்னமரங்களை வேருடன் அசைத்துக் கொண்டிருந்த புயல்காற்று தன் மீது பட்டதும் போர்வையை எடுத்து இழுத்துப் போர்த்தியவாறு புரண்டு படுத்தார் அட்வகேட்.

கதவிடுக்கில் காத்துக்கிடந்த உருவத்தின் நிறத்தைப்போல் அதன் உள்ளமும் இருண்டிருந்ததோ என்னவோ. வெளியில் அடித்துக் கொண்டிருந்த புயலைக் காட்டிலும், மிக உக்கிரமான எண்ண அலைகளின் கொந்தளிப்பு அவ்வுருவத்தின் மனதைப் பிராண்டிக் கொண்டிருந்தது.

தன் தலையை நீட்டி, மெள்ள அறைக்குள் தன் கண்ணோட்டத்தைச் செலுத்தியது. வக்கிலின் குறட்டுச்சப்தம் அதன் செவிகளில் ஏதோ இன்னிசையைப் பாய்த்து விடுவதைபோல் தொனித்தது. ரப்பர் பந்தைப்போல், ஒரு துள்ளு துள்ளிக்கொண்டே, மேஜை மீதிருந்த விளக்கை வாயால் ஊதி அணைத்தது அவ்வுருவம்.

அறை நெடுக்கப் பயங்கரமான அந்தகாரம் கருமேகங்களிடமிருந்து, ஒருவாறு விடுதலை யடைந்தச் சந்திரனின் மங்கல் கிரணங்கள், ஜன்னல் வழியாக ஊடுருவி, இருண்ட அவ்வறையில் சிறிது ஒளியை பரப்பின. குனிந்து, குனிந்து, தன் பாதங்களை அதி உஷாராய் தரையில் ஊன்றி வைத்த வண்ணம், அனந்தஸயனம் படுத்துக்கிடந்த கட்டிலை அணுகிற்று அவ்வுருவம் தன் இருகரங்களையும் தான் போர்த்தியிருந்த கம்பளிக்குள் செலுத்திக் கொண்டு, தன் இடுப்பிலிருந்து வெளியே எதையோ இழுத்தது. மங்கலானச் சந்திர ஒளியில் 'பளபள'வென்று மின்னிற்று அந்த கையிலிருந்தப்பட்டாகத்தி.

மிருக வெறி மிதமிஞ்சி ஏறிப் போயிருந்த அதன் உள்ளத்தை அலாதியான ஒரு முரட்டுத்தைரியம் பிடித்து அலக்கழித்தது. 'சறேல்' என்று உத்வேகத்துடன் தன் கத்தியை, வக்கிலின் மார்பில் ஈவிரக்கமின்றிச் செலுத்திவிட்டு' 'விருட்'டென்று அதை இழுத்துக் கொண்டு, 'குபு குபு' வென்று களங்கமற்ற அவர் இதயத்திலிருந்து எழும்பி வந்த ரத்த வெள்ளத்தையும் கண்குளிர கண்டவண்ணம், வேகமாக வாசற் கதவைத் திறந்துகொண்டு வெளியே ஓடிற்று அந்தக் காட்டுமிராண்டி உள்ளம் படைத்த உருவம்.

அட்வகேட் அனந்தஸயனம் கத்தியால் குத்தப்பட்டார் என்ற செய்தி, மறுநாள் ஊர்நெடு

கக் காட்டுத் தீயைப்போல் பரவிற்று. போலீஸ் இலாகாவில் அதிமும்முரமாய் துப்பறியும் வேலை நடந்து வந்தது. ஆனுல், கொலையாளியை வரையறுத்துச் சொல்லும் விதத்தில் அவர்களால் பிரமாதமாக ஒன்றும் புரட்ட முடியவில்லை.

* * * *

மேற்சொன்ன சம்பவம் நடந்த இரண்டாம் நாள் ராமக் கவுண்டன், தன் வீட்டு வாசலில் ஒரு கயிற்றுக்கட்டிலில் சாவகாசமாய் உட்கார்ந்து கொண்டு, வெற்றிலையை மென்றுகொண்டிருந்தான். வெற்றிலைச் சாரை சுவாரசியமாக முழுங்கிக் கொண்டிருந் அவன் வாய், ஏதோ முணுமுணுத்துக்கொண்டிருந்தது. அது தான் அவன் அந்தராத்மாவின் கூக்குரல். தன் கடமையைச் செவ்வனேச் செய்து முடித்து விட்டதாக அவனைப் புகழ்ந்தது அவன் மனச்சாட்சி.

இரண்டு மாதங்களுக்கு முன் நடந்தச் சம்பவம் ராமக் கவுண்டனின் நினைவுத்திரையில் திட்டப்பட்டது.

"ராமக் கவுண்டர், கவலைப்படாதே உன் தந்தையை அவர் செய்தக் கொலைக் குற்றத்திலிருந்து விடுவிக்கிறேன். எனக்குத் தெரிந்த சட்டதிட்டங்களையெல்லாம் அலசி ஆராய்ந்து, என் உயிரை விட்டு வாதாடுகிறேன்" என்று உறுதியுடன் கூறினுர் அட்வகேட் அனந்தசயனம். ஆனுல் நடந்ததுஎன்ன? வக்கிலின் உறுதிமொழி காற்றில் கலந்து போயிற்று, ராமக் கவுண்டனின் தந்தைமீது கொலைக் குற்றம் ருசுவாகி அவன் தூக்கிலிடப்பட்டான்.



ராமக்கவுண்டனுக்குத் தன் தந்தையிழந்தத் துக்கத்தைவிட வக்கீல் தன்னை ஏமாற்றிப் பணம் பறித்துக்கொண்டதுதான் மிகவும் கோபத்தை உண்டு பண்ணிற்று. வஞ்சம் தீர்த்துக்கொள்வது என்று முடிவு செய்து கொண்டான். தன் வைராக்கியத்தையும் நிறைவேற்றிவிட்டான்.

சிந்தனைகளைப் பின்ன விட்டுக்கொண்டிருந்து உட்கார்ந்திருந்த ராமக்கவுண்டன் மடியில் ஒரு கவரை வீசியெறிந்து விட்டுச் சென்ருன் தபால்காரன்.

அலட்சியத்துடன், கவரைப் பிரித்துப் பார்த்தான் கவுண்டன். அக்கடிதம் காலஞ்சென்ற அட்வகேட் அனந்தசயனத்திடமிருந்துதான் வந்திருந்தது. அன்றிரவு ஏதோ அவர் 'விருவிரு' என்று எழுதினுரே, அக்கடிதம் தான் அது.

அன்புள்ளராமக்கவுண்டனுக்கு!

நீ தீராதக் கோபத்துடன் ஏதாவது என்மீது பழிக்குப் பழி வாங்கும் உத்தேசத்துடனிருப்பாய் என்று எனக்கு நன்ருகத்தெரியும். நியாயம்தானே. உன் தந்தையைக் காப்பாற்றுவதாக எவ்வளவு உறுதியுடன் உனக்கு ஆறுதலளித்தேனே அவ்வளவு ஏமாற்றத்தையும், துக்கத்தையும் உனக்கு இப்போது கொடுத்துவிட்டேன். மனிதனும் தெய்வமும் ஒத்துழைப்பது என்று எங்கேயாவது நாம் கேள்விப்பட்டிருக்கிருேமா? நினைத்துப்பார். பூர்ண அமைதியுடன், உன் மனச்சாட்சியைத் நீதித்திராசில் நிறுத்திப்பார். அப்படிச் செய்து பார்த்கதும், நீ என்னைச் சந்தேகித்து வஞ்சம் தீர்க்க வழி தேடினுலும் நான் அதற்காகக் கவலைப்படப் போவதில்லை. மேலும், உன் குடும்பமுன்னேற்றத்தை உத்தேசித்து, இந்த உயிலை உனக்கு அனுப்பி இருக்கிறேன். அதில் கண்டபடி என் சொத்தில் பாதி உன்னைச் சேரும். வேறு பந்து, பாசமில்லாத நான் உனக்குச் செய்ய வேண்டியது அவ்வளவு தான்...இந்த உயிலை ஜாக்கிரதையாக வைத்துக் கொள். பண உதவி வேண்டுமானுல் கவலைப்படாமல் என் வீட்டிற்கு அடிக்கடி வா..."

கண்ணீர் வெள்ளத்தில் ராமக் கவுண்டனின் விழிகள் தத்தளித்தன. "எனக்கா இந்தப் பவிசு?" என்று அலறினுன் அவன்.

"கவலைப்படாதே...என்னைக் கொன்ருலும் நீ திருப்தி அடையமாட்டாய்......" என்று வக்கிலின் ஆவி அவன் கண்முன் நின்றுகொண்டு அவனை ஏசுவதைப் போல் ஓர் பிரமை அவனுக்கு அடிக்கடி ஏற்படும். அப்போதெல்லாம் கண்களில் விழுந்த மணலைப்போல் அவன் மனச்சாட்சி அவனை அடிக்கடி உறுத்திற்று.

தாய்மார்களுக்கு

ஆர். லக்ஷ்மி அம்மாள்

'ஒரு குழந்தையின் எதிர்கால நன்மையோ தீமையோ முழுதும் தாயைப் பொறுத்தது தான்' என்றுநெப்போலியன் கூறுவதுண்டு. மேடம் காம்பர்ன் (Madame Ccmpern) என்பவரிடம பேசிக்கொண்டிருக்கையில், 'மக்களுக்குச் சரியான போதனை ஏற்படுவதற்கு வேண்டியதென்ன?' என்று நெப்போலியன் கேட்க, அவ்வம்மையார், 'தாய்மார்' என்று பதில் சொன்னுராம். உடனே நெப்போலியன், 'ஒரே வார்த்தையில் ஒரு முழுக் கல்வி முறையும் இதோ கிடைத்துவிட்டது!' என்று மகிழ்ந்து போனுராம்.

'புத்திரன்'

'தாயைப் போலே பிள்ளை, நூலைப் போலே சேலை' என்ற தமிழ்ப் பழமொழியிலும் புதைந்திருக்கிறது நெப்போலியனின் கருத்து. 'தொட்டில் ஆட்டும் கை துரைத்தனத்தையும் ஆட்டி வைக்கும்' என்ற ஆங்கில உரையிலும் பொதிந்திருக்கிறது இப் பொருள.

அறியாமையும் மூட நம்பிக்கைகளும், தற்கால உலகத்திற்குப் பொருத்தமில்லாத கர்நாடகக் கொள்கைகளும் கொண்ட தாயால் வளர்க்கப்படும் குழந்தை நவீன வாழ்க்கைக்கு இன்றியமையாத பயிற்சி பெறுவது எப்படி? குழந்தைக் கல்வியைத் திறமாகத் தற்கால ரீதியில் அமைபபதற்காவது தாயும் தக்க முறையில் பயிற்சி பெறுவது இன்றியமையாதது. 'புத்' என்ற நரகத்திலிருந்து காப்பாற்றும் புத்திரன் கிடைத்துவிட்டான்!-என்று தாய் மகிழ்ந்திருந்தால் போதுமா? தற்கால வாழ்க்கையை நரகமாக்கும் காரணங்களை விலக்கி, இவ்வாழ்க்கையைச் சொர்க்கமாக்கும் ஆற்றலைப் புத்திரனுக்கு அளிப்பவள் தாய்தானே?

பயிற்சிபெறும் மனப்பான்மை

கணக்கு வழக்கு ஒன்றும் தெரியாமல் ஒருவன் வியாபாரம் செய்யப் புகுந்துவிட்டால், அது மூடத்தனம் என்று பளிச்சென்று சொல்லிவிடுவோம். வைத்தியக் கலை தெரியாதவன்—'பிணி போக்குவேன்' என்று முன் வந்தால் அந்தத் துணிவை மெச்சுகிருேமா? அவனிடம் சிகிச்சை பெறும் நோயாளிகளைக் குறித்து 'அந்தோ!' என்று பரிதவிப்போம் அல்லவா? இப்படியே தான், தக்க பயிற்சி பெருததாய் தாயாக விரும்பும்நிலையும்பரிதாபத்திற்குஉரியது

சாதாரணப் பொதுக் கல்வியுடன், தாய்க்கு ஆரோக்கிய விதிகளும் உடற்கூறு முதலான விஷயங்களும் தெரிந்திருக்க வேண்டும். போதுமான மனோ தத்துவப் பயிற்சி இருந்தால் நல்லது. மனோ தத்துவப் பயிற்சி ஓரளவு இல்லாவிட்டால், எந்தக் கல்விப் பயிற்சியும் பூர்த்தியாகாது. இத்தகைய தகுதியுடன், காரண காரிய ரீதியில் சிந்திக்கக்கூடிய விஞ்ஞான மனப்பான்மையும் தாய்க்கு அவசியமாகும்.

'அடிமை வியாபாரம்'

எத்தனை தாய்மார்கள் நமது நாட்டில் பிள்ளை வளர்க்கத் தகுதி வாய்ந்தவர்கள்? 'ஆண்களிலேயே படிப்பின்மை இன்னும் தீர்ந்தபாடில்லையே; பெண் கல்வியைக் குறித்து சிறப்பாகப் பேசுகிறீரே!' என்று சிலர் சொல்லக்கூடும். தாயின் கல்வி தந்தையின் கல்வியைக் காட்டிலும் மிகவும் அவசியமானது என்றுதான் இதனுல் ஏற்படுகிறது. தந்தை மூடனுக இருந்தால் 'குடும்பத்தில் ஒரு மூடன்' என்ற பழிதான்; தாயின் மூடத்தனமோ பல மூடர்களாகக் கிளைத்துவிடுகிறதல்லவா?

பழைய கிரேக்க தேசத்தில், அடிமை-வியாபாரம் இருந்த அந்நாளில், பல குடும்பத்தொழில்களையும் அடிமைகளைக் கொண்டு செய்வித்துக் கொள்வதுண்டு. அந்நிலையில், ஒரு குடும்பத்தில் ஓர் அடிமை வேலை செய்துகொண்டிருந்தான். அக்குடும்பத்து எஜமானர், 'என் பையனுடைய வளர்ப்பையும் கல்வியையும் என் அடிமையிடம் ஒப்புவித்து விட்டேன்' என்று தமது நண்பர் ஒருவரிடம் தெரிவித்தாராம். அதற்கு அந்நண்பர், 'அப்படியானுல் இனி உம்முடைய குடும்பத்திற்கு இரண்டு அடிமைகள் கிடைத்து விட்டார்கள்!' என்றுபதில் சொன்னுராம். தாயே குடும்பத்தில் அடிமையாக நடத்தப்பட்டால், அந்தக் குடும்பத்தை என்னென்பது?

நலம்தரும் பயிற்சி

நமது நாட்டில் 'சாரதா' சட்டம் வருவதற்கு முன் குழந்தை-மணம் கோலாகலமாக நடைபெற்றது. 'எலிக்குஞ்சுக்குக் குஞ்சு பிறந்து விட்டது!' என்று சொல்லும்படி உடல் வளமில்லாத குழந்தைகள் பிறப்பது அபூர்வ நிகழ்ச்சியன்று. அத்தகைய குழந்தைகளைச் சிறுமியாகிய தாய் வளர்த்து விடுவது என்ருல், அது ஓர் அற்புதம்தானே? நல்ல வேளையாக இப்போது குழந்தை-மணம் என்ற அநாகரிகம் போய் விட்டது. எனினும், மணஞ் செய்து கொள்ளும் பெண்ணுக்குத் தக்க பயிற்சியைக் 'கட்டாயக் கல்வி' யாக அளிப்பது போன்ற ஒரு வழக்கமோ, பழக்கமோ வந்து விட்டால்தான், தாயால் குழந்தைக் கல்வியைக் கவனிக்க முடியும்.

'ஏழைக் குடும்பங்களில் கல்வி கற்க வசதி ஏது? வேலை செய்து பிழைக்க வேண்டாமா?' என்று எதிர் விவகாரம் செய்யக்கூடும். சமுதாயமோ, அரசாங்கமோ இலவசக் கல்வி அளித்துத்தான் நிலைமை சீர்திருந்த முடியும்; அந்தக் கல்வி வர்தாக் கல்வி முறையைத் தழுவியதாக இருக்கலாம். அதாவது, பிழைப்பிற்கு இன்றியமையாத ஒரு தொழிலையோ, தொழில்களையோ ஒட்டிக் கல்வி முறை அமைந்திருக்கலாம். நம்மவரில் பெரும்பாலார் கிராம மக்களாதலால், அவர்களின் தேவையை ஒட்டிப் பயிற்சி அளிப்பது நலம் தருவதாகும்.

கல்வி-விதைகள்

ஆனால், குழந்தைக் கல்வி விஷயத்திலும் தொழிலையோ லாபத்தையோ அடிப்படையாக வைத்துக்கொண்டுதான் பயிற்சி முறை அமைக்கப்படவேண்டும் என்று வாதிப்பது சரியன்று. மாண்டிஸோரி முறையை அடிப்படையாகக் கொண்டு நமது நாட்டுக்கு இசைந்த குழந்தைக் கல்வி முறையை அமைத்துக்கொள்வது தான் நீடித்த, சிறந்த, பயன் தருவதாகும். இத்துறையில் தாயின் பணி இன்றியமையாதது.

பள்ளிக்கூட ஆசிரியர்கள் விதைக்கும் கல்வி-விதைகள் சிறுவர் உள்ளத்தில் முளைப்பதற்கு அடி நிலமாவது தாயின் கல்விப் பணிதான். 'தாயின் கல்விப் பணி' என்றால், குழந்தைக்கு நல்ல பழக்கங்கள் ஏற்படுத்துவது, நல்லுணவு கொடுப்பது, ஆரோக்கியம் அளிப்பது முதலியனவெல்லாம் அடங்கியதுதான். உட்குழிந்த கண்களை மூக்குக் கண்ணாடிகளால் அணி செய்துகொண்டு, பலவீனமான உடலைச் சட்டையால் மறைத்துக்கொண்டு, பிள்ளைகள் பள்ளிக்கூடங்களில் எப்படிக் கல்வியின் சிறந்த நற்பயன்களை அடைய முடியும்? இந்நிலைக்கு விதி காரணமன்று, தாயின் மதிதான்காரணம்.

உலகப் படிப்பு

தாயின் பயிற்சி தக்க பயிற்சியாக இருக்கவேண்டுமென்றால், அது ஏட்டுப் படிப்பாக இருந்தால் மட்டும் போதாது; ஒழுக்கத்தைத் தழுவிய வாழ்க்கைப் படிப்பாக இருக்கவேண்டும். 'நான் சொல்லுகிறபடிசெய், செய்கிறபடி செய்யாதே!' என்று சொல்லும் உரிமை எந்த ஆசிரியருக்கும் கிடையாது: தாய்க்குக் கிடையவே கிடையாது. பொறுமையும் கோபமும் கொண்ட தாய் உபதேசத்தாலோ, புஸ்தகப் படிப்பினாலோ மட்டும் குழந்தைக்குப் பொறுமையும் சாந்தமும் கற்பித்துவிட முடியாது.

சிலர், பெண்களுக்குச் சங்கீதம், நாட்டியம் முதலான கலைகளே போதுமென்று சொல்லிவந்தார்கள், இந்நாளில் அப்படிச் சொல்லுகிறவர்களின் தொகை மிக மிகச் சொற்பமாகத்தான் இருக்கவேண்டும். அறிவு வகைகளில் எவையெல்லாம் ஆண் மக்களுக்கு உரியனவோ, அவையெல்லாம் பெண் மக்களுக்கும் உரியன என்பது தான் தற்கால அறிஞர்களின் ஒருமுகமான கருத்து.

ஏகபோகமில்லை

கலைகளெல்லாம் சாராம்சத்தில் வாழ்க்கையை வளமும் வனப்பும் உறச் செய்வதற்காகத்தானே? வாழ்க்கையே ஒருகலைதான். வாழ்க்கைக் கலைக்குப் பலவேறு கலைகளிலும் பரிசயம் வேண்டியதுதான்.

சங்கீதமும் நடனமும் பெண்களுக்கு எப்படி அவசியமோ, அப்படியே விஞ்ஞானமும், மனோ தத்துவக் கலையும், பரந்த உலக அறிவும் அவசியமானவைதான். அறிவுத் துறைகளில் சிலவோ பலவோ ஆண் மக்களுக்கு ஏகபோக மானவை என்று கருதுவது தவறு. ஏகபோக உரிமைகளெல்லாம், ஆதிக்க முறைகளெல்லாம், புயல்காற்றில் அகப்பட்ட இலவம் பஞ்சு படுகின்ற பாடு படும் இந்நாளிலே, ஒருவரும் கல்வித் துறையில் 'அது ஆண்களுக்குத்தான் உரியது; இது பெண்களுக்கும் உரியதுதான்!' என்றெல்லாம் சொல்லத் துணியமாட்டார்.

சமான வாழ்வுக்கலை

மனிதன் சமுதாயப் பிராணி. சமுதாய உணர்ச்சியை அறிவுள்ள தாய் அரசு வீற்றிருக்கும் குடும்பத்திலேதான் குழந்தை பெற்றுக்கொள்ள முடியும். இத்தகைய சூழ்நிலை தற்காலத்தில் இந்தியக் குடும்பங்களைக் காட்டிலும் வெள்ளைக்காரர் குடும்பங்களிலேதான் விசேஷமாய்க் காணப்படுகிறது. ஆகவே பொதுவாக வெள்ளைக்காரர்கள் நம்மவரைக் காட்டிலும் பொதுநல உணர்ச்சியும் சமுதாய உணர்ச்சியும் உள்ளவர்களாக இருக்கிறார்கள். இக்குறையை நன்குணர்ந்து நிறைசெய்துகொள்வதற்கு உரிய பயிற்சியும் தாய்க்கு அளிக்கப்படவேண்டும்.

தந்தையைக்காட்டிலும் குழந்தை வளர்ப்பிலும் பயிற்சியிலும் தாய் ஈடுபட வேண்டியிருப்பதால்தான், எல்லாப் பெண்களும் வர்த்தகம் முதலான பலவேறு வாழ்க்கைத் துறைகளில்—முக்கியமாகப் போட்டி பூசல்கள் ஏற்படக்கூடிய துறைகளில்—ஆண்களோடு சரிசமானமாகக் கலந்துகொள்ள வேண்டியது அவசியமில்லை என்பது என் அபிப்பிராயம். இங்கே, பொருள் தேடும் வாழ்க்கைத் துறைகளைத்தான் குறிப்பிடுகிறேன். அறிவுத் துறைகளிலும் கலைத்துறைகளிலும் 'சரிநிகர் சமான'மாகப் பெண்களும் வாழ்வு நடத்தவேண்டியதுதான். இல்லாவிட்டால், தேசத்திற்கும், தேசத்தின் எதிர்காலப் பிரஜைகளான குழந்தைகளுக்கும் ஈடு செய்யமுடியாத நஷ்டம் ஏற்படும்.

ஆசிரியரால் கற்பிக்க முடியாத-தாயே கற்பிக்கக்கூடிய—விஷயங்களும் உண்டு. அறிவுப் பிரதேசத்தில் மறைத்து வைக்கக்கூடிய பகுதி கிடையாது. விவாகம், அதன் பயன் முதலான பல விஷயங்களையும் சிறுவர் சிறுமியர்களுக்குத் தக்க கல்விப் பயிற்சி அடைந்திருக்கும் தாய் கற்பிப்பதுபோல் வேறு யாரும் கற்பிக்க முடியாது. உண்மையில், தாய் வீட்டையும் குழந்தைகளின் கல்விச்சாலையாகவே கருதவேண்டும். வீடுதான் உண்மையான கல்விச்சாலை; இதன் ஒரு பகுதிதான் பள்ளிக்கூடம்.

'தாயைக் காட்டிலும் உபாத்தியாயரே தக்க பயிற்சி பெற்றிருக்கிறார்; எனவே, குழந்தையைப் பள்ளிக்கூடத்திற்குஅனுப்பிவிட்டு, தாய் வேறு வேலை பார்ப்பது தான் நல்லது. வீட்டுவேலை பார்க்கலாம்; அல்லது நாவல்களைப் புரட்டிக்கொண்டிருக்கலாம். அவசியமானால் விஞ்ஞான ஆராய்ச்சிகள்செய்யலாம்; தேச சேவைசெய்யலாம். சிறுவர் சிறுமியர்களை மேய்ப்பது தானா பெண்களின் வேலை?' என்று கருதுவோர் படித்த பெண்களிலும் உண்டு. ஆரம்பக் கல்விச்சாலைகளில் ஆசிரிய பீடத்தில் உள்ளவர்களின் தகுதியையாவது உள்ளபடி அறிந்திருந்தால், இப்படி நினைக்கவே மாட்டார்கள். மேலும், எத்தகைய தகுதி வாய்ந்த ஆசிரியரும் தாயாருக்கு ஈடாகமாட்டார். குழந்தைக்குப் 'பேராசிரியர்' என்ற உரிமை தாய்க்குத்தான்.

உபாத்தியாயரிடம் குழந்தைகளை ஒப்படைத்துவிட்டுச் 'சிவனே!'யென்று தாய் வேறு அலுவல், பார்ப்பது, கடமையைக் கைவிடுவது மட்டுமல்ல; தாயின் தருமத்தையே, தாயான தத்துவத்தையே துறப்பதுதான். கிரேக்க எஜமானர் அடிமையிடம் பிள்ளை-வளர்ப்பையும் பயிற்சியையும் ஒப்படைத்ததுபோல் அவ்வளவு மோசமானதில்லை, பிள்ளைகளை உபாத்தியாயரிடம் விட்டுவிடுவது!—என்று வேணுமானால் 'ஆறுதல்' அடையலாம். ஆனால், இதுவும் 'ஆறுத'லாகுமா?

'வானரசேனை'யை உங்களுக்கு இப்பொழுது நன்றாகத் தெரியுமல்லவா? ஒரு நாள் 'வானரசேனை'க்கும் சுப்பு-பிச்சைக்கும் பெரிய சன்டை வந்துவிட்டது.

"ரொம்ப படித்து விட்டோம் என்ற நினைப்போ உங்களுக்கு? வாத்தியாரை காக்காய் பிடித்தால் தானே பாஸ் போட்டுவிடுகிறார்கள்." என்று பாலு பிச்சையை ஏசிக்காட்டினான்.

"நீங்கள் எல்லோரும்மட்டிகள். புத்தி என்பது துளி கூடக்கிடையாது. எவ்வளவு சொல்லிக் கொடுத்தாலும் மூளையில் ஏறுட்டா, வாத்தியார் எப்படி மார்க்கு கொடுப்பார்?" என்றான் பிச்சை.

"ஆமா, நீங்கரண்டுபேரும் செய்யற காரியம் ரொம்ப புத்திசாலித்தனமானதோ? அன்றைக்கு நாங்கதானே பள்ளிக்கூடத்திற்கு நிறைய பணம் கொடுத்தோம்? நீங்க எங்களை ஏமாற்றினதா நினைச்சுட்டயள். புத்தியில் லாட்டா நாங்க எப்படிடா இதைச் சம்பாதித்திருப்போம்?"-இது மணி.

"ஏன் திருடினால் அகப்படாதோ அவ்வளவு பணம்?" திருட்டு முழி முழித்துக் கொண்டு பரிஹாசமாகக் கேட்டான் சுப்பு.

"எங்களுக்கு திருடத் தெரியாதே! நீதான் சித்தேகத்துக் கொடு. அன்றைக்கு எங்க பழங்களை திருடித்தின்னயே?" என்று அவர்களுடைய குற்றத்தை எடுத்துக் காட்டினான் அம்பி.

பிச்சையும், சுப்புவும் அதற்குமேல் அங்கே நிற்க வழியில்லாமல், வாய் பேசாமல் கறுவிக்கொண்டு போய் விட்டார்கள் 'வானரசேனை'யை ஏதாவது ஒரு வழியில் அவமானப்படுத்த யோசனை செய்தார்கள்.

அந்த வருஷம் அவர்களுடைய பள்ளிக்கூடத்தில் வருஷாந்திர ஓட்டப்பந்தயம் ஆரம்பமாகியிருந்தது. தினந்தோறும் பள்ளிக்கூடம் முடிந்ததும் பந்தயத்துக்கு ஒத்திகை போட்டு பையன்களை நன்றாக பழக்கிக்கொண்டிருந்தார்கள். பாலு, மணி, பிச்சை மூவரும் அதில் பங்கு எடுத்துக் கொண்டிருந்தார்கள். ஒவ்வொருநாளும் பிச்சைதான் முதலாவதாக வந்தான். அதனால், போட்டி தினத்தன்றும் அவனேதான் பரிசு பெறுவான் என்று எல்லோரும் நம்பியிருந்தார்கள். பிச்சைக்கும், சுப்புவுக்கும் கர்வம் தலைக்கு ஏறிவிட்டது. 'வானர சேனை'யை அவமானப்படுத்த இதுதான் தக்க வழி என்று எண்ணி, ஆனந்தப்பட்டார்கள்.

கோபு, மணி, பாலு, அம்பி நாலுபேரும் வழக்கப்படியே ஒன்றுகூடி, நன்கு யோசனை செய்தார்கள். பின் ஒரு வெற்றிகரமான முடிவுக்கு வந்தார்கள்.

அன்றுதான் ஓட்டப் பந்தய தினம். பந்தய மைதானத்தைச் சுற்றி பெரிய கூட்டம் நின்றுகொண்டிருந்தது. பந்தயம் ஆரம்பிப்பதற்கு சற்றுமுன் கோபுவும், அம்பியும் மணியிடம் ஏதோ ஜாடையாகச் சொல்லிவிட்டு எங்கோ போய்விட்டார்கள். பிச்சையும், சுப்புவும் ஒருவரை ஒருவர் பார்த்து கண் அடித்துக்கொண்டார்கள்.

"கடவுளை நன்றாகப் பிரார்த்தனை பண்ணிக்கோடா." என்றான் பாலு.

"போடா நம்ம கோபு இருக்கறப்போ கடவுள் எந்த மூலைக்குடா? நமக்கு எல்லாம் நல்லதுதான் வரும்." என்று மணி அவனை சமாதானப்படுத்தினான்.

சிட்டி ஊதினதும், எல்லாப் பையன்களும் தங்கள் தங்கள் இடத்தில் போய் நின்றார்கள். அங்கே நின்றிருந்த தலைமை உபாத்தியாயர் "ஒன்று—இரண்டு—மூன்று" என்று எண்ணினதும் பையன்கள் சிட்டாய்

பறந்தார்கள். எல்லோரும் எதிர்பார்த்தபடியே பிச்சை மற்றப் பசங்களை முற்றிக் கொண்டு ஓட ஆரம்பித்தான். திடீர் என்றி அவன் காலில் ஒரு சிறு கல் வந்து விழுந்து வலி உண்டாயிற்று. சற்று வேகத்தை குறைத்துக்கொண்டான். இதற்குள் சுப்பு பிச்சையை உற்சாகப் படுத்த எண்ணி, "சபாஷ்! இன்னும் வேகம்! ஆ...! அப்படித்தான்!" என்று பலவாறு உரக்கக் கத்திக்கொண்டிருந்தான். மற்றப் பையன்களும் அவர்களுடைய சிநேகிதர்களை உற்சாகப்படுத்த கூக்குரலிட்டுக் கொண்டிருந்தனர். பரிசை அடையவேண்டும் என்ற ஆத்திரத்தில் பிச்சை மறுபடியும் வேகமாக ஓட ஆரம்பித்தான். இரண்டு எட்டுதான் ஓடியிருப்பான். இதற்குள் மறுபடி இரண்டு மூன்று கற்கள் அவன் கால்களில் பலமாக வந்து விழுந்தன. சுரீர், சுரீர் என்று கற்கள் விழவே, பிச்சைக்கு வலி பொறுக்கமுடியாமல், மேலே ஓட முடியாமல் அப்படியே சுருண்டு விழுந்துவிட்டான். அவன் விழுந்த உடனே மற்றப் பையன்கள் தங்கள் வேகத்தை ஜாஸ்தியாக்கிக்கொண்டு

ஓடத் தலைப்பட்டனர். மறு நிமிஷமே ஒவ்வொருவர் காலிலும் கற்கள் சுரீர் என்று விழுந்து வலியினால் அங்கங்கே உட்கார வேண்டியதாயிறறு. 'ஏது நன்றாக ஓடுகிற பையன்கள் இப்படி உட்கார்ந்து விட்டார்களே!' என்று வாத்தியார்கள் ஆச்சர்யப்பட்டார்கள்.

பாலுவும், மணியும் இன்னும் சில பையன்களும்தான் பாக்கியிருந்தார்கள். பாலுவும், மணியும் தங்கள் பலத்தை அவ்வளவையும் உபயோகித்துக்கொண்டு ஓடு ஓடு என்று ஓடினார்கள். சரியான சமயத்தில் பாலு பந்தய எல்லையை வந்து அடைந்தான். எங்கும் பார்ப்பவர்களின் ஆரவாரமும் கரகோஷமும் நிறைந்தது.' எல்லோரும் ,பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே, பாலு பரிசை பெற்றுக்கொண்டு மணியிடம் வந்தான். பிச்சைக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. அவமானத்தால் அவன் முகம் சிவந்துவிட்டது. சுப்புவும் 'புண்ணில் கோல் இடுவது'போல அவனைக் கண்டபடி திட்டிக் கொண்டிருந்தான்.

பந்தைய மைதானத்தை அடுத்தாற்போல் ஒரு சிறிய புதர் இருந்தது. அதில் கோபுவும், அம்பியும் மறைந்திருந்து மணிபாலுவின் வரவிற்காகக் காத்திருந்தனர். அவர்கள் பக்கத்தில் ஒரு பெரிய கற்குவியல் இருந்தது. இருவர் கையிலும் ஒவ்வொரு "கவட்டை வில்" இருந்தது. சிறிது நேரத்தில் பாலுவும், மணியும் இந்தப் புதரண்டை வந்தார்கள். மணி சொன்னான். "கோபு, பாத்தயா, நான் அப்பவே இவனிடம் சொன்னேன். நம்ம கோபு இருக்கறபோது எங்களுக்குப் பயமே இல்லேன்னு. இப்பொ சரிதானே?" அதே சமயம் பாலு தான் கொண்டு வந்த வெள்ளிக் கோப்பையை கோபுவிடம் கொடுத்தது, "இந்தா கோ, இது உன்னைச் சேர வேண்டியது. நீ இல்லாட்டா இது பிச்சை கிட்ட

யல்லவா போயிருக்கும்? நல்ல வேளையா எங்க மானத்தைக் காப்பாத்தினே" என்று அவனை தூக்கி வைத்துப் பேசினான்.

கோபுவும், அம்பியும் சிரித்துக்கொண்டே தங்கள் கையில் இருந்த கவட்டைவில்லை தங்கள் ஜேபிகளில் திணித்துக்கொண்டு வீட்டுக்குக் கிளம்பினார்கள். அவர்கள் இருவரும் தங்கள் வில்லினால் வேகமாக ஓடும் பையன்களின் கால்களை குறிவைத்து கல்லினால்அடித்ததை இன்று வரையில் யாரும் அறியவில்லை. ஆனால், பிச்சையும் சுப்புவும் மட்டும் இவர்களுடைய வெற்றிக்கு ஏதோ காரணம் இருக்கவேண்டும் என்று சந்தேகப்பட்டார்கள். ஆனால் கோபுவின் விஷமத்தை அவர்களால் கண்டு பிடிக்கமுடியும் என்று நினைக்கிறீர்கள்? அதுதான் ஒருவராலும் முடியாத காரியம் ஆயிற்றே!

கிழக்கிந்தியத் தீவுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்காக ஜப்பானில் பல சரக்குகள் தயாரிக்கப்படுகின்றன. விவசாயக் கருவிகள் முதல் குழந்தைகளுக்கான வண்டிகள் வரையிலும் உற்பத்தி செய்யப்பட்டு, ஏற்றுமதிக்கு முன்னதாக யோகஹாமா வர்த்தக சபையின் பரிசோதனைக்காக வைக்கப்படுகின்றன.

III

உப்புமா, அல்வா ரொட்டி

★

திருநெல்வேலியில் அந்நாளில் சிற்றுண்டிச்சாலைகள் அபூர்வமாகவே இருந்தன. அந்தச் சிற்றுண்டிச்சாலை ஒன்றில் அல்வா விற்கிறார்களாம் என்று கேள்விப்பட்டு, வகுப்பு-நோட்டுப்புத்தகம் வாங்க வேண்டிய காசைக்கொண்டு அல்வா வாங்கியுண்டது இன்னும் என் நினைவிற்கு வருகிறது. அதுவரையில் உப்புமா என்றால் ஒரே மோகமாயிருந்த எனக்கு "அல்வாவுக்கு ஈடு ஆகுமா நம் நாட்டு உப்புமா?" என்று தோன்றியது. அந்நாளில் நான் விவேகானந்த சுவாமியின் சிகாகோ உபந்நியாசத்தை அல்வாப்போல் ருசித்து அனுபவித்து வந்தேன்.

"நம்முடைய மதக்கொளகைகளெல்லாம் கிறிஸ்தவர்கள் சிரிக்கும்படி எவ்வளவு மோசமாயிருக்கின்றன! எனினும் இந்த வடநாட்டுச் சாமியார் எவ்வளவு ருசிகரமாக இந்து மத சாரத்தை எடுத்துக் காட்டுகிறார்!" என்றேன், ஒரு நாள் அப்பாத்துரை என்ற மாணாக்கனிடம் அவன் பணக்காரப் பையன்; சிற்றுண்டிச்சாலைகளையும், மிட்டாய்க் கடைகளையும் சுற்றி வலம் வந்துகொண்டிருப்பவன். "அல்வாவைப் போல் அவ்வளவு ருசிகரமா விவேகானந்தர் பேச்சு?" என்று என்னைப் பரிகசித்தான்.

கிணற்றுத் தவளை

"கிறிஸ்து மதமே அறிஞர் மதம், ஆளுவோர் மதம்; அதில் சேர்ந்தால் நாட்டுக்கும் விடுதலை, நம் ஆத்மாவுக்கும் விடுதலை! நமது மதத்தில் என்ன இருக்கிறது? நம் மடாதிபதிகளையும், தற்காலக் கல்வி கேள்விகளில் சிறந்த நாகரிகப் பாதிரிமாரையும் ஒப்பிட்டுப் பார். உலகம் தெரியாத கிணற்றுத் தவளைகள் நம்மவர்!" என்றான் ரங்கசாமி என்ற மாணாக்கன். அதற்கு நான், "கிணற்றுத் தவளை"யின் கதையைக் குறித்து விவேகானந்தர் சொல்லியிருப்பதை எடுத்துக் காட்டிப் பதில் சொன்னேன்.

விவேகானந்தர் சொல்லும் அக்கதை பலருக்கும் தெரிந்ததே, கடல் தெரிந்த தவளையொன்று கிணற்றுக்குள் இருந்த ஒரு தவளையைச் சந்தித்ததும், "உன் கடல் இவ்வளவு பெரிதிருக்குமா?" என்று கிணற்றின் ஒரு பகுதியிலே பாய்ந்து காட்டியதாம், கிணற்றுத் தவளை. கடல் மிகப்பெரிதென்று அன்னியத் தவளை கூறியதும் பின்னும் ஒரு பெரும் பாய்ச்சலாகப் பாய்ந்து காட்டி, "இவ்வளவு பெரிதா?" என்று மறுபடியும் இறுமாந்து கேட்டது கிணற்றுத் தவளை. உடனே "கடலாவது, உன் கிணறாவது" என்று வந்த தவளை சிரித்ததும், கிணற்றுத் தவளை "என் கிணற்றைக்காட்டிலும் பெரிதாக ஒன்றுமே இருக்கமுடியாது!" என்று பரிகசித்ததாம் விருந்தாளியை. இக்கதையை அமெரிக்காவில் எடுத்துரைத்து விவேகானந்தர், "கிறிஸ்து மதத்திற்கு மேல் ஒன்றுமே கிடையாது!" என்று கொள்கையைப் பரிகசித்துச் சர்வ சமய சகோதர தர்மத்திற்கு அடிப்படையாக அமையத் தக்க இந்து வேதாந்தத்தின் பெருமையை நிலை நாட்டினார்.

அல்வா-ரொட்டி

இவ்வரலாற்றை நான் எடுத்துக் கூறியதும் கிறிஸ்தவப் பற்றுள்ள ரங்கசாமி சிரித்துக்கொண்டே, "உபமானத்தைக் கொண்டு விவகாரம் செய்து ஒரு கட்சியை நிலைநாட்டி விடலாமா?" என்றான். அப்பாத்துரையோ என்னை நோக்கி, "உனக்கு இப்போது உப்புமாவைப் பார்க்கிலும் அல்வா பிடிக்கிறது என்று சொல்லேன். ரங்கசாமிக்கோ அல்வாவும் பிடிக்கவில்லை, உப்புமாவும் பிடிக்கவில்லை, ரொட்டிதான் பிடிக்கிறது!" என்று சிரித்தான்.

திருநெல்வேலி ஜில்லாவை ஒரு கலக்குக் கலக்கி வந்த கிறிஸ்து மதப் பிரசார வெள்ளத்தை எப்படி மட்டுப்படுத்துவது என்று அந்நாளில் திரு. கைலாசம் பிள்ளை போன்ற சில அறிஞர்கள் ஆலோசித்தும், விவகரித்தும் கூட்டங்கள்

கூட்டியும் வந்தார்கள். பிரம சமாஜக் கொள்கைகளைப் பிரசாரம் செய்து, இந்து மதத்தைப் பாதுகாக்க இயலும் என்று திரு. கைலாசம் பிள்ளை செய்த முயற்சிகள் விசேஷமாக வெற்றி பெறவில்லை. விக்கிரக வழிபாட்டைக் கண்டிப்பதில் கிறிஸ்து மதத்தை ஒத்துப்போன பிரம சமாஜமும், ஆரிய சமாஜமும் திருநெல்வேலி இந்துக்களிடையே பரவுவது கஷ்டமாகத்தான் இருந்தது. ஆனால் இந்துக்களில் மேல் நாட்டுக் கல்வி கற்றவர்களிடையே விவேகானந்தரின் கொள்கைகளுக்கு அந்நாளில் பேராதரவு ஏற்பட்டது.

விவேகானந்தரின் குருமூர்த்தியான ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் வரலாறு தமிழ் நாட்டுப் பக்த மணிகளின் வரலாறுகளை ஒத்திருந்ததாலும், ராமகிருஷ்ணரும், விவேகானந்தரும் விக்கிரக வழிபாட்டை ஆதரித்ததாலும், இவர்கள் கொள்கைகள் மீது திருநெல்வேலி இந்து அறிஞர்களுக்கும் பிரேமை ஏற்பட்டது. கலாசாலை மாணாக்கர்களாகிய நாங்களும் விவேகானந்தரின் கொள்கைகளை எங்கள் பிரசங்கமேடைகளில் விவகரிக்கலானோம். போட்டி போட்டு அவருடைய பிரசங்கங்களை உருவேற்றி ஒப்பிக்கவும், அந்தப்பாணியில் வாக்கு வன்மையுடன் பேசவும் பழகலானோம்.

இப்படியிருக்க ஒரு நாள் கலாசாலைக் கூட்டமொன்றில் தலைமை வகித்த ஒரு பண்டிதர் விவேகானந்தருக்கும் தமிழ் நாட்டிற்கும் உள்ள தொடர்பைக்குறித்துப்பேசினார். சுவாமிகளின் கும்பகோண விஜயத்தைக் குறிப்பிடும்போது, உப்புமாவையும், அல்வாவையும் குறித்துப் பிரஸ்தாபித்தார். அப்போது என் பக்கத்தில் உட்கார்ந்திருந்த அப்பாத்துரை என் காதில், "பார்த்தாயா? உன்னைப்போல் உப்புமாவைக் காட்டிலும் இனிது அல்வா என்று சொல்லப்போகிறார்!" என்று முணுமுணுத்தான். தலைமை வகித்த பண்டிதரோ அப்படியொன்றும் சித்தாந்தம் செய்துவிடவில்லை; விவேகானந்தரைக் குறித்த—புஸ்தகங்களில் காணப்படாத—ஒரு ரஸமான கதையைத்தான் சொன்னார்.

விவேகானந்தர் கும்பகோணத்தில் தங்கியிருக்கும்போது, தமிழ்ச்சீடர்களில் ஒருவர் தம் வீட்டில் உப்புமா தயாரித்து விவேகானந்தரின் முன் கொண்டுவைத்தார். "உப்புமா என்றால் என்ன?" என்று விவேகானந்தர் கேட்டாராம். "அதை எப்படி விளக்குவது?" என்று பக்கத்திலிருந்த சீடர்கள் கவலைப்பட்டார்களாம். அப்போது கணிதப் புலமை வாய்ந்த ஒரு தமிழர்,

"உப்புமா = அல்வா — சர்க்கரை + உப்பு" என்று விளக்கினாராம் உப்புமாவின் தத்துவத்தை, வேதாந்த விளக்காகிய விவேகானந்தருக்கு.

வட நாட்டினரான சுவாமிகள் ஏற்கெனவே அறிந்திருந்த அல்வாவைக்கொண்டு, அறியாதிருந்த உப்புமாவை விளக்க முயன்றது. தெரிந்ததை அறிகுறியாகக்கொண்டு தெரியாததை விளக்க முயலும் நல்ல மனப்பான்மைதான். ஆனால் இக்கதை எவ்வளவு தூரம் உண்மை என்று எனக்குத் தெரியாது. விவேகானந்தரின் மகிமையைக் குறித்தும் அமெரிக்க விஜயத்தைக்குறித்தும், சில அற்புத நிகழ்ச்சிகளைக் குறித்தும்கூட நான் கற்றிருக்கிறேன், கேட்டிருக்கிறேன்; இந்த உப்புமாவின் அற்புத விளக்கத்தை அதற்கு முன் அறிந்ததில்லை. சிறுவர்களாகிய நாங்கள், பீஜகணித முறைப்படி உப்புமா விளக்கம் பெற்றதும் கொல் என்று சிரித்து விட்டோம்.

"அல்வாவிலிருந்து சர்க்கரையைக் கழித்து உப்பைக் கூட்டி உப்புமா ஆக்கிய அந்த அற்புதம் ராமகிருஷ்ண—விவேகானந்தர்களின் அற்புத நிகழ்ச்சிகளுக்கெல்லாம் மேலான அற்புதம்தான்!" என்று ரங்கசாமி, பிரசங்கம் முடிந்ததும் என்னிடம் பரிகாசமாய்க் கூறினான். அப்பாத்துரையோ, "நாமும் அப்படிச் செய்துபார்க்கலாமா? ஆனால் அல்வாவை அப்படிக் கழித்துக் கூட்டி உப்புமா ஆக்குவதில் உனக்கு விருப்பம் இராது. ஆகவே உப்புமாவிலிருந்து உப்பைக்கழித்துச் சர்க்கரையைக்கூட்டி அல்வா செய்து பார்க்கலாமே!" என்று என்னைக் கேலி பண்ணினான்.

"தத்துவ சாஸ்திரி"

நான் அந்தக் கதையின் தத்துவத்தில் ஈடுபட்டேன். "தெரிந்ததைக்கொண்டு தெரியாததை விளக்கியதில் என்ன தவறு? விவேகானந்தர் ஆதரிக்கும் விக்கிரக வழிபாடும் இப்படித்தானே! தெரிந்த சிலையையோ, சித்திரத்தையோ ஓர் அறிகுறியாகக் கொண்டு தெரியாத கடவுளையும் தெரிந்து கொள்ளவில்லையா?" என்றேன். இதைக் கலாசாலைப் பிரசங்கம் ஒன்றில் நான் ஆங்கிலத்தில் எடுத்துக் கூறியதும், எங்கள் கலாசாலைத் தலைவரான; மிஸ்டர் எட்வின் விங்க்லர்துரை என்னைத் "தத்துவ சாஸ்திரி" என்று அழைக்கத் தொடங்கினார். கலாசாலை மாணாக்கர்களும் அப்பட்டத்தை எனக்குச் சூட்டி வைத்தார்கள் பரிகாசமாக.

ஆனால் எனக்குத் தத்துவ சாஸ்திரம் அவ்வளவாகப் பிடிக்காது. ராமகிருஷ்ணர், விவேகானந்தர் கொள்கைகளிலும் அடிப்படையான சகோதர தர்மமும் தேச உணர்ச்சியுமே நன்றாய்ப்புரிந்தன, பிடிபட்டன. அச்சங்கத்தைச் சார்ந்த துறவிகள் செய்து வந்த சமுதாயத் திருப்பணி என்னை விசேஷமாக வசீகரித்தது.

"கிறிஸ்தவர்கள் பள்ளிக்கூடம் போடுகிறார்கள்; ஆஸ்பத்திரி அமைக்கிறார்கள்; உலக

மெங்கும் போய் மதப் பிரசாரம் செய்கிறார்கள். இந்துக்களாகிய நீங்கள் என்ன செய்கிறீர்கள்? சோம்பல்-வேதாந்தம் பேசி, மறு லோகத்தைச் சிந்தித்துக்கொண்டே இந்த லோகத்தில் அடிமைகளாக இருக்கிறீர்கள்!'' என்று பொருள்பட எங்கள் கலாசாலைத் துரை அடிக்கடி பேசுவார். அதற்கு எதிர் விவகாரம் செய்ய விவேகானந்தரின் கொள்கைகளையும், செயல்களையும் தக்க போர்க் கருவிகளாகக் கொள்ளலாம் என்று தோன்றியது எனக்கு.

கலாசாலைப் பிரசங்கங்களில் ராமகிருஷ்ண விவேகானந்த சங்கத்தாரின் சமுதாயஉணர்ச்சியையும், பணிகளையும் அத்துறவிகளின் தியாக புத்தியையும், பரந்த நோக்கங்களையும் வற்புறுத்தி வந்தேன். விவேகானந்தரின் அமெரிக்க விஜயத்தின் வாயிலாக உலகமெங்கும் இந்து மதம் பரவக்கூடும் என்று கனவு காணவும் தொடங்கினேன் அந்நாளில்.

நாளடைவில் விவேகானந்தரின் தேசீய உணர்ச்சியே என் உள்ளத்தில் நிலைபெற்றது. விவேகானந்தரின் சுதந்திர ஆவேசமும், தேச பக்தியும் சமரச உணர்ச்சியும், உயர்ந்த அம்சங்களாகத் தோன்றிய போதிலும், “அமெரிக்கரின் ஆதரவுதான் நமது நாட்டிலும் விவேகானந்தருக்கு ஆதரவு தேடிக் கொடுத்தது; இது நம்மவர்களின் அடிமைப்புத்தியைத்தான் வெளியிடுகிறது.'' என்ற எண்ணம் மேலிட்டது.

இங்கிலையில் “விவேகானந்தரின் தர்ம புத்திரி'' என்று பாரதியாரால் பாராட்டப்பெற்ற சகோதரி நிவேதிதா என்ற அமெரிக்க மாதின் கட்டுரைகள் என்னைப் பெரிதும் வசீகரித்தன. இத்தகைய தர்ம புத்திரியை இந்தியாவுக்கு அளித்த பெருமை விவேகானந்தரின் மற்ற அருமை பெருமைகளுக்கும் மேலாகத் தோன்றியது, என் நினைப்பிலே. பாரதியாரின் “இந்தியா'' பத்திரிகையும் ராமகிருஷ்ண-விவேகானந்த சங்கத்தில் எனக்கு ஏற்பட்ட பக்தி விசுவாசத்தை வளர்த்துப் பரிபாலித்தது



லண்டன் பள்ளிக்கூடங்களில் கீழ்த்திசைப் பாஷைகளைப்பற்றி பெரிய ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன. அந்தப் பாஷைகளின் தன்மை, ஒலி முதலிய அம்சங்கள் பரிசீலிக்கப்படுகின்றன. இதற்காக சில யந்திர வசதிகளையும் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். பிஜி தீவுகளின் பாஷையொன்று பரிசீலனைக்காக ரிகார்டு செய்யப்படுவதை இந்தப் படத்தில் பார்க்கிறீர்கள்.

* * * *

“வயது ஆக ஆக உனக்கு அல்வாவைக் காட்டிலும் உப்புமாவில்தானே பிரியம் அதிகமாயிருக்கிறது? என்று கேட்டான், என்ன தத்துவ சாஸ்திரி!'' சில ஆண்டுகளுக்குமுன் என்னைச் சந்தித்த பழைய கலாசாலைத் தோழன் அப்பாத்துரை. நான் ஆழ்வார்களையும், சிவநேசர்களையும் குறித்துக் கட்டுரைகளும், புத்தகமும் வெளியிட்டதைச் சுட்டிக் காட்டிப் பழைய சைவ வைஷ்ணவ சாரமான கொள்கைகள் விவேகானந்தர் கொள்கைகளைக் காட்டிலும் எனக்குப் பிடித்திருக்கும் என்ற குறிப்புடன் அப்பாத்துரை அப்படிக் கேட்டான். அதற்கு நான், “நீ நினைக்கிறபடி ஒன்றும் நேர்ந்துவிடவில்லை. இப்போது உப்புமா, அல்வா, ரொட்டி ஆகிய உணவு விஷயங்களில் ருசி பேதம் ஏற்பட்டிருந்த போதிலும், பழமையிலும், புதுமையிலும் சாரமான நன்மையைத்தான் கைக்கொள்ள விரும்புகிறேன்'' என்று பதில் சொன்னேன்.



குற்றவாளி

ரங்கநாத ஆத்ரேயன்

டிராமிலிருந்து இறங்கி நாலடி நடந்தால் அந்தத் தெரு மூன்று நான்கு வீடுகள் தாண்டினால் அவர்கள் வீடு. அவனுக்கு வழி நன்றாகத் தெரியும். தெருக் கோடியில் டீ கடை ஒன்று, அதை அடுத்து நான்கு பங்களாக்கள். கடைசியில் தெருவுக்கே திருஷ்டி பரிகாரம்போல் இருக்கும் கூரை வீடு அவர்களுடையதுதான். பல தடவைகள் தெருவில் குறுக்கும் நெடுக்குமாக நடந்தான் ரவி. ஒவ்வொரு முறையும் அவர்கள் வீட்டெதிரே திடுக்கிட்டு நிற்பான். ஆனால், கதவைத்தட்ட அவனுக்குத் துணிவில்லை. கூச்சம் அவனைப் பிடுங்கித் தின்றது. தயங்கித் தயங்கி கடைசியில் திரும்பிவிடுவான்.

கதவைத் தட்டினால்தான் என்ன! 'யார்?' என்று கேட்டாள் மீனு. யாரென்று சொல்லவேண்டாம். 'கதவைத் திற' என்றாலே போதும். கதவைத் திறந்ததும் மீனு திகைத்துப்போவாள். உடனே அவள் போடும் கூச்சலில் லல்லுவும், ராமுவும் ஓடி வந்து அவன் காலைக் கட்டிக்கொள்வார்கள். மாமி படுக்கையில் இருந்தே குசலம் விசாரிப்பாள். இன்னொர் ஆள் கதவோரம் வந்து நிற்பாள்! அவளுடைய கண்களில் களிப்பும், பிணக்கும் கலந்து தோன்றுமா?

இல்லை! அந்த நாட்களெல்லாம் கனவுபோல் மறைந்து விட்டன. மீனு இப்பொழுது பெரியவளாகியிருப்பாள். முன்போல் கதவைத் திறந்ததும் களிப்புடன் கூச்சலிட மாட்டாள். வெறுப்புக் கலந்த நோக்குடன் அவனைப் பார்ப்பதில் வியப்பு ஒன்றுமில்லையே! எல்லாம் இதற்குள் தெரிந்திருக்கும் அவளுக்கும். அவன் செய்த குற்றத்தை மன்னிக்க முடியுமா?

அந்த ஒல்லியான பெண்! அவனைப் பார்த்ததும், அவள் என்ன நினைப்பாளோ? மாமியிடம்தான் எப்படி முகத்தைக் காட்டுவது? ஆகவே தான் ரவி அவர்கள் வீட்டுக் கதவைத் தட்டத் தயங்கினான். தெருவில் அலைந்து விட்டுத் திரும்பி விடுவான். ஆனால் அவர்கள் நினைவை அவனால் மறக்க முடியவில்லை. மீண்டும் மறுநாள் அந்தத் தெருவுக்கு அவனை இழுத்தது அவர்கள் நினைவு.

* * * *

அந்தக் குடும்பத்தவருடன் அவனுக்குப் பரிச்சயம் ஏற்பட்ட விதமே அலாதி. நாட்டுப்புறத்தை விட்டு வந்ததும், அவன் அந்த வீட்டுப் பிள்ளைகளுக்கு டியூஷன் சொல்லிக் கொடுத்து வந்தான். பின்னர் வேறு வேலை பார்த்துக் கொண்டு விட்டாலும், அவர்களுடன் ஏற்பட்ட நட்பு மட்டும் சிதையவில்லை.

அந்த நட்பின் மயக்கத்தில் அவன் இப்படிச் செய்துவைப்போம் என்று எண்ணக்கூட இல்லை. விதியும் அவனுடைய ஆவலுமே அவனை இவ்வாறு செய்யத் தூண்டின. ஸரஸியை அவன் உள்ளூரக் காதலித்தான். மாமியும், மாயாவுமாகச் சேர்ந்து அவனுக்கு ஊக்கம் ஊட்டவே, அன்புக்கனல் பின்னும் பிரகாசமாகச் சுடர் விட்டது.

“பனைமரமாட்டம் வளர்ந்து விட்டாள் ஸரஸி. இனிமேலும் கல்யாணம் பண்ணாமல் இருக்கலாமா? என்னிடமோ பணம் அப்படி ஒன்றுமில்லை. அவள் பாட்டியின் நகை இரண்டொன்று இருக்கிறது. அதைக்கொண்டு எப்படியாவது முடித்துவிட்டால் என் பாடு தீர்ந்தது'' என்றாள் அம்மாமி.

“நல்ல எண்ணம் மாமி, உங்களுக்கு! நகை எல்லாம் உங்கள் செல்லப்பெண் ஸரஸிக்கு. எங்கள் மீனுவுக்கு ஒன்றுமே இல்லையா? பரவாயில்லையே!'' என்று ரவி சிரித்தான்.

“ஆஹா! நான் கல்யாணம் பண்ணிக்கப்போறேனாக்கும்! ஆசை!...'' என்று மீனு அழகு காட்டுவாள்.

இப்படி பரிகாசங்களுக்கிடையே விஷயம் வேரூன்றிவிட்டது. இதை ரவியும் உணர்ந்தான். அவனுக்கு இஷ்டம் இருந்தாலும், அவனுடைய எண்ணம் வேறோர் லக்ஷ்யத்தில் ஊன்றியிருந்தது. ஆகவே அவசரமாக எதையும் செய்துவிட அவன் தயாராக இல்லை.

எதிர்காலத்தைப்பற்றி அவன் எதற்காகக் கவலைப்படவேண்டும்? அவனோ நல்ல படிப்பாளி. சீமைப் படிப்புக்கு 'ஸ்காலர்ஷிப்' கிடைக்குமென்று அவனுடைய உபாத்யாயர்கள் எல்லோரும் நம்பியிருந்தனர்.

இப்படியிருக்கையில், ஒருநாள் அம்மாமி, அவன் கையில் ஒரு பெட்டியைக்கொடுத்து, “அப்பா, எனக்கு விலைகிலை தெரியாது இது எவ்வளவு பெறுமோ சொல்'' என்றாள்.

அவன் கோபத்துடன் அதைத் திருப்பிக் கொடுத்தான். “உனக்கென்ன பைத்தியமா, மாமி? ஸரஸியைக் கல்யாணம் பண்ணிக் கொள்கிறவன் இதற்காகவா செய்துகொள்வான்?''

அதற்குமேல் மாமி ஒன்றும் பேசவில்லை.

* * * *

சில தினங்கள் கழிந்தன. திடீரென்று ஒருநாள் இரவு கதவு தட்டும் ஓசை கேட்க, ஸரஸி வந்து கதவைத் திறந்தாள். “நீங்களா?'' என்று அவள் திடுக்கிட்டு நின்றாள்.

ரவி பேசவுமில்லை. உள்ளே நுழையவுமில்லை. என்ன சொல்வது, என்ன செய்ய வேண்டு

மென்று அவன் தயாராகவே வந்திருந்தான்.

அவன் சற்றுத் தொலைவிலிருந்த விளக்கின் ஒளியில் ஸரஸியின் முகத்தை உற்றுக் கவனித்தான். அவள் வியப்புடன், "என்ன விஷயம் சொல்லுங்களேன்" என்று கேட்டாள்.

"ஒன்றுமில்லை. மாமி எங்கே?" என்று ரவி கேட்டான்.

'தூங்குகிறாள். எழுப்பட்டுமா?'

"இல்லை...வேண்டாம்.—" ரவியின் குரல் மாறுபட்டிருப்பதை ஸரஸி உணர்ந்தாள். அதற்குமேல் அவளால் இருக்க முடியவில்லை. இதுவரை செய்யத் துணியாத காரியத்தைச் செய்துவிட்டாள். அவனுடைய கைகளைப் பிடித்துக்கொண்டு, 'சொல்லுங்களேன் ஏன் இப்படி நிற்கிறீர்கள்? என்ன விஷயம்?" என்று கேட்டாள்.

"நான் இங்கிருந்து போய்விட வேண்டும் ஸரஸி."

ஸரஸிக்கு இது முதலிலேயே தெரிந்த விஷயம்தான். தான் சீமைக்கு, மேல் படிப்புக்காகச் செல்வதை ரவி ஸரஸிக்கு மட்டும் சொல்லியிருந்தான். 'ஆனால் அதற்கு இப்பொழுதென்ன?" என்று அவள்கேட்டாள்.

"இல்லை, ஸரஸி! இன்றைக்கே நான் போகிறேன். இனிமேல் இங்கே நிற்க வழியில்லை" என்று அவன் திண்ணையில் உட்கார்ந்து தலையைக் கைகளால் பிடித்துக்கொண்டான். ஸரஸி என்ன சொல்வதென்று தோன்றாமல் அவன் பக்கத்தில் வந்து நின்றாள்.

திடீரென்று ரவி ஆரம்பித்தான். "ஸரஸி, 'எவ்வளவோ மனக் கோட்டைகள் கட்டினேன்; உனக்குத்தான் தெரியுமே. இதில்தான் என் வாழ்வின் ஆனந்தம் எல்லாம், எல்லாரிடமும் பெருமையுடன் சொல்லிக்கொண்டு திரிந்தேன். ஆனால் இன்றுதான் தெரிந்தது எனக்கு. ஸ்காலர்ஷிப் எனக்குக் கிடைக்கவில்லை. எப்படி வெளியே முகத்தைக் காட்டுவது? வாத்தியார் வேலை எனக்குக் கிடைக்கலாம். ஆனால் அதை நான் விரும்பவில்லை. என் வரைக்கும் இப்படிப் பிழைப்பதும் சாவதும் ஒன்றுதான். ஓராயிரம் ரூபாய் கிடைத்தால்..."

ஸரஸி ஒன்றும் தோன்றாமல் "இதற்கு வேறு வழி இல்லையா?" என்று கேட்டாள். அவள் குரலில் நடுக்கம் தொனித்தது.

"வழியா!...திருடுவதுதான். அதற்குத்தான் யார் ஆயிரம் ரூபாயை அடுக்கி வைத்திருக்கிறார்கள்....மாமியின் நகைப் பெட்டியை வேண்டுமானால் திருடலாம்"

ஸரஸி என்னவோ யோசனை செய்தவள், "பணம் உங்களுக்கு எப்போது வேண்டும்?" என்று கேட்டாள்.

"இன்றைக்கே வேண்டும். எல்லாம் ரகசியமாகவே செய்துவிட்டேன். ஸரஸி, பணம் கிடைத்தால் நாளைக்கே அவர்களிடம் காட்டுவேன். ஸ்காலர்ஷிப் கொடுக்காவிட்டால் மட்டும் என்னை நிறுத்திவிட முடியாது. ஆனால்...ஸரஸி! நான் வருகிறேன். உனக்கு நான் பல விதத்தில் கடன்பட்டிருக்கிறேன். அந்தயெல்லாம் நான் இந்த ஜன்மத்தில் தீர்க்க முடியாது. மாமியைப் பார்க்க எண்ணினேன். ஆனால் வேண்டாம்...நீ..."

அவனை தடுத்து ஸரஸி, "இரேன், இதோ வருகிறேன்" என்று உள்ளே போனாள்.

அவள் உள்ளே சென்றதன் காரணம் அவனுக்குத் தெரிந்ததே. சொல்லிவிட்டானே தவிர, ஸரஸி உள்ளே போனதும் அவனைக் கூச்சம் பிடுங்கித் தின்றது. எழுந்து ஓடிவிடலாமா என்றுகூட எண்ணினான். ஆனால் அதற்குள் ஸரஸி வந்துவிட்டாள். அவன் கையில் மரப் பெட்டியைக் கொடுத்துவிட்டுக் கம்மென்று நின்றாள்.

"இப்படிச் செய்வது சரிதானா, ஸரஸி? நீயே யோசித்துப்பார்?" என்றான் ரவி.

"இது உங்களுடையதுதானே!" என்றபொழுது அவள் முகத்தில் கூச்சமென்பதே சற்றும் புலனாகவில்லை.

* * * *

சீமைக்குச் சென்ற புதிதில் அவன் மன உறுதியுடனேயே இருந்தான். தான் செய்த குற்றத்துக்கு நூறுமடங்காக பிராயச்சித்தம் செய்வதென்று தீர்மானித்தான். இந்தியாவின் எண்ணம் வரும்போதெல்லாம் கூடவே ஸரஸியின் முகம் அவன் மனக் கண்முன் தோன்றும்.

ஆனால் எத்தனை நாளைக்குத்தான் அப்படி இருக்கும்! புதிய வாழ்வு; புது நண்பர்கள்; புதிய உணர்ச்சியில் அவனுடைய உறுதி எங்கேயோ அடித்துக்கொண்டு போய்விட்டது. சீமைக்குப் போனதும், தன் குற்றத்தை ஒப்புக்கொண்டு, ஸரஸியின் அப்பாவுக்கு ஒரு கடிதம் எழுதினான். அதற்குப் பதிலாக அவருடைய மரணச் செய்தி எட்டியது. அப்புறம் அவனுக்குக் கடிதம் எதுவும் வரவில்லை. அவனும் எழுதவில்லை.

சீமையிலிருந்து திரும்பியதும், பழைய நினைவு வந்தது: அவர்களைத் தேடியதில் பலன் ஒன்றுமில்லை. பழைய நினைவை எண்ணிக்கொண்டு, எத்தனை நாட்கள் இருக்க முடியும்? அவனோ இளம் வயதினன். வாழ்வில் பல புதிய முகங்கள் அறிமுகமாயின.

இதற்குள் ஒருநாள் எதிர்பாராத விதமாக அவர்களைப் பற்றிய விஷயம் அவனுக்குத் தெரிந்தது. பத்திரிகையில் ஒரு வழக்கு விவரம் வீட்டுச் சொந்தக்காரன் வீட்டு வாடகை கேட்கப் போனவனை தெருவில் சிலர் அடித்துத்துரத்தியதாக வாதித்தான். தெருவில் அவனை அடித்தவர்களோ அனாதை விதவை ஒருத்தியை அவன் அநியாயமாக வையவேதான் தாங்கள் செய்தோம் என்று தெரிவித்தனர். அந்த விதவையின் பெயருடன் அவளுடைய காலஞ்சென்ற புருஷனின் பெயரும இருந்தது. அவன் உள்ளூர வேதனையடைந்தான்.

அதே பெயருடன் எத்தனையோ பேர் இருக்கலாம் என்று அவன் நிம்மதியடைந்திருக்கலாம். ஆனால் அவர்கள் தானோ என்னவோ என்றது அவன் உள்ளம். விஷயம் தெரிந்ததும், அவன் மன நிம்மதி இராமல் அலைந்து அந்தத் தெருவையும் கண்டுபிடித்து விட்டான். ஆனால் கதவைத் தட்ட அவன் கை கூசியது. தயக்கத்துடன் இரண்டு நாட்கள் அலைந்துவிட்டுத் திரும்பினான்.

* * * *

இன்று எப்படியாவது கதவைத் தட்டுவதென்றே அவன் உறுதியுடன் வந்திருந்தான். கூச்சப்படுகிற சமயமா இது! அம்மாமி எப்படி இருக்கிறாளோ? ஒருநாள் கழிவது எவ்வளவு கஷ்டமாக இருக்கிறதோ அவர்களுக்கு? யார் கண்டது?

மெல்ல நடந்து அவன் அந்த வீட்டின் எதிரே வந்து நின்றான். கதவைத் தட்டவேண்டியதுதான் பாக்கி.

"அப்பா! இத்தனை நாள் கழித்தாவது தயவு வந்ததே!" என்றவாறு மோட்டாரிலிருந்து இறங்கி வந்தார் ஒருவர்.

வேலைக்காரன் பங்களாவின் கதவைத் திறந்தான். ஆவலுடன் ரவியின் கையைப் பிடித்துக்கொண்டு அவர், "வீட்டைக் கண்டு பிடிக்க இவ்வளவு சிரமப்படுவாய் என்று நினைக்கவில்லை. அந்த வீட்டில் இருக்கும் போது மூன்று மாதத்துக்கு ஒரு முறையாவது உன்னைப்பார்க்க முடிந்தது" என்றார்.

ரவியால் வாயைத்திறக்கக்கூட முடியவில்லை.

"நல்ல சமயத்தில் வந்தேனே, இல்லாவிட்டால் இன்னும் ஒரு வருஷத்துக்கு உன்னைப் பார்க்க முடியுமா? லீலா அன்று உன்னை சினிமாவில் பார்த்தாளாம். உனக்குப் பொழுதில்லை வீட்டுக்கு வர. சினிமாவுக்குப்போக மட்டும் பொழுது அகப்படும். இல்லையா! ஊம்......சற்று உட்கார், வருகிறேன்."

அவன் பங்களாவின் இரண்டாவது மாடியில், திறந்த வராந்தாவில் உட்கார்ந்திருந்தான். இன்னும் பலர்கூட இருந்தனர். ரவி அவர்களுடன் பரிகாசமாகச் சிரித்துப் பேசிக்கொண்டிருந்தான். வராந்தாவிலிருந்து எதிர்வீடு நன்றாகத் தெரிந்தது. ஒரு விதவையின் முனகல் கேட்கிறதல்லவா? இன்னொரு பெண் முகவாட்டத்துடன் உள்ளே காரியம் செய்வது கூட அவன் கண்களில் படாமல் போகவில்லை.

ஆனால், அதையெல்லாம் பார்க்க அவகாசம் ஏது? பொன்னிற வெயிலில் லீலாவின் உடை அபூர்வமாகத் தோன்றுகிறது. தொலைவில் தெரிகிறதே மேகம், அது அவளுடைய புடவையின் நிறத்தைத்தான் திருடிக்கொண்டிருக்க வேண்டும்.

வானத்தில் ஒளிரும் தாரகை போல் இருக்கிறதே அவள் முகம், இத்தகைய பெண்ணின் பக்கத்தில் உட்கார்ந்து இருக்கும் சமயத்தில் பழைய நினைவுகள் எழுமா?

"இவ்வளவு நாள் கழிந்துவிட்டதே! இன்னும் ஒருநாள்தான் போனால் என்ன! நாளைக்குக்கூட விசாரிக்கலாம் என்றது அவன்உள்ளம். இதுதானே உலக இயல்பும்.



மனைவி :— சகுனம் பார்த்து வெளியிலே கிளம்புங்கோ! குறுக்கே பூனை, இனை வரப் போறது......"

"சுதேசமித்திரன்"
வாரப்பதிப்பு

சந்தா விவரம்
(சந்தாவை முன்னதாகக் கட்டவேண்டும்.)

	இந்தியா, சிலோன்	வெளிநாடு
1-வருஷம்	13 0	18 0
6-மாதம்	7 0	9 8
3-மாதம்	3 12	5 0

தனிப்பிரதி அணா 4
3-மாதத்திற்குக் குறைந்து சந்தா ஒப்புக்கொள்ளப்படமாட்டாது.
மானேஜர்,
"சுதேசமித்திரன்" ஆபீஸ்,
மவுண்ட்ரோட், மதராஸ்.



வரகூர் வேங்கடதாஸன்

இதற்கு முன்

"உக்ரோதயம்" என்பது, ஓர் அதிசய நாகரத்ன மாலையின் பெயர். அம்மாலையை அணிந்தவள் 'பூஸுந்தரி' என்பவள். கங்கநாட்டரசன் சிவமாறன் என்பவனின் புதல்வி பூஸுந்தரி. அவளையும் அம்மாலையையும் அடையவேண்டும் என்று உறுதிகொண்டான் பாண்டியன் ராஜஸிம்மன். பூஸுந்தரியைப் பாண்டியனுக்குக் கொடுக்க மறுத்தான் சிவமாறன். அது காரணமாகப் போர் மூண்டது.

போரில் ராஜஸிம்மனிடம் தோல்வியடைந்தான் சிவமாறன். உடனே தன் புதல்வி, புதல்வர்களுடன் பல்லவ நாட்டின் தலைநகரான காஞ்சியை அடைந்தான். பல்லவன் உதவிபுரிவதாக வாக்குறுதி அளிக்கின்றான். திடீரென்று பல்லவன் மரணமடைகிறான். அவனுக்குப் பின் அரசாளச் சந்ததி இல்லை.

ராஜவம்சத்து நந்திவர்மனும், பல்லவனின் கணிகை மகனான சித்திரமாயனும் அரசாட்சிக்குப் போராடுகிறார்கள். நகரமக்கள் சபை கூடுகிறது. அதில் நந்திவர்மன் அரசனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டான். இதனால் சித்திரமாயன் பகை கொண்டு நாட்டை விட்டோடி பாண்டியனை அடைகிறான்.

இந்நிலையில், சிவமாறன் பூஸுந்தரியை நந்திவர்மனுக்கு மணம் புரிவிக்க முற்படுகிறான். அவள் மறுத்து பாண்டியனை விரும்புகிறாள்; அவள் சகோதரர்களான வல்லபன், குணபரன், இருவரும் பூஸுந்தரியைப் பாண்டியனுக்குக் கொடுக்க விரும்பி பாண்டியனுடன் போகிறார்கள்.

பூஸுந்தரியை அடைய விரும்பிய நந்திவர்மனும் அவளால் அவமானம் அடைகின்றான்.

எனவே, பாண்டியன் படைகளுடன் காஞ்சியை முற்றுகையிடுகிறான். போருக்குப் புறப்பட்டுக் கடும்போர் செய்கிறான் நந்திவர்மன். பல்லவ-பாண்டியப் போரில் பாண்டியனுக்கு உதவிபுரிய வந்த சளுக்கிய விக்கிரமாதித்தனை அநிருத்தர் சூழ்ச்சியால் சமாதானப்படுத்தி, அவனை நாடு திரும்பச் செய்கிறார். போர் நடக்கின்றது. நந்திவர்மன் தனிப்படையுடன் சென்று தானுரவியின் உபாயத்தினால் பாண்டியனைமட்டும் சிறைப்படுத்தி விடுகின்றான். அவனை மீட்க வந்த சேனாதிபதி மாறன்எயினனும் சிறைப்படுகின்றான்.

63

'நினைவிழந்தாள்'

மல்லரங்கம் 'கல்'லென்று ஒலி கிளர்ந்து தோன்றியது. மல்லரங்கில் உருண்டு கிடந்த மன்னன் பல்லவ மல்லனைக் கண்டு சபையோர் ஆவலம் கொட்டி எழுந்து நின்றார்கள்; சிவமாறப்பிரபுவும் ஹிரண்யவர்மரும் ஓடிச் சென்று பல்லவ மல்லனைத் தொட்டுத் தூக்கினார்கள். முத்தரையனும் உதயசந்திரனும் பல்லவ மல்லனின் தோள்களைத் தாங்கிக் கொண்டார்கள்; தானுரவியின் கண்கள் கலங்கின. அநிருத்தர் சிறு நகையால் நந்திவர்மனை நோக்கினார்.

மன்னவனைத் தோளோடு தோளாகச் சேர்த்துக்கொண்டு மஞ்சத்தில் அமர்வித்து பனி நீர் தெளித்து மூர்ச்சை தெளிவித்தார்கள்.

சில கணங்கள் சென்றன. சபையில் ஆரவாரம் பெருகியது. ராஜஸிம்மனைப் பார்த்துப் பார்த்துப் பதை பதைத்தார்கள் பல்லவ ராஜ்ய பிரதானிகள்.

அநிருத்தர் பாண்டியனை அணுகினார்.

"ராஜஸிம்மா!...நீ வெற்றியடைந்தாய்! உக்ரோதயம்' உன்னைத் தேடி வருகிறது பெற்றுக்கொள். ஆனால் நீ சிறைப்பட்டவன்" என்று கூறிவிட்டு உக்ரோதய மாலையை அவனிடம் கொடுத்தார்.

பாண்டியன் நகையொளியுடன் அம்மாலையை வாங்கிக்கொண்டான்:

"மாலை என்னை அடைந்துவிட்டது; பல்லவ மல்லனின் தோல்வியை விளக்கம் செய்த மாலை என்னை அடைந்துவிட்டது. ஆனால்—' என்று கூறிக்கொண்டேயிருந்த குதூகலத்துடன் மாலையை மார்பில் அணிந்து கொண்டான்.

அந்தக்காட்சியைக் கண்ட அனைவரும் வியப்பால் பேச்சு மூச்சற்று நின்றார்கள்.

அப்போது சிவமாறப்பிரபு மிக வேகமாக அநிருத்தருக்கு முன் ஓடி வந்தார்.

"அநிருத்தரே,...இது என்ன காரியம்? உம்முடைய வேந்தரின் நிலையைக்கண்டும் நீர் இப்படிச் செய்வது நேரல்ல! பல்லவனிடம் அபிமானம் கொண்டவரா நீர்? உம்முடைய செய்கையில் இங்குள்ளவர்கள் சந்தேகம் கொண்டுள்ளார்கள். இதனால் என்ன நேருமென்பதை நீர் அறியவில்லை!" என்று கடுங்குரலில் கூறினார்.

அநிருத்தர் மறுமொழி கூறுவதற்கு முன்பு, பாண்டியன் வெடிநகை செய்தான் சிவமாறனைப்பார்த்து.

"கங்கராஜஸிம்மரே, ஏன் இன்னும் கவலை? நான் சிறைப்பட்டவன். என்மீது இன்னும் கவலையா? என்னிடம் பயமா?—" என்றான்.

கடுமை தோன்ற, பாண்டியனைப்பார்த்தார் சிவமாறப்பிரபு. அவர் உடலம் நடுங்கியது.

"உன் எண்ணம் யாவும் கனவு என்பதை நீ இன்னமும் உணரவில்லை;, பேடிபோல் சிறைப்பட்ட நீ,...மல்லயுத்தத்தில் வெற்றியடைந்ததால் என்ன அடைந்துவிட்டாய்?......உன் அழிவை வரவேற்பதென 'உக்ரோதய' மாலையை ஏற்றுக் கொண்டுள்ளாய்!...பார்......இனி நடப்பதை!" என்று கூறிவிட்டுச் சட்டென்று நந்திவர்மனை நோக்கி அணுகினார்.

அநிருத்தர் நகைத்தவண்ணம் சொல்லலானார்: 'சிவமாறப்பிரபு, உம்முடைய கோபமும் நினைவும் பயனற்றவை! வீணாக ஏன் விபரீத யோசனைகளைச் செய்யவேண்டும்?....வேண்டாம். மன்னன் கட்டளைக்கு இணங்கவே யாவும் நடக்கும்:......" என்று கூறிக்கொண்டே நந்திவர்மனை அணுகினார்.

நந்திவர்மன் மூர்ச்சை தெளிந்தான்; நினைவு பெற்றான். நிலையை அறிந்தான். நெடும் பெருமூச்செறிந்தான். உறக்கத்தில் கண்ட கனவுபோல் யாவும் அவனுக்குத் தோன்றியது. கணத்துக்குக் கணம் பெருமூச்சுவிட்டான்.

சபை முழுவதும் நந்திவர்மனின் தோற்றத்தைக்கண்டு சிந்தனையில் ஒன்றியதுபோல் தோன்றியது. நந்திவர்மனின் சிந்தையில் ஒளி புரண்டோடியதுபோல, மல்லரங்கில் ஒரு கொடி மின்னல் நெளிந்து ஓடியது.—அந்தக்கொடி மின்னல் உணர்ச்சி வீறுடன்—உள்ளப் பெருக்குடன் பாண்டியனை நோக்கி ஓடியது; ஓடிய கொடி மின்னல் கங்க கன்னிகை—என்ற பூஸுந்தரியேதான்.

அவள் நினைவு ஒன்றிப்போன உருவத்தை நோக்கியே அவள் உடலும் சென்றது; சிந்தை வழியே செயலும் செல்லுமல்லவா?—

'வெறிகொண்ட பேதையர் இவள்?'—

"பிரபுதேவ, இதோ என்னைத் தங்களுக்கு உரிமையாக்கிக் கொண்டேன்; என் பிறவிக்குப் புண்யகதியாக விளங்கும் இப்பாதங்களுக்குப் பணி புரிகின்றேன்." என்று தழுதழுத்த குரலில் கூறியவளாய்ப் பூஸுந்தரி பாண்டியனின் பாதங்களில் தலை பணிந்து கண்ணீர் துளிக்கத் தழுவிக்கொண்டாள் — உள்ளத்தையும் உடலையும் ராஜஸிம்மனுக்கு உரிமையாக்கினாள்.

மண்டியிட்டமர்ந்து, பாதங்களைக் கண்ணீரால் தழுவிக் கொண்ட ராஜகுமாரியைப் பாண்டியன் சரேலென்று இரு கைகளாலும் தொட்டுப் பெருமூச்சுடனும் பெரும் பதற்றத்துடனும் தூக்கினான்.

முகமும் முகமும் நோக்க நின்றார்கள் இருவரும். லட்சிய சித்தி பெற்ற இருவர் விழிகளும் மயங்கின—இன்பக்களிமயக்குடன்.

"அன்று கண்ட கடைசி வந்த விழிகளே இன்றும் கண்டேன், என் உயிர் பூரிப்படைகிறது;... ஆனால் இன்றுதான் உன் மென்மலர்க் கரங்களின் இன்பம் கண்டேன்; என் உடல் குளிர்ந்து வெந்துவிட்டது..." என்று களிமொழிகளால் பேசினான் பாண்டியன்.

அவன் விழிகளிலும் அவள் விழிகளிலும் இன்பக் கண்ணீர்த் துளிகள் சிதர்ந்து வழிந்தன. அவ்விருவரும் அங்குள்ள நிலையைச் சிந்திக்கவில்லை. உலகத்தையே மறந்து இருவரும் ஒன்றாகி நின்ற அப்போது, அவர்களுக்கு மல்லரங்கைப்பற்றிய நினைவே இல்லை. அவ்விருவரும் பேசிய பேச்சுக் குறைவேதான். ஆனால் ஊழி ஊழியாக அவர்கள் இடையீடின்றி ஒன்றாக நிற்பதென நின்றார்கள்; ஆம்—தெய்வீகக் காதலர்களே அவர்கள்—அவர்கள் காதல் அழிவில்லாதது!

ஆனல்—

நினைவழிந்திருந்த இருவரையும் சூழ்ந்து நின்ற கூட்டத்தை அவர்கள் கவனிக்காதது—அவர்கள் குற்றமா?—

மல்லரங்கம் ஒருகணம் கலங்கியது: நிலம் அதிர்ந்தது. பல்லவ மல்லன் உக்கிரமான தோற்றத்துடன் நின்றன். கட்டளையிட்டான் வீரர்களுக்கு :

"என்னை அவமதித்த பாண்டியனையும், அதோ நிற்கும் சேனுதிபதியையும் விலங்கிட்டு உடனே சிறைக்கோட்டம் கொண்டுபோங்கள் :......பேடி !......சித்ரமுகி, நீ உடனே இந்த—வெறிகொண்ட ராஜகுமாரியை அழைத்துச்செல். —விரைவில்!—"

இவ்விதம் கட்டளையிட்டான்.

'பொருக்'கென மல்ல வீரர்கள் பாண்டியனையும், மாறன் எயினனையும் சூழ்ந்துகொண்டார்கள். சித்ரமுகியும், மற்றப் பேடிப் பெண்களும் ஓடிச்சென்று கங்க கன்னிகையைப் பிடித்துக்கொண்டார்கள். மறு கணமே பூஸுந்தரி நினைவிழந்தாள்.

(தொடரும்)



நில்லஸ்தானம் ராஜகோபால அய்யங்கார் குமாரத்தி சௌ. கமலவல்லிக்கும் கல்யாணபுரம் கிருஷ்ணஸாமி அய்யங்கார் குமாரன் ஸி. பி. கே. சீனிவாஸனுக்கும் நில்லஸ்தானத்தில் சமீபத்தில் விவாஹம் நடந்தேறியது.

முதல் மகா யுத்தத்திற்குப் பின்னர் ஏற்பட்டதுபோல் இத்தடவையும் பொருளாதாரக் குலைவு ஏற்படாமல் தடுக்க வேண்டுமென அமெரிக்க காங்கிரஸில் வற்புறுத்திய லியான் ஹெண்டர்ஸன். பிரசங்க முடிவில் உணர்ச்சி வசப்பட்ட ஹெண்டர்ஸன் கொண்ட கோலத்தை தான் படம் பித்தரிக்கிறது!

ராயம்பேட்டை ஸ்ரீ. எஸ். லக்ஷ்மி நரஸிம்ம அய்யங்கார் குமாரத்தி சௌ. வேதவல்லிக்கும், பம்பாய் பிரஸ் போட்டோ ஏஜண்ட் கே. ரங்கசாமியின் குமாரன் ஸ்ரீ ஆர். பார்த்தசாரதிக்கும் சமீபத்தில் விவாஹம் நடந்தேறியது.

புகழ்

லக்ஷ்மி கிருஷ்ணமூர்த்தி

பெயரும் புகழுமாக இருப்பதென்றால், எல்லோருக்கும் ஆசையாகத்தான் இருக்கும். புகழடைந்தவரென்றால், சாமானியமா? பத்திரிகைகள் அவரைப்பற்றித் தலையங்கம் எழுதும். அவர் திருமொழிகளைப் பிரசுரிக்கும். மாலைகள் போடுவார்கள், படங்கள் எடுப்பார்கள், ஹோட்டல் திறப்பு விழாக்கள், பால்காரர் மகாநாடுகள், பொதுக் கூட்டங்கள், மிஸ். பாலாமணியின் நாட்டியக் கச்சேரி எல்லாவற்றுக்கும் அழைப்பார்கள். எல்லார் நாவிலும் அவர் பெயர் அடிபடும். ஆனல், இந்த திராட்சையும் புளிக்கும் என்று கூறுபவர்களும் இருக்கிறார்கள். புகழின் மதிப்பு வெவ்வேறு சமயங்களில் வெவ்வேறு விஷயங்களைப் பொறுத்திருக்கிறது. எல்லாப் புகழும் ஒரே தரமானவை என்று சொல்வதற்கில்லை என்கிறார்கள் அவர்கள். இது உண்மையாகவும் இருக்கலாம், அல்லாமலும் இருக்கலாம். ஆனல், கீர்த்தி அடையாதார்தான் பெரும்பாலும் புகழை ஏளனம் செய்கிறார்கள். புகழ் அடைந்தவனே தான் பெற்ற ஸ்தானத்திற்கு ஏறி வந்த ஏணியை இகழ்வது அபூர்வமல்லவா? ஆங்கில நாடகாசிரியர் பெர்னுட் ஷா தன் 'விசிறிகளை' நையாண்டி செய்வது வாஸ்தவமே. ஆனல், அப்பொல்லாத மனிதர் அப்பொழுதும் தன் புகழை மறப்பதில்லை. கூட்டங்களின் கரகோஷத்தைப் பற்றி G. B. S.க்கு என்ன சொந்த அபிப்பிராயங்கள் இருந்தபோதிலும் தன் வார்த்தைக்கு இருக்கும் 'செய்தி விலையை' அவர் நன்கறிவார்.

புகழின் மதிப்பு சமய சந்தர்ப்பத்திற்கேற்ப இருப்பதால் அது உபயோகமற்றது என்று சொல்லிவிட முடியாது. சூரியன் அரசன் மீதும் ஆண்டி மீதும் ஒன்றுபோல் பிரகாசிக்கிறன். ஆகையால், சூரிய வெளிச்சம் ஒரு சல்லி பெருது என்ற அர்த்தம்? புகழின் உண்மையான அர்த்தத்தை விட்டு அதை மிகைப்படுத்தி மதிப்பிடுவதுதான் நாம் செய்யும் தவறு. கீர்த்தியை ஏதோ நற்சாட்சிப் பத்திரமாகக் கருதுகிறோம். மேலும், புகழ் பெற்ற சகலருக்குமிடையே ஒரு பொது அம்சம் இருக்கவேண்டும் என்ற நிர்ப்பந்தம் இல்லை என்றறிய கோபமடைகிறோம். லோகத்தில் நற்குணம் ஒன்றுக்குத்தான் புகழ் கிட்டுமென்பதில்லை; அல்லது ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட அளவு நல்லவராக இருந்தால் அவரைப் புகழ் தானே வந்தடையுமென்பதும் இல்லை. ஒரு ஹிட்லரையோ, ஒரு ஜின்னவையோ கொலை செய்யத் துணிந்தவனும் கியாதி அடைகிறன். மேதையான ஆசிரியை ஒருத்தி இருளில் மங்கிக் கிடக்கும்போது, அழகான வேறொருத்தி—அவள் எழுதுவது எப்படி இருந்தபோதிலும்—புகழின் சிகரத்தைத் துரிதமாக எட்டியிருக்கிறள்.

கீர்த்தி பெற்றாலும் ஒருவருடைய பிறவிக் குணம் மாறுவதாகத் தோன்றவில்லை. சுபாவத்தின் பெருந் தன்மையால் அல்ல ஒருவர் புகழ் பெற்றது என்றால், வந்து சேர்ந்த புகழ் அவருக்கு நிரந்தரமான பெருந் தன்மையை அளிப்பதும் இல்லை. புகழ் கிட்டுவதற்கு முன்பும், பின்பும் ஒரு மாதிரியேதான் மனிதர்கள் இருக்கிறார்கள். உண்மையாதெனில், புகழானது, யதேச்சையாக நேரிட்ட ஒரு நிலையே தவிர, முன் கூட்டியே வகுத்த திட்டத்தினல் கிட்டிய காரிய சாதனையல்ல. ஒரு தனி நபரிடம் உலகம் நடந்துகொள்ளும் விதமே தவிர, அவர் உலகம் உய்யச் செய்யும் தொண்டல்ல.

இதன் தாத்பர்யம் விளங்க ஒரு உதாரணம் தருகிறேன். அமெரிக்காவில் இவ்வாண்டு 'தி இயர்லிங்' (The Yearling) என்னும் நவீனம் பிரசித்தியடைந்து; சினிமாவாகக் கூட எடுக்கப்பட்டிருக்கிறது. படத்தின் கதாநாயகனை ஒரு சிறுவனும், அவனுடன் நடித்த மான் குட்டியும் ஒரு புஸ்தகப் பிரசுராளர் அளித்த விருந்தின் பிரதான விருந்தாளிகளாக வந்திருந்தனர் என்று ஒரு அமெரிக்கப் பத்திரிகையில் பார்த்தேன். அமெரிக்காவில் புத்தக விற்பனையாளரோ அல்லது பிரசுரகரோ பிரபல எழுத்தாளர்களையும், வாசகர்களையும் விருந்துக்கழைப்பது வழக்கம். விருந்துக்கு வந்திருக்கும் ஆசிரியர்கள், அங்கு விற்கப்படும் தங்கள் புத்தகங்களில் கையொப்பமிட்டுத் தருவார்கள். அதேபோல் இந்த விருந்தில் கலந்துகொண்ட சிறுவனும், மானும் 'தி இயர்லிங்கின்' ஒவ்வொரு பிரதியிலும் கையொப்பமிட்டனராம். அம் மான் தன் குளம்பை மைத்தாளில் தோய்த்து, காயிதத்தில் காலை அழுத்தி எடுத்ததாம்.

பாவம், மான்குட்டி, புகழடைந்ததற்குச் சரியான தண்டனையை அனுபவித்திருக்க வேண்டும். அதை சர்வஜாக்கிரதையாகவும் அதிபக்ஷமாகவுமே நடத்தியிருப்பார்கள். S. P. C. A.க்காரர்கள் குறைகூற இடமிருந்திராது. இருந்தாலும், எப்படித்தான் அந்த மான் தன்னைக் காண வந்த இரு கால் பிராணிகளை இரண்டு மணி நேரம் அன்றும், அப்பால் பல புத்தகக் கடைகளிலும் பொறுத்துக்கொண்டிருந்ததோ. புகழுடைய மனிதர்களின் செய்கையே எல்லா சமயங்களிலும் முக்கியமானது என்று கூறிவிட முடியுமா? அநேக சமயங்களில் கீர்த்தியானது அவர்கள் மீது திணிக்கப்படுகிறது, இந்த மான் குட்டியைப்போல. ஆனல், இதற்கு நேர் மாருக, புகழுடைய நீங்கள் பாடுபட்டது போக, புகழடைந்த பின் அது உங்களைப் படுத்தும் பாடுதான் அதி முக்யமானது. புகழின் பாதையைவிட, அதை அடைந்த பின்னர் ஏற்படும் நிலைதான் கடினமானது. கீர்த்தி உங்களிடம் எதிர்பார்க்கும் குணங்

களையெல்லாம் திருப்தி செய்ய வேண்டுமானால் உங்கள் பொறுமைக்கும், கஷ்டங்களைத் தாளும் சக்திக்கும் அது ஒரு பெரும் பரீட்சையாகும்.

புகழடையப் பிரயாசைப்பட்டவர்களுக்கு அதன் பலா பலன்கள் இனிமையாகவே இருக்கலாம். சில விளைவுகள் அவர்களுக்கு அசௌகரியமாகவே இருந்த போதிலும், அவர்கள் முணுமுணுக்க இடமில்லை. தாங்களாகவே வேண்டுமென்று வாங்கிக் கட்டிக்கொண்டதுதானே? பெரும் ஆற்றலுடைய அமெரிக்கர் எப்படி சிநேகம் பிடிப்பது, தாம்பத்ய வாழ்க்கையைச் சிறப்புற நடத்துவது, நல்ல பெற்றோராக இருப்பது என்ற விஷயங்களைப்பற்றிப் புத்தகம் எழுதியிருப்பதுபோல், எப்படிப் புகழடைவது என்றும் எழுதியிருக்கிறார்கள். புகழடைந்தே தீருவேன் என்று இப்படி சங்கல்பம் செய்துகொண்டிருப்பவர்களுக்குப் புகழினால் ஏற்படும் கஷ்டங்களே அவர்களுடைய முயற்சியின் பெரும் பயனாகத் தோன்றும். எப்பொழுதும் பொது மக்களின் கண்காணிப்பிலேயே வாழ்க்கை நடத்துவது அவ்வளவு எளிதல்ல. இப்படி சர்வ நேரமும் பிறருடைய திருஷ்டியிலேயே இருப்பதனால், புகழடைந்தவரிடம் ஏதாவது குற்றங் குறை கண்டுபிடிக்கப்படுகிறது. கீர்த்தி, அபகீர்த்தியில் முடியாமல் இருப்பதே பெரிய காரியமாகிவிடுகிறது. ஆதலால், சங்கோசிகளும், பயந்த சுபாவமுடையவர்களும் புகழிடமிருந்து தப்புவதற்கு ஆசைப்படுகிறார்கள்.

அப்படியானால் புகழ் மிகவும் தொந்தரவானது என்று முடிவு கட்டிவிட முடியுமா? அதுதான் இல்லை. நீங்கள் எங்கு சென்றாலும், நாலு தலைகள் உங்களைக் கண்டு திரும்புவதும், அடையாளம் கண்ட கண்கள் பிரகாசிப்பதும், கண்கள் கண்டதை வாய் ரகசியமாகத் தெரிவிப்பதும் பெருமை தரும் அனுபவங்களல்லவா? அல்ப சுபாவமுடைய மனிதரிடையே புகழின் முதல் ருசியே போதை அளித்துவிடும். ஆனால், சாதாரண மனிதர்களில் அநேகருக்கு, சதா தங்கள் அந்தரங்க வாழ்விலும் குறுக்கிட்டு, ஓய்ச்சல் ஒழிவில்லாமல் வேலை வாங்கும் பொது வாழ்வானது வெகு சீக்கிரத்தில் கசந்துவிடும் காலமும் வந்துவிடுகிறது.

பண்டித ஜவாஹர்லால் நேருதான் ஒரு ஊருக்கு வருகிறாரென்றால் ஜனங்கள் அவர் நினைவுக்காக அவருடைய சட்டைப் பித்தான்களையெல்லாம் பிய்த்துக்கொண்டு விடுகின்றனர். இப்படி அவர்கள் தன்னைப் பிடுங்கும்போது பண்டிட்ஜீ நாமடைந்திருக்கும் புகழுக்கு இது அபார விலைதான் என்று மனக்கணக்குப் போட்டிருப்பார்.

புகழின் மதிப்பு சிற்சில காரணங்களைப் பொறுத்தே இருந்தாலும், அது விலையில்லாததல்ல. இப்படிப்பட்ட புகழ் அர்த்தமற்றது என்றும் கூறுவதற்கில்லை. நாம் முன் பார்த்ததுபோல் கியாதியானது நற்சாட்சிப் பத்திரமுமல்ல. காரிய சாதனையின் அளவுமல்ல. ஒரு நபரிடமோ, பொருளிடமோ இருக்கும் ஏதோ ஒன்று மக்களின் கருத்தைக் கவர்ந்திருக்கிறது என்பதையே இது குறிக்கிறது. பொது மக்களின் கவனம் அநேக விஷயங்களில் லயித்துவிடுகிறது புகழுக்கு உரியவை, உரியனதல்லாதவை என்று பேதமில்லாமல். ஆகையால், இன்ன இன்னதுதான் புகழடையும் என்று நாம் திட்டமாகச் சொல்ல முடியாது. வினாடிக்கு வினாடி மாறிக்கொண்டிருக்கும் ஜனங்களின் மனம் இன்று புரியாத புதிராயிருக்கும் பெர்னாட்ஷாவிடம் லயித்திருக்கும். நாளை ஒரே சமயத்தில் ஐந்து குழந்தைகளாகப் பிறந்த டயான் க்வின்டப்ளெட்ஸின் அழகில் ஈடுபட்டிருக்கும். ஷாவும்தான் பிரபலமாயிருக்கிறார். டயான் சகோதரிகளும்தான் பிரபலமாயிருக்கிறார்கள். ஒருவர் தன் எழுத்துத் திறமையாலும், நாவன்மையாலும் புகழடைந்தாரென்றால் மற்றவர் குழந்தைப் பருவத்தில் உயிர் தரிக்கமுடிந்ததாலேயே பெயர் பெற்றவர்களாகி விட்டார்கள். இவர்களிடையே எந்த அம்சம் பொதுவாக இருக்கிறது என்று கண்டுபிடிப்பது கடினம். அதனால்தான் வாழ்க்கையே அர்த்தமற்றது என்று சொல்லும் சிலர் கீர்த்தியும் அர்த்தமற்றதே என்று வாதிக்கிறார்கள்.

இவ்விருவருக்கும் பொதுவாக உள்ள விஷயமே கிடையாது. அது இல்லாதபோது தேடுவதே நாம் செய்யும் பிசகு. பொதுவானதொன்றைக் கண்டுபிடிக்க முற்படவும் கூடாது. ஒப்பிட முடியாத விஷயங்களை ஒப்பிடுவது முட்டாள்தனமல்லவா? பெர்னாட்ஷாவுக்கும் டயான் சகோதரிகளுக்கும் புகழைத் தவிர, பொதுவானதாக வேறொன்றும் கிடையாது. பார்க்கப்போனால், முன்னவரைவிட பின்னவருக்குத்தான் புகழின் அளவு அதிகம். அவ்விருவரும் சிருஷ்டி விசித்திரங்களாதலால், நமக்கு வியப்பூட்டுகின்றனர். புரிந்துகொள்ள முடியாததொன்றைக் கண்டு, பொது ஜனம் வாயைப் பிளக்கிறது. புகழானது அனேக சந்தர்ப்பங்களில் ஆழமறிய முடியாததொன்றுக்கு அறிவீனர்கள் செய்யும் துதியேயாகும். ஆனால், இது காரணம் பற்றிப் புகழ் தேடி அலைபவர்கள் என்னமோ சும்மா இருக்கப்போவதில்லை. நம்மில் பெரும்பாலோர்க்குப் பிறர் நம்மைப் புரிந்துகொள்ளா விட்டாலும், அறிந்துகொள்ள வேண்டுமென்பதே.

—::—

நஞ்சன்கூடு பல்பொடி பாக்டரியாரின்
I.D.L 78 Koolex TRADE MARK
கூலெக்ஸ்
உஷ்ண சமன தைலம். உஷ்ண காலத்துக்கு உகந்தது
குடும்பத்திற்கு அவசியமானவை
காஸ்மஸ் கஸ்தூரி
கர்ஜன் கோரோஜன
பாலக்ஸ் பேதியாக
COPYRIGHT
எஜெண்ட்: யுனைடெட் கன்ஸர்ன். 54. பந்தர் தெரு. மதறாஸ்